# அண்மைக்கால புதிய வரவுகள்



கலாபூஷணம்
உடப்பூர் வீரசொக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மைக்கால புதிய வரவுகள்

(இரண்டாயிரத்து பத்தொன்பது வெளிவந்த கவிதைத் தொகுதிகள் நூற்றாண்டு மலர்கள், சிறப்பிதழ்களின் பதின்னான்கு இதழ்களின் திறன் ஆய்வு நோக்கு)

கலாபூஷணம் உடப்பூர் வீரசொக்கன்

வெளியீடு:- இளம் தாரகை வட்டம் உடப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


நூலின் பெயர் :- அண்மைக்கால புதிய வரவுகள்

நூலாசிரியாரின் :- கலாபூஷணம் உடப்பூர் வீரசொக்கன்

நூல் வகை :- விமர்சனம்

முதல் பதிப்பு :- 2021.07.09

வெளியீடு :- உடப்பு இளம் தாரகை வட்டம்

அச்சிப்பதிவு :- Singhe parees chilaw

விலை :- 400%

ISBN NO :- 978-624-98680-0-7

Title :- anmaikkaala puthiya varavukal

Editor :- kaala poosanam udappu veera sokkan

Frist published :- 2021.07.09

published by :- young star club udappu

printed by :- singhe parees chilaw

price : - 400%




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை

சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள்)

(அந்த கனவுகளின் நினைவாக.....)

## சமர்ப்பணம்

என்னை

வளர்த்து


சான்றோனாக்கிய

என் தாயாருக்கு

இந்நூலை படையல்

ஆக்குகின்றேன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. தெரிந்த பெயர் அறியாத கவிதை புனைவுகள் (கவிஞர் இராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம்)

02. தெரிந்தும் தெரியப்படாத கவிஞர் பெரி.சோமாஸ்கந்தர்

03. மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கிய விழாமலர் - 2018

04. இரா அழகிரிசாமியின் ஸ்ரீ கல்யாண முருகன் திருஊஞ்சல் பாமாலை

05. முந்தல் சூரிய காந்தியின் கவிதைகள் (இரசணை குறிப்பு)

06. சித்தி பருத்தாவின் மலராத மொட்டுக்கள்

07. "றைஸாஹீனாவின் பொற்தூரல்..." தரும் புதுமை கவிகள்

08. பு/புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயம் நூற்றாண்டு சிறப்பு மலர் (100th) TELEBRATING

09. உடப்பூர் வீரசொக்கனின் பாக்கள் தரும் பூக்கள் (சிறுவர் பாடல்கள்)

10. உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலய கும்பாபிஷேக பெருவிழா – சிறப்பு மலர் காளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. இஸட் ஏ.சன்ஹிரின் "வித்தியாலயம்"
நூல் - ஒரு பார்வை

12. தென்றல் 50வது இதழ் ஒரு கண்ணோட்டம்

13. எல்ல.கே.ராம் ஜி உலகநாதனின் "கொழுந்தம்மா"
(சிறுகதை தொகுதியின் - விமர்சன நோக்கு)

14. உடப்பூர் வீரசொக்கனின் இரு தொகுதிகளின்
விமர்சன நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இதழியல் தொடல்பாடலோடு இடைவினை கொண்டு மேலெழும் உடப்பூர் வீரசொக்கனின் எழுத்தாக்கம், செய்தி அறிப்பு (Reporting) என்ற திறமையும், கட்டுரை வரைபு என்ற ஆக்கப் பரவலையும் செழுங்கலவை (BLEND) யாக்கும் செயல் வழியோடு மேலெழுகின்றன. வீரசொக்கனின் தனித்துவம் சொல்லாடலாகின்றது.

தமிழர் தொல் வாழ்விடமாகிய உடப்பூரின் ஆற்றலை எழுத்து வழியாக விசையூட்டி அறிபரவல் செய்யும் கலை ஆளுமை அவருக்கே உரிய தனித்துவமான செயல் நிலை இயக்கமாகின்றது. வாழ்விட வனைபு அவரின் எழுத்துக்களுக்குச் செறிவூட்டுகின்றது.

எழுத்து வழியான அறிய நிறுவல் மொழிவை (THESIS STATEMENT) முன்வைத்து வாசிப்பை வரன் முறையாக்கி நிமிர் நிலைப் படுத்தும் அவரது அளிக்கை ஆற்றல், இதழியற் புலத்திலிருந்து எழுகோலம் பெறுகின்றது. நேர் நிலைத் தகவலோடு எழுத்துக்கள் நீள்முகம் கொள்கின்றன.

இந்நூலில் உள்ள பன்மைத்துவ ஆக்கங்கள், வாசிப்பு நீட்சியையும் புலக்காட்சியையும் பலதளங்க ளுக்குக் கொண்டு செல்கின்றன.

எழுத்துத் துறையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் வீரசொக்கன் எழுத்தாக்கத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுபயன் பெறுமானங்களையும் (UTILITY VALUE) ஒன்றிணைந்து நிற்றல், அவரது சமூக நோக்கை

நீள்பரவல் கொள்ளச் செய்கின்றது. சமூக நோக்கு எழுத்தால் நிறைவிக்கப்படுகின்றது.

தற்கதிர்ப்பு (EGO) இல்லாத பொதுநோக்கு எழுத்துப் பணி, அவருக்கே உரிய தனித்துவமாகின்றது. எழுத்து வழியான அளிக்கை, மேடைப் பேச்சு, மரபுவழி அரங்கு வழியான ஆற்றல் ஆகியவற்றுக்கிடையே ஊடு தொடர்புகளை நிகழ்த்தும் அவரது தனித்துவம் உடப்பு வளநிலத்தின் பின்புலத்திலிருந்து மேலெழுகின்றது. பன்முக ஆற்றல் அவரிடத்தே குவிநில கொள்கின்றன.

வீரசொக்கனின் எழுத்துக்களில் உட்பொதிந்துள்ள "ஆற்றுப்படுத்தல்" விசை, வாசிப்புச் செயற்பாட்டைத் தொடர்ந்து தேடல் நிலைக்கு நகர்த்தும் வலுவேற்றத்தை வழங்கிய நிலையில் உள்ளது.

விரிநிலை வாசிப்போடு உறவாடி வருதல், எழுத்துக்களில் தேக்க நிலையற்ற மேலெழு விசையைக் கொடுத்தவண்ணமுள்ளது.

வீரசொக்கனின் எழுத்துப்பணி நீண்டு தொடர்ந்து நிரல் கொள்ள நட்புடன் இனிய வாழ்த்துக்கள்.



பேராசிரியர் முனைவர்

சபா.ஜெயராசா **M.A (ED)**
**PH.D.DLIT**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

ஒரு படைப்பாளியின் படைப்பு பற்றி விரிவான (ஆழமான) ஆய்வு திறனாய்வு எனலாம். சுருங்கச் சொல்லி (மேலோட்டமாக) விளக்குவது மதிப்புரை எனலாம். சுருங்கச் சொல்லி (மேலோட்டாக) விளக்கவது மதிப்புரை எனலாம். மதிப்புரை பக்கம் வரையறைக்கு உட்பட்டது. திறனாய்வுக்கோ, அத்தகைய கட்டுப்பாடு இல்லை. அனைவரும் புரிந்து கொள்வதற்காக எழுதுவது மதிப்புரை எனவே எளிமை சுருக்கம் அவசியமாகிறது. இலக்கியப் பயிற்சி மிக்கோரு க்காக விரிவாக அடிக்குறிப்புக்களுடன், விரிவுரை களுடன் திறனாய்வு எழுதப்படுகின்றது.

கே.எஸ்.சிவட புனையைப்பட்ட அண்மையில் வெளியிடப்பட்ட 2019 தொடக்கம் 2021 வரையும் உள்ளக்கால இடைவெளியில் மலர்ந்த புது வரைகளின் விமர்சன நோக்கே இத்தொகுப் பாடாகும்.

இக்காலப் பகுதியில் எம்பார்வைக்குப்பட்டு விமர்சனம் செய்யப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட கருத்துருவாக்கங்களை காய்தல் உவப்பன்றி வெளியப்பட்டன. அத்துடன் ஒரு புனைவுகளின் விமர்சன திறனாய்வுச் குறிப்பானது ஆரோக்கி யமான சிறந்த படைப்புக்களை முகிழ்வ செய்வதற்கு கால் கோளிடப்படுகின்றது.

இவ்வாறு தோற்றம் பெறும் படைப்புக்கள் இலக்கியமாக கூர்மை பெறும் கட்டுப்பாடற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வடிவங்கள் நுகரும் வாசகர்கள் அவை தகுதியான என்பதை தீர்மானிப்பாளர்களாக இருப்பார்கள். ஆனால் தற்போது படைப்பிலக்கிய துறையின் வளர்ச்சி என்றுமில்லாதவாறு விரிவடைந்து வருதை பார்க்கின்றோம்.

சமகால பிரசர வளர்ச்சி ஓட்டத்தில் தமிழர்கள் நிறைவாக வாழும் பகுதிகளைப் போலவே புத்தளம் மாவட்டத்திலும் புனைவு இலக்கிய வளர்ச்சியான முகிழ்ந்து நிற்பதுடன், அவ்வப் போது தமிழ், முஸ்லிம் ஆவர்முள்ளவர்களால் புனைவு இலக்கியத்துறையில் கால்பதித்து வருகின்றனர் என்பது யதார்த்தமே.

ஆனாலும் இப்பிராந்தியத்திலிருந்து வெளியிட ப்பட்ட படைப்புக்கள் வெளியுலகம் காணாத சங்கதிகளாக இருந்து வந்துள்ளது. இக்குறை நீக்கப்பட்டு ஏதே ஒரு கையில் அவைகள் விமர்சன ரீதியில் நோக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு நோக்கங்களுக்காக்கப்பட்டு பிரசுரமான தொகுப்பை இம்விமர்சன மலர். இவைகள் முன்னணி பத்திரிக்கைகளில் திறனாய்வு நோக்குடன் பிரசுரிக்கப்பட்டவைகள்.

இத்தொகுப்பில் மலர்ந்த ஆக்கப்படைப்புக்கள் அவ்வப்போது வீரகேசரி வரமலர், ஜீவநதி சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டவைகள் சில ஆக்கங்கள் “அலைமுகிலன்” புனை பெயரில் எழுதப்பட்டவைகள்.

இத்தொகுப்புக்கு அர்த்த புஷ்டியுடன் அணிந்துரை வழங்கிய என் மதிப்புக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் முனைவர் உயர் திரு சபா ஜெயராசா ஆ.யு அவர்களுக்கும். எனது நீண்ட

கால அன்பின் உறவு நேயம் முன்னால் தமிழ் சங்க தலைவர் திரு.ஆனந்தன் ரகுபதி பாலஸ்ரீதரன் அவர்களுக்கும், வீரகேசரி வாரஇதழ் இணையாசிரியர் திருமதி.ரேனுகா பிரபாகரன், ஜீவநதி திரு.மு.பரணிதரன் மற்றும் சகோரதன் பெரியவன் கதிரவேல், மனையல் சரோ, விஜய், பொன் சுகிதா, வலிமைபெ பிரபாஷினி இவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி துளிகள்

கலாபூஷணம் உடப்பூர் வீரசொக்கன்

தொலை :- 0767887775
0714411607





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/10/10 ஐப்பசி

# 01. தெரிந்த பெயர் அறியாத கவிதை புனைவுகள்
## (கவிஞர் இராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம்)

புத்தளம் மாவட்டம் தமிழர்களின் பெருமைகளையும் கலை இலக்கியத் துறையில் சாதனைகளையும் நிலை நிறுத்திய மாவட்டம்.

இங்கு அன்று வாழ்ந்த தழிழர்கள் ஆரம்ப காலத்தில் கவிதை புனைவுக்கு முன்னுரிமை கொடுத்துள்ளனர். இவர்கள் ஆலய உற்சவங்களை முன்னிலைப்படுத்தி வாய் மொழி இலக்கியங்களை படைத்துள்ளார்கள். இருந்தாலும் எழுதப்படாத ஆவணப் படுத்தப்படாத சங்கதியாகவே இருந்துள்ளன. அவைகள் கும்மி, ஊஞ்சல், தாலாட்டு, ஒப்பாரி, அம்பா பாடல்கள் போன்ற பாடல்கள் என்பன காலத்துக்கும் காலம் ஆலய உற்சவங் களை முன்னிட்டே இயற்றி பாடியுள்ளார்கள்.

இதன் உள்ளக்கிடக்கேயே பிற்காலத்தில் ஆக்கிய இலக்கிய வளர்ச்சிக்கு கால் கோளிடப்பட்ட தென்றே கூறலாம்.

இம்மாவட்டத்தில் பிறந்த தமிழ் பேராசான் சைமன் காசிச்செட்டி பல்துறை ஆற்றல் கொண்டவர் எண்ணிறைந்த ஆக்கப் படைப்புக்களை தந்தவர். அன்னார் தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தபுஷ்டியான படைப்புகள் இப்பபகுதியில் கிராம மக்களிடத்தில் வாழ்ந்த தமிழ்களை விழிப்புணர்வு அடையச்செய்தன.

இதை உள்ளீடாகக் கொண்டு இப்பகுதியில் வாழ்ந்த தமிழ் உணர்வாளர்கள் ஆலய உற்சவங்களை முன்னு தாரணமாக பல கவிப்புணைவுகளை படைத்தார்கள். அவ்வப்போது பனித்துளிர் களாக வெளிவந்தன. இதனோடு பல ஆக்கப் படைப்புக்கள் கூட வெளியிடப்பட்டிருக்கின்றன. உடப்பு திரௌபதை அம்மன் மானியம் 1929 வெளி வந்துள்ளன.

முன்னேஸ்வரம் மானியம் 1965.07.01 வந்தன. பா.சிவராம கிருஷ்ணசர்மா 1957 வீரகேசரியில் பல கட்டுரைகள் கவிதைகளை படைத்துள்ளார். இதன் அடிப்படையில் சிலாபம் மருதங்குளத்தை பிறப்பிடமாகக் கொண்ட ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினமும் இம்மாவட்ட கவிதை வளர்ச்ச்சிக்கு பெரும் முன்னுதாரண மாகக் திகழ்ந்துள்ளார். இலங்கை ஒளிபரப்புக் ஊட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராக கனகரத்தினம் எண்ணிலடங்காத கவிதைகளை வான் அலையில் தவழ விட்டுள்ளார்.

இவ்வாறு துளிர் விட்டெழுந்த கவிதை வடிவங்கள் இம்மாவட்டத்திலும் கால் பதித்ததென்றே கூறலாம். கவிதை புனைவுக்கு உட்பட்டவர் இதன் பின் புலத்தினோடு சிலாபம் மருதங்குளத்தை பிறப்பிடமாக கொண்டு 1944 பிறந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம். இம்மாவட்ட கவிதை வளர்ச்சிக்கு முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராக இணைந்து கொண்ட கவிஞர் கனகரத்தினம் எண்ணி தந்த பல கவிதைகளை வான் அலையில் தவழ விட்டார். கவிஞர் கண்ணதாஷனின் குடும்ப உறவு நண்பர்கவிஞரின் சகல நிகழ்வுகளிலும் இவர் கலந்து கொண்டு சிறப்பிப்பவர்.

தான் வானோலியில் வடித்து கவிதைகள் வாண்ணையுடன் காற்றோடு காற்றாக போக கிடைத்த மிகுதிகளை ஒன்று திரட்டி தமிழ் பற்றின் ஊற்றில் என் தமிழ் 1987 என்ற கவிதைத் தொகுயும் கம்பரும் கவிஞரும் 1988 மனம் போன போக்கில் 1988 என்றதொகுதிகளை வெளியிட்டு முத்திரை பதித்தவர் கவிஞர் ராஜகுரு.

கவிஞர் தமிழ் மேல் பற்றுதியை உணர்வோடும் உணர்ச்சியுடனும் கவிதை தொகுதிக்கான சமர்ப் பணத்தை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் கொடுப்பாய் என்ற கவிதையில்

"குபேரன் பொன் கொடுத்தான்
குசேலன் அவல் கொடுத்தான்
பாஞ்சாலி உடை கொடுத்தாள்
பாலனவன் உயிர் கொடுத்தான்
என்னிடத்தில் என்ன உண்டு
என்னை நீ பாட விடு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரின் கவிதைகள் காத்திரமான உயிரோட்டம் நிறைந்ததாக காணப்படுகின்றது கவிஞனால் உயிர் ஊட்டாடப்பட்ட கவிதைகள் சாகா வரம் பெற்றது. சாகின்ற உடலை பார்க்கின்ற பிரமாவைக் காட்டிலும் காதா கவிதை படைக்கும் கவிஞனின் ஆற்றல்வல்லவை மிக்கது. கவிஞன் படைக்கும் கவிதைகள் நின்ற நிலவ உயிரோட்டமுள்ள கவிதையே சான்று கவிஞர் பல்வேறு கோணத்தில் தன் கவிதை கணைகளை விரித்துள்ளார். தமிழ் உணர்வு, தமிழின் பெருமை, உணர்ச்சி பிரபாகம், யுத்த மேகம் போன்ற பாடு பொருளைக் கொண்டு தன் கவிதைப் பார்வையை விரித்துள்ளார். உணர்வுபூர்வமான ஆற்றலுள்ள கவிஞர் புனையும் கவிதைகள் இம்மண்ணிலும் வீறு கொண்டெழுந்துள்ளார் என்பதற்கு இக்கவிதை பதமாக இருக்கின்றதல்லவா அந்த விரிகள்:-

"தமிழை வளரக்காதீர்
தமிழக்கு உழைக்காதீர்
உலகம் அழியுனும்
உயிர்கள் அழியினும்
தமிழ் அழியாது
அழிக்க இயலாது
ஆகையால்
ஒன்ற செய்வீர்
பேச்சினும் எழுத்திலும்
தமிழைக் கெடுக்காதீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது வென்று போதும்
தமிழங்கு வாழ"

கவிதையை கவிதையாக்குவது ஓர் இயக்க சக்தி அதை இயக்க வைக்கின்ற சிதறிக் கிடக்கும் மலர்கள் மாலையாதுவது இல்லை. அவை ஒரு நாரால் இணைக்கப்பட்ட போதே மாலையாக உருவமாகின்றது. சிதறிக்கிடக்கும் பல சொற்களை திரட்டி கவிஞன் எடுத்தாற்றலால் தொகுக்கப்பட்டு மாலையாக்கின்றான்.

இந்த கவிமாலையில் காலமாற்றங்களால் ஏற்படும் முடிவில்லா தொல்லைகள் பிரச்சினைகளை பட்டவர்த்தன மாக இக்கவி வரிகள் எடுத்துச் சொல்லுகின்றன. "காலம்" என்ற பொருளில் கவிஞரின் பார்வை இது:-

"நினைப்பதெல்லாம் முடிமென்றால்
நினைத்ததெல்லாம் முடியவில்லை
முயன்றால் ஏதும் நடக்குமென்றால்
முயன்று பின்னும் நடக்கவில்லை
நம்மால் முடிவதிற்கு ஒன்றுமில்லை
முடியும் காலம் வந்தாலன்ற
முடியா தொன்றும் முடிவதில்லை.."

ஒருவரின் வாழ்க்கை என்பது பஞ்சமெத் தையும் அல்ல.. அது வரண்ட பாலை வனமும் அல்ல அவரவது செயல்பாடுகளுக்கும், விருப்பு, பெருப்புக்கும் உட்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வாழ்வதாற்கே அன்றி வாழ்வோடு வாழ வேண்டுமென்றும் அல்ல. வாழ்வை வளப்படுத்த உழைப்பென்பதை தியாகத் துடன் உழைத்தால் அது பூத்து குலுங்கும் பஞசனை தான் "கவிஞர்" "வெல்லும் பொழுதாக விடியட்டும்" என்ற கவிதையில் வாழ்வின் விடியலை தன் பார்வையில் இவ்வாறு செலுத்தியுள்ளார்.

"வாழ்க்கை சுமையாகி வாழ்வினை இழந்தோர்
யாக்கை நிலையாது என்பதை உணர்ந்தோர்
வாழ்க்கையது இங்கு அவன் வழி என்போர்
வாழ்வில் வளங்கள் வேண்டுமின் என்போர்"

கவிஞன் தன் கற்பனை வளத்தால் பல கவிதைகளை பாடு பொருளைக் கொண்டு எண்ணிறந்த கவிதைகள் வடிவத்துள்ளார். கவிதை புனைவுகளை உணர்த்தும் முறையிலேதான் அது தனிச்சிறப்பு பெறும் முன்னைய உருவமும், அதன் உள்ளடக்கமும் இருந்து புதுப்புது உணர்த்தும் முறை ஒரு கவிதையில் அமைந்தால் அந்த கவிதைக்கு தனி மவுசு உண்டு என்பார். கவிஞர் "பாவம் அது" என்ற கவிதையில் தன் பாடு பொருளை பல்வேறு கோணத்தில் தன்பார்வை விரித்துள்ளார்.

கண்ணிழந்தவன் பாவம், கால் இழந்தவன் பாவம், துயரத்தில் வாழ்பவம் பாவம், வாழத் தெரியாதவன் பாவம் பாவப்பட்ட உலகில் அப்பாவிகளாக வாழ்வது பாவம் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களை கவிஞர் இராஜகுரு கனகரத்தினம் கவிதை இவ்வாறு அமைந்துள்ளது.

"பை கொண்டு செல்வோர் பொய் கொண்டு சென்று
மெய் சொல்லும் காலமையோ
இவர் தாய்க் குலமென்று வாய் விட்டுச் சொல்ல
இலாத காலமையோ"

குடும்பமென்ற கோவில்; குல விளக்காக விளங்குவபன் தாய். அந்த மாதாவின் பாசத்துக்கு ஈடினை எது. அம்மா என்பவளிடத்தின் ஊற்றெடுக்கும் பாசமானது காட்டாறு நீரைப் போன்றது. தன் பிள்ளைகளுக்கு நோய், நொடி பிணிகள் ஏற்பட்டால் பிள்ளைகளின் துயரத்தை தன்துயரமாக நேசிப்பாள். பிள்ளைகளைக் காணாது போதும் துடிதுடித்து துவண்டு விடுவாள். இதைத் தான் தாயிர் சிறந்த கோவிலுமில்லை என்றோர்கள் ஆனால் கவிஞர் தாய பாசத்தை "கோகிலா" என்ற கவிதை வரிகள் பாசத்தை நேசத்தை படம் பிடித்துக் காட்டுகிறார்.

"கூடப் பிறக்கவில்லை. குபேரனெனை நினைக்க
வில்லை அன்புக்கு அவளிடத்தில் ஐயையோ
பஞ்சமில்லை
காணும் பொழுதினிலே பொழிகின்ற மேகமவன்
ஆறு மொழியினில் தொகின்ற தென்றலவள்
தந்தை வெறுத்து தனியே நான் வாழுகையில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய கவிதைப் பரப்பில் விரிவாக்கத்தில் கவிதை புனைவு பல்வேறு வடிவங்களாக விரிந்துள்ளது. அது வாழ்த்து கவிதை "வரவேற்பு கவிதை, காதல் கவிதை, நீதிகவிதை, தேசிய கவிதை, புதுக்கவிதை, அஞ்சலி கவிதை என பல துறையில் மலர்ந்துள்ளது. இக்கவிதைகள் உணர்த்து முறையே உயிர், அதன் உள்ளடக்கம், கவிதையின் உள்ளம், அதன் உருவம், கவிதையின் உடல் இம்முன்றும் உணர்த்தும் முறைக்கு அவர்தாம் கொடுக்க கொடுக்கும் தன்மைக்கேற்றவாறு அமைகின்றது.

இவைகளை உள்ளீடாகக் கொண்டு கவிஞர் கனகு நாட்டின் தேசிய தலைவர், நாட்டை ஆண்ட தலைமையின் இறப்பு சகல மக்களையும் அதிர வைக்கும். நாட்டின் தலைவர்கள் நாட்டுக்கு உழைப்பவர்கள். அவர்கள் சொத்து சுகங்களையும் தேடி வைத்து தான் செல்வார்கள் இதற்கு முன்னால் பிரதமர் டட்லி சேனநாயக்க அவர்கள் விதிவிலக்கானவர் இந்த பெரும் தலைவரின் இறப்பு என்பது சரித்திரம் இவர் வாழ்ந்த வாழ்க்கை பலபடிப்பினைக் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார்.

இவர் ஏமாற்று அரசியலை ஒருபோதும் அவர் நடந்தவில்லை. கச்சிதமான தலைவர் பிரதமர் டட்லியின் இறப்பை, வாழ்வு நெறியை ஒழுக்க பண்புகளை கவிஞர் துல்லியமான முறையில் தனது கவிப்புலத்தின் மூலம் படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து காட்டியுள்ளார். “டட்லிமறைவு” கவிதையில் துயர நெருடலை நேர்த்தியுடன் தந்துள்ளார். அந்த வரிகள்

“ஏமாற்று அரசியலில் ஆகாதென்று
புது வழி கண்டவரட டட்லி
தோற்றத்திலும் பொய் சொல்லக் கூடாதென்று
ஒருவழி நின்றவர் டட்லி
இருக்கையில் உணராத உண்மையை
அவர் இறந்தபின் உணந்தனர் மக்கள்”

தமிழர்கள் தீபத்திருநாளை பக்தியுடன் கொண்டாடி மகிழ்வார்கள் அதர்மத்தை போக்கி தர்மத்தை நிலை நாட்டும் தத்துவத்தை உணர்த்து வதே தீபங்களை வரிசையாக வைத்து வழிபடும் இத்தீப நாளானது வாழ்க்கையில் என்றும் தீபம் போல் சுடர் விட்டு பிரகாசிக்க வேண்டுமென்ற அடிநாத கருத்தை விளக்கும். இக்கருத்தை நிதர்சனமாக வைத்து “தீபாவளி” என்ற கவிதையால் இவ்வாறு பிறக்கியுள்ளார்.

“வேதம் சொன்ன நாளே இன்று
காட்டுக் குயிலின் கீதம் கேட்டு
வீட்டில் ரெண்டு கன்னம் சேரும்
சங்கம் தந்த தங்கம் கேட்டு”

மனித வாழ்ககை என்பது இன்பமும் துன்பமுடன் சந்திக்கும் சூழலும் இயந்திரமாகும். ஆரம்பம் வெளிச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றல் முடிவு இருள் என்ற துன்பமாகும். இது மாறி மாறி மனித வாழ்வில் சங்கமாகும் என்பது பொது நியதி. இந்த கூற்றின் படி இறப்பின் துயரத்தை காணும் ஒருவர் தன்னை அறியாமல் கண்ணீர் விட்டு அழுவதை பார்க்கின்றோம். உடன் பிறந்த உறவினர்கள் இறந்தால் தாங்கோணா துயர் வாட்டி நிற்கும். ஆனால் மணக்கோலம் கண்டு தன் மணாளியை இழக்கும் துயரானது அந்த கொடுமை வேதனை வழிப்பு நிலைக்கே தம்மை இட்டுச் செல்லும் யதார்த்தத்தை காணுகின்றோம். கவிஞர் “கொடுமை” என்ற தலைப்பிலான கவிப்புலனை துயரின் வெளிப்பாட்டை இவ்வாறு படைத்துள்ளார்.

“கண் சிவக்க கதை சொன்ன ராகவனை
கைபிடிக்க முடிவு செய்தாள் மாதுரியும்
இருவீட்டுப் பெற்றோருக்கு பிடிக்க வில்லையென்றாலும்
தனிமையில் எமக்குள்ளே நாம் செய்வோம்
வதுவையென”

தமிழரின் வாழ்வில் கூடப்பிறந்த குண இயல்புகளில் ஒன்று புறம் கூறல் கண்ட போது ஒன்றும் காணாமல் இருக்கும் போது வேறொண்டும் கூறுவார்கள் பார்த்ததும் நல்லவனாக நடிப்பதும்,

பார்க்காத வேளை இல்லாது பொல்லாது கூறி நாச வேலை செய்து நச்சரிப்பதும் சில பேரின் உடலோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிய குணங்களில் ஒன்று கவிஞர் "பொழுதே விடியட்டும்" என்ற கவிதை வரிகள் இவ்வாறு புலப்படுகிறது.

"கற்றம் உள்ள, உள்ளம் கொண்டோர்,
கண்ணகி என்று வேஷம் பூண்டோர்
கண்டு ஒன்று காணாது ஒன்று
கவிதையாகப் பேசித் திரிவார் நல்லவர்
வாழ்வில் நஞ்சைத் தூவி
நாசம் செய்ய நாளும் நினைப்போர்."

கவிஞர் கனகரத்தினம் கவிபேராசன் கண்ணதாசனின் உழவலன்பர். கண்ணதாசன் எவ்வாறு கண்ணனின் மேல் பக்தி கொண்டது போல கவிஞர் கனகும் கண்ணனின் தீராத பற்றும் பாசம் நேயம் கொண்டவர். பாரதப் போரை நகர்த்திய கண்ணன் மேல் இவருக்கு பக்தியான ஆத்மாத்த நேயமானது கவிதை வரியை நேர்த்தியுடன் படைத்துள்ளார்.

"பார்த்தனுக்கு தேரெடுத்தாய் நந்நலாலா
பாண்டவர்க்கு கை கொடுத்தாய் நந்தலாலா
கண்ணென்று பேரெடுத்தாய்
பாதையிலே துணையிருப்பாய் நந்தலாலா
கீதையெனும் அழுதளித்தாய்
நாலுபக்கம் துன்பமென்றால் நந்தலாலா"

ஒருவனின் வாழ்க்கை பயணத்தில் பல சந்திப்புக்களை சந்திக்க வேண்டிவரும் உள்ளொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து புறம் சொல்லி வாழ்பவர்களும், ஒருவனின் முன்னேற்றத்தைக் கண்டு ஈகே அடைவதும், செல்வ சிறப்புடன் வாழ்வனை பார்த்து வேதனை கொள்ளுவர்கள். தான் வாழும் வாழ்க்கையில் அநியாயம் செய்து அபரித்து முன்னேற்றம் காணுபவர்களின் அநியாயம் நினைத்து கவிஞர் மனம் வெதும்பி பாடியுள்ளார்.

"அன்றாடம் பெருகுகின்ற அநியாயம்
அத்தனையும் பார்த்துப் பார்த்து அகம் நெகிழ்ந்தேன்
இத்தனையும் தவிர்க்கின்ற சத்தியறேன்
அங்கு அவர் திருந்துகின்ற வழியும் காணேன்."

ஆன்மீக துறையில் பற்றுற்றவரான கவிஞர் கண்ணனிடத்தில் தீராத பற்றுள்ளவர். கண்ணனை நினைத்து கூடுதலான கவிதைகளை படைத்துள்ளார்.

அக்கவிதைகளில் முதுசமாக இக்கவிதை இவ்வாறு படைத்துள்ளார்.

"கண்ணன் என்பார் வெண்ணைக்
கள்வன் என்பார்
கார் முகிலே என்பார்
கருணைக் கடலே என்பார்
தங்கை சினம் காக்க கீதை தந்தான்
தண்கயவன் தனக்கு சேலைதந்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் மாவட்டத்தில் கவிதை புனைவில் வண்ணமிக்க ஆதர்ச கவிதைகளை தீட்டிய கவிஞர்களின் படைப்புக்கள் காற்றோடு வந்த, செய்திகளாக மலர்ந்ததே ஒழிய அவைகளை திரட்டி நூலாக ஆவணப்படுத்தப் படாதது குறையிலும் வெரும் குறையே! இம்மண்ணுக்கு தீரமிகு கவிதை படைத்து மறைந்த பெரி.சோமாஸ்கந்தர், நரக்கிளி பி.எஸ்.பிள்ளை கருக்குப்பனை பி.பி.மிராண்டா, திரு.சி.சொக்கலிங்க பூசகர், கதிர்வேல் புலவர், கிட்ணன் ஸ்ரீஸ் கந்தராசா இவர்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் உடப்பூர் வீரசொக்கன், தில்லையடி செல்வன், தெய்வா அமுர்தலிங்கம், இம்மானுவேல் புஸ்பராசா போன்றவர்களின் சமகால கவிஞர்கள் வரிசையில் இனம் காணப்பட்டவர் களை இருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. தெரிந்தும் தெரியப்படாத கவிஞர் பெரி.சோமாஸ்கந்தர்

வெள்ளித்தின் பெருக்கைப் போல் கவிப் பெருக்கம் கலைப் பெருக்கம் அதனூடன் கவினூர் கலையார்வமும் துளிர் வடும் இடமே உடப்பு ஆகும்.

கவிஞர்களும், அறிஞர்களும் கலை வித்தர்களும் தன்னகத்தே கொண்ட உடப்பூரில் கலைப் பயணத்துக்கு அளப்பறிய சேவைகளையும் நுண்கவின் கலைக்கு கூட அறியாமையாலும் தெரியாமையினாலும் பங்களிப்பை செவ்வனே செய்து ஆற்றுகை செய்த இடமாகவும் இவ்வூர் முகிர்ந்து நிற்பதென்றால் இருவேறு கருத்துக்கு இடமில்லை என்றே கூறலாம்.

வட, கிழக்குப் பகுதியில் கலைஞர் கவிஞர்கள் தோன்றி ஆக்கப்பணிவது செய்வது என்பது வேறு விடயம், ஆனால் பெரும் பான்மைக் கூழலில் கவிஞர் பலர் தோன்றி கவிபடைத்து தமது கவியாற்றலை வெளிப்படுத்துவது என்பது வேறு விடயமாக நோக்க வேண்டியுள்ளதென்பதை மனக் கொள்ளத்தக்கதாகும்.

அந்த கவனியில் உடப்பில் தோன்றிய பல கவிஞர்கள் கும்மிப்பாட்டு பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், அம்மானைப் பாடல்கள், செவ்வாய்ப்பாடல்கள், எச்சரிக்கை போன்ற கவிப்பாடல்களை இயற்றி தமது ஆற்றிலை வெளிப்படுத்தியுள்ளனர். ஆனால் இன்னும் சாகாவரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளதுடன் மின், மினித்தும் வருகின்றது. இதன் பின் புலத்தில் இப்பாடல்கள் கோவில் உற்சவங்களிலும் பொது வெளி நிகழ்வுகளில் பிரகாசிப்பதென்பது யதார்த்த நிலையாகும்.

அந்த வரிகையில் கவியள்ளங்கள் இப்பகுதியில் துளிர்விட்டாலும் இவர்களுக்கெல்லாம் கோடிட்டுக் காட்டுமளவுக்கு தெரிந்தும் தெரியாத அறிந்தும் அறியப்படாத கவிஞரான இனம் காணப்பட்டவர்தான் உடப்பூரான் பெரி.சோமாஸ்கந்தர் ஆவார்.

ஆம்! அவர்தான் பெரி.சோமாஸ்கந்தர் அன்னார் 1947 ஆம் ஆண்டு உடப்பில் பிறந்து வளர்ந்து அங்கே கல்வி கற்று ஆசிரியராக பணியாற்றியவர். யாழ்கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புடம் போடப்பட்டு கலைஞராகவும் கவிஞராகவும் இனம் காணப்பட்டார்.

அன்று தனது கவிதை புலத்தில் ஆற்றலை வெளிப்படுத்திய சோமாஸ்கந்தர் உடப்பில் நிகழும் பொது நிகழ்ச்சிகள், சிறப்பு மலர்கள் கவியரங்குகள், திருமண வாழ்த்து கவிதைகள் போன்றவற்றில் பங்கு பெற்றி தனக்கே உரிய பாணியில் கவிமழை பொழிந்தவர். ஆற்றிலுள்ள கவிஞருமாவார் எண்ணிறந்த தனது படைப்பாற்றலை வெளிக் கொணர்ந்த சோமாஸ்கந்தர் தெரிந்தும் தெரியாத அறிந்தும் அறியப்படாத மரபுக் கவிஞராகவே இனம் காணப்பட்டவர். அறுபதுகளிலே கவிபுனைவில் ஈர்க்கப்பட்ட போதும், மரபுகவிதையே தனது உயிர் மூச்சாக கொண்டிருந்தார். இதனால் இவரின் கவிதைப் புனைவுகள் ஆன்மீகம் துறையில் படம் போட்டாதும் கூடுதலாக காதல் இனமுரன்பாடு சிதனம் முதலாளி தொழிலாளி பேதம் போன்ற இன்னோரன்ன நிலையிலிருந்து தனது கவிதைகளை பாடுவதினர்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிபுனைவதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவராக பிரகாசித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் இடம் பெறும் உற்சவங்களையிட்டு அன்னாரில் கைபடாதகவிதை வடிக்காத கோவில்கள் இல்லை என்றே கூறலாம். அவ்வளவு தூரம் தன்னை ஆன்மீகத் துறையில் ஈடுபட்டவராக ஈர்க்கப்பட்டவராக உள்வாங்கப்பட்டவராக இருந்துள்ளார். பங்களிப்பை செய்துள்ளார்.

உடப்பை அண்மித்துள்ள முந்தல் திரௌபதை யம்மன் ஆலயத்தின் மேல் அமைந்துள்ள அம்பாளை நினைத்து "ஆத்தாளே" என்ற கவிதையில் தன் ஆற்றலை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ள வரிகள் இவை:

"சீர்வளர் முந்தல் நகரில் எழுந்திரும்
செல்வி பாஞ்சாலி கும்மி சொல்ல
கார்வள கரிமுக கணபதி நாதனின்
கமல மலர்ப்பாதம் காப்பாமே
தொட்டக்களி என்றும் வாவிக்கரையிலே
தெங்கும் பொழில் சூழ்ந்த முந்தலிலே
இட்ட சித்தி தர எழுந்தருளி வந்த
ஈஸ்வரி என்றைக்கும் காப்பாயே
பொங்கிடும் அனலில் தீமிதிப்பாகிய
பூமி தியானிலே அருளெடுத்த
மங்கலமாக நீ அடிவரும் காட்சி
மாநிலத்தின் பெரும் அற்புதமாம்"

இந்த வடமேல் மாகாணத்தில் பலகவிஞர்கள் தோன்றிருக்கின்றார்கள். பல கவிதைகளை ஆற்றுப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தியும் உள்ளார்கள். ஆனால் உடப்புப் பகுதியில் பல கவிஞர்கள் வண்ணக் கவிபடைத்துள்ளார்கள். வர கவிகளாக எழுந்தமாக கவி படைக்கும் கவியுள்ளங்கள் தோன்றியுள்ளார்கள் அவர்கள் காவியங்கள் எச்சரிக்கைகள் அம்மானை போன்றவற்றை படைத்துள்ளார்கள். அவைகள் தேடலின் முலம் ஆவணப்படுத்தப்படவில்லை துரதிஷ்டமே.

இக்கவி மரபை பின்புலமாகக் கொண்டு உடப்பில் எழுதா கவிதைகளும் இரங்கல் கவிதைகள், வாழ்த்துக் கவிதைகள் வரவேற்புக் கவிதைகள் என்பன புனையப்பட்டுள்ளன. இதையிட்டு வதுவை நிகழ்வு மேடையில் மணாளர்களை வாழ்த்துக் கவிதை இராக சந்தத்துடன் இசை மெருகூடுடன் வாழ்த்துக் கவிதை படிக்கப்படும். இதற்கு முன்னுதாராணமாக திகழ்பவர்தான் கவிஞர் சோமாஸ்கந்தர் அவர் யாத்து பாடிய கவி வரிகள் இது

<u>வெண்பா</u>

அம்பலத்தே யாடுகின்ற
ஆனந்த தாண்டவனை
நம்பலமாய்க் கொண்டென்றும்
நாடுகின்றோம் கொம்பனையாள்
கங்கா முருகனுடன்
காதலிலே இல்லறத்தில்
வாழ் குற வாழப்பணி

<u>விருத்தம்</u>

ஒரிக்கடற் குமரி ஓங்கிக்
கரை மோத ஓதுங்குஞ் சிற்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலக் கரை மீது கொஞ்சும்
எழில் பரவக் குலவு முராம்
சிலத் திருவுடப்பில் சிறந்தோங்க
வீரபத்திரன் திகழும் கோமான்
சால நல் வைரத்தை சார்ந்து பெற்ற
தவப் புதல்வ வாழ வாழி

கவிஞரின் கவிதைகளில் இசைப்பாடல்களுக்கு முக்கியம் வழங்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது ஈழத்தில் வில்லிசை கலைக்கு புது இரத்தம் பாச்சியவர்களில் முதன்மையானவராக அறிய முடிகின்றது. வில்லிசை கலையானது சினிமா பாடல்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதை மாற்றியமைத்து கிராமிய சந்தங்கள் அமைந்த பாடல்களுக்கும் தென்மாங்கு பாடல்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டதை அன்னாரின் வில்லுப்பாட்டில் அவதானிக்க முடிவதுடன் தான் யாத்த கவிதைகள் வில்லிசையில் இழையோடு வதையும் கவியுணர்வுகள் மேன்மைப் படுத்துவதையும் இவரின் நிகழ்ச்சிகளில் அவதானிக்க முடிகின்றது.

தனது வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் முதலாவதாக தான் இயற்றிய கவிதை பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

“ஐயனே உன்னை அல்லால் குரல் ஏது – ஏது
எனை ஆண்டருள் புரிந்திடும் ஆனை முகத்தவனே”

“பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே சீலமுறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத் தமிழ் மூன்றும் இயல் இசை நாடகம் - சீலமுறும்
சங்கத் தமிழ் மூன்றும் தாருமையா"

முக்கிய பாடு பொருளாக கவிஞர் திகழ்வது தான் நேசித்து வணங்கும் இந்த சக்தி வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். தன் குலதெய்வமாக போற்றி வணங்கும் சக்தியை மயூராபதி காளியம்மன் மீது தீராப் பற்றுக் கொண்டவராவார். அங்கு சிகழும் முக்கிய உற்சவ நிகழ்வுகளில் பங்கு பற்றுவதிலும்தான் கவிதையாத்த பாடல்களையும் பாடி மெய்யுருகி நிற்பதையும் இப்பாடல் கவி வரிகள் சான்றாகதாரமாக நிதர்சனமாகியுள்ளது என்பது வெள்ளிடை மலை அந்த வரிகள்

"சங்கத்தமிழ் பால் வந்தோம் காளியம்மா...
உனக்கு எந்தத்தமிழ் இனித்திடுமோ காளியம்மா...
வானுயர்ந்த மயூரபதி அரசாளும் மகராணி
மாநிலத்தில் புகழ் பெற்ற மா பெரிய ஆதி சக்தி
அடியார்கள் தேவ வரும் அம்பிகையே
உன்னை நம்பி அடியேனும் வந்தேன் அம்மா
ஆதரித்து காரும்மா"

உடப்பின் அடையாளமாக திகழ்வது ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயமாகும். இவ்வாலயத்தில் நடைபெறும் தீமிதிப்பு பெரு விழா பிரசித்தி பெற்றது. மரபை தழுவி கொண்டாடப்படும் இவ்வாலய உற்சவம் தனிச் சிறப்புப் பெற்றது. பண்டைய பாரம்பரிய விழுமிய பண்பாட்டு கூறுகளுடன் நடாத்தப்படும் இவ்உற்சவங்களில் திருக்கலியாண நிகழ்வு முத்தாரமாகும். அவ்வமயம் அங்கு ஊஞ்சல் பாடல் இசைக்கப்படும் அவ்வம்மையின் பால் ஈர்க்கப்பட்ட கவிஞர் ஊஞ்சல் பாடலை இயற்றி கவிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடன் பாடல்களை பாடும் போது மெய்யடியார்கள் மனமுறுகிற்பார்கள். கவிஞரின் கவி வரிகள் இது:-

"வங்கம் மலிகின்ற வாவியின் ஓரமாய்
தெங்கும் பொழில் சூழல் தேனவர் வாசம்
உடப்பூர் நகர்பதி உவந்தே அமர்ந்தாய்
உம்மை தொழுதிட ஆட்சி புரிந்தாய்
அம்பெனும் பொற்பீடம் மீதே அமர்ந்தாய்
ஆர்வமெனும் பக்திக்கடலில் எழுந்தாய்
அந்தரத்தே வந்து காட்சி கொடுத்தாய்
அம்மையே திரௌபதி ஆடுக ஊஞ்சல்"

காதலில் ஏற்படும் காதல் இன்பத்தை பாடாத கவிஞனே இல்லையெனலாம். காதலன் தன் காதலின் மேல் ஏற்பட்ட காதல் ரஸபாவத்தையும் தன் அன்பு பிரவாகத்தில் ஈர்க்கப்படும் போது ஏற்படும் மயக்கத்தின் உணர்வை காதல் கடிதங்களில் வர்ணித்து ஆசை எண்ணங்களை வடிப்பது காதலின் நிலைப்பாடாகும். "ஆசைகளியே மனம் கொண்ட மலரே" "மணம் வீசும் மாதுவே" போன்ற எண்ணிரந்த கவிதைகளை வடித்துள்ளார் என்பதுயான் அறிவேன். அந்த காதல் கவிதை வரிகளில் இருந்து இவ்வரிகள்

"அன்னத்தின் அழகு நடை
ஆடிவரும் மயல் தன் ஆடல் சாயல்
கன்னத்தின் கயலாளல் காதலிலே
மயியலாளல் காட்டும் பாவை
வன்னத்தின் வடிவழகி வாஞ்சையுற
அன்பரசி வளரும் கற்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தின் செந்தமிழே சிவத்துறை
நாயகியே சிறப்பாய் வாழ்க"

ஆசிரியர் தொழிலுக்கு உள்வாங்கப்பட்ட கவிஞர் அத்தொழிலை தெய்வீக தொழிலாக மேற்கொண்டார். எதிர் கால மாணவர்கள் நற்பிரஜைகளாக வாழ வேண்டுமென கனவு கண்டார். கற்பதன் மூலமே நல்ல நிலையை அடைந்து தமது வாழ்வை சிறப்பிக்க முடியும் என்பது அன்னாரின் தீர்க்கமான சிந்தனையுற்றாகும். இன்று சாதாரண குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் கல்வி கற்று தேறியதின் மூலம் உயர்ந்த அந்தஸ்தில் அலங்கரிக் கின்றன என்பதை "கற்றீடுவீர்" என்ற கவிதையில் தன் உள்ளக்கிடைக்கை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

"சாதாரண பிள்ளைகள் என்ற நிலைமாறி சாதனை
புரிந்துடுவோம் கற்க கல்வியோடு நாம் கற்ற கல்வி
தனை எம்மை கைவிடாது"

கவிஞர் தன் கவிதைகளை காத்திரமான பின்புலத்தை கொண்ட கவிதைகளை படைத்துள்ளார். இவர் தன் பெயரை கோடிட்டுக் காட்டுமளவுக்கு அகலக் கால் பதித்துள்ளார். தமிழ் பற்றும் தமிழ் உணர்வும் இழையோடும் தான் படைத்த கவிதைகளில் தமிழ் பற்றையும் தமிழ் உணர்ச்சியையும் ஊட்டுவதிலும் அவருக்கு கை வந்த கலையாகும். இக்கவிதைகள் கூடதான் ஓர் தமிழ் பற்றாளன் என்பதை அடையாளப் படுத்தியுள்ளார். "தமிழே" என்ற கவிதையில்

"தேனும் அமுதும் சுவைவெனத் தாங்கி திகழ் இலக்கியம் புன்னகை சிந்தி கால மென்றும் நீ வளர்ந்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னித் தமிழே அருள் தருவாயே இயல் இசை நாடகம் ஆடி நின்றாயே இன்பம் பொருளாரம் பாடி வந்தாயே மன்னர் மூவர் மடி தவழ்ந்தாயே மன்றம் முன்றினில் வளர்ந்து வந்தாயே"

கவிஞர் சோமாஸ்கந்தர் தான் பிறந்து வளர்ந்த சூழல் தமிழும் சமயமும் இரண்டரக் கலந்து இடமாகும். அன்னார் சமயம் பால் இளம் பராயத்திலிருந்து ஈர்க்கப்பட்டு சமய பண்பாட்டு விழுமிய நெறிகளுடன் தனது வாழ்வை அமைத்து கொண்டவர். இதை உள்ளீடாக சித்திரை மாதத்தில் கொண்டாடப்படும் சித்திரை செவ்வாய் அல்லது முளக் கொட்டு நிகழ்வு பாரம்பரிய மரபு சார்ந்த நிகழ்வோட்டமாகும். அந்த விழாவை சிறப்பிக்க தெம்மாங்கு மெட்டமைந்த கவிதை பாடல்கள் பாடப்படும். அப்பாடுக்களைக் கேட்ட பக்த அடியார்கள் மனமுறுகி பாடலை உள்வாங்கயுருகி நிற்பார்கள் மெய்யடிகள் அவ்வமயம் அன்னார் வடித்து கவிதை வரிகள் இவை:-

" சித்திரை மாதத்திலே சிவந்த செவ்வாய்க கிழமை
அதில் பாலிகை பெண்கள் நாங்கள்
வருவோம் அம்மா பாரினில் உன் சிறப்பை பாடி
வந்தோம் நாங்கள் ஆயிரம் கண்ணுடை மாரி
வந்தாள் ஆனந்த ஊஞ்சல் ஆடுமம்மா"

பாரதி பாடியது போது "ஏழையென்பவர் இல்லை" என்பதற்கிணங்க ஏழையென்றும் பணம் படைத்தவர்கள் இல்லை. உழைப்பால் சாதாரண தொழிலாளிகள் கூட இன்று உயர்ந்து உச்சத்தை அடைந்துள்ளார்கள். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை நினைத்து எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்கையை இவ்வாறு படம் பிடித்துக் காட்டியுள்ளார். அந்த வரிகள் :-

"ஏழைக் குசேலனுக்கு வாழ்வு தந்தவன் - அந்த
ஏது காட்டி நானும் உன்னை நம்பி வந்தவன்
மீனா அடினை எனை ஏற்றிடுவாய்
தலைவன் நீ என்றே நாவும் பாடுது - இந்த
தரணியை காப்பதற்கு நல்ல நாளிது"

ஒரு தமிழ் பெண் என்பவள் தமது தனித்துவத்தை அடையாளப்படுத்த வேண்டும். அவள் காலில் கொலிசையும், கையில் வளையளும் முகத்தில் மஞ்சள் பூசிய புன்கையும் கொண்டவள் தான் தமிழ் மங்கை "தமிழ் பெண்ணாக வாழு" என்ற கவிதையுனூடாக முன்வைத்து எழுதிய கவி வரிகள்.

"காலில் சிலம்போசை கலீர் கலீர் என
கைகளிலே வளையல் பளீர் பளீரென
நெஞ்சினில் மலர் மாலை கொஞ்சியசைந்து
மஞ்சள் முகத்தில் புன்னகை சிந்திட
கொள்ளு தமிழாலே உன்னைத் துதித்திட"

கவிஞர் சோமாஸ் கண்ணன் மேல் திராப் பற்றுக் கொண்டவர். தன் ஊரில் அமைந்துள்ள கண்ணன் மேல் கொண்ட பக்தியை வெளிப்படுத்தவர். கண்ணனை நினைத்து பாடு பொருளாகக் கொண்டு கவி புனைபாயாக்கித் தீட்டுவதில் இவரின் கவிப்புலத்தின் வெட்டு முகத்தை இக்கவிதை முலம் அறிந்து கொள்ள ஏன் தெரிந்து கொள்ள முடியுமல்லவா. அந்த வரிகளின் வெளிப்பாடு இவை:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துவாரணகை மன்னரான ஆட்சி புரிந்தார்
துதிப் போருக்கு கண்ணனாக காட்சி கொடுத்தாய்
பாண்டவர்க்கு தூது சென்ற பரந்தாமனாம்
பார்த்த சாரதியாய் வந்தமர்ந்தாய் பார்த்த தேரிலே
வண்ண கடல் எழுந்து வந்து சங்கம் முழங்குது
வளமான சீருப்பில் கோயில் இலங்குது
ருக்மணி பாமையோடு பார்த்த சாரதி என்ற
பண்பான திருநாமம் எங்கும் ஒலிக்குது"

கவிஞர் சோமா ஐயாவின் கவிதை புலம் என்பது பெருமனே உள்ளுர் மட்டத்தில் மட்டுப்படுத்தாமல் கடல் கடந்த நாடுகளும் விரிவு படுத்தப்பட்டுள்ளதென்பது கவிஞரின் கவிதை புலமைக்க கிடைத்த வரப்பிரசாத மென்றே கூறலாம். உள்ளுர் மட்றுமன்றி கடல் கடந்த நாடுகளாலும் ஆற்றலை வெளிப்படுத்திலுள்ளார். அன்னாரின் கவிதையாற்றல் குடத்தில் விட்ட விளக்காகவே வெளிச்சம் காட்டுவதாக இருந்தாலும் வெளியுலகம் காணாத மறைக்கப்பட்ட மறுக்கப்பட்ட கவிஞராகவே இனம் காணப்பட்டார். சோமாஸ் ஐயா அவர்கள் சுயிஸ் நாட்டின் துர்க்கை அம்மனின் சங்காபிஷேக மணிவிழா மலரில் பிரசுரித்த கவிதை வரிகள் இது:

சந்துமெழில் வொங்கு பொழில்
பசுமை பொலி படர்ந்த பனி
சீர் செல்வம் பல் நாட்டு
மாந்திருக்கும் தஞ்சமது
தந்தளிக்கும் தயா சிந்தை
சுவிஸ் நாட்டில் தமிழர்தம்
தலையாத பண்பாடும்
வழிபாடும் தலை சிறப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையுடன் வழிபடுவார்க்
கருள் மாரி சுரந்தளித்து
பொற்பாதமாய் அற்புதமாய்
பொன்னிறமாய் பூத்திலங்கு
விந்தைமிகு திருக்கோயில்
வீற்றிருளும் சொலத்தூனில்
இளங்கண் மீளர் ஸ்ரீதூக்கை அம்பிகையே
ஆடீர் ஊஞ்சல்

கவிஞர் கவி விச்சியானது மற்றோர் நாடான அவுஸ்திரேலிய பாய்ந்துள்ளது. அந்த நாட்டில் கோவில் கொண்டு கொலு வீற்றிருக்கும் ஸ்ரீ விக்னேஸ்வரமூர்த்தி சுவாமிக்கு மேல் திருப்பொன்னூஞ்சல் பாடலை மாலையாக இவ்வாறு விரித்துள்ளார்.

"ஓங்கார நாத அலைஓயாது தானெழுந்து
ஒலிக்கின்ற பசுபிகமா கடலின் காப்பன்
மங்காத கீர்த்திசையின் பரிதி ஒளிமுதற்காணும்
பரந்த நிலக் கண்டமெனும் அவுஸ்திரேலியா நாடதனில்
தூங்காத புகழ்படைத்த பிறிஸ்பேண் மாநகரில்
தூமாமழை நீரோடும் அருவியதன் ஓரமதில்
பாங்கான கோயில்மர் விநாயகர்க்கு ஊஞ்சல்பாட
பாதமலர் தான் பணிந்தேன் தமிழ் தந்து கார்"

உடப்பு மண்ணுக்கு கவிபுனைவில் காத்திரமான கவிதை படைத்தவர்கள் துலங்கியும் மிளர்ந்தும் தத்தம் தமது பங்களிப்பை அவ்வப்போது தமது ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றனர். அந்த வரிசையில் உடப்பூர் வீரசொக்கன் மு.சொக்கலிங்க சாமி கிட்ணன் ஸ்ரீஸ் கந்தராசா, ப.முருகானந்தன், க.மகாதேவன், வீரபத்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனஸ்ரீ போன்றவர் சோமாஸ்கந்தரின் வரிசையில் கவிதை உலகில் பிரகாசித்து வருகின்றனர். வடமேல் மாகாண பிராந்தியத்தில் இவர்களின் வகிபகும் முகிழ்ந்து நிற்கும் என்பது எவ்வளவும் ஐயமில்லை என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/06/02 ஆணி

## 03. மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கிய விழாமலர் - 2018

முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் இயற்றப்பட்டது. இதன் தொன்மைச்சிறப்பு அதன் செந்நெறிகள் எக்காலத்தாலும் பேசப்படும் ஒப்பாரும் மிக்கதுமான படைப்பாகும். "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும் உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்ததும் ஊழ்வினை உருத்துவந்து ஊட்கும் என்பதும்" இக்காப்பியம் சொல்லும் யதார்த்த உணர்வுகளை அப்பட்டமாக எடுத்தோம்பி நிற்கின்றன. இதன் உள்ளுணர்வை அடிநாதமாக கொண்டு மட்டகளப்பு கண்ணகி கலை இலக்கிய கூடம் 2011.06.18 நன்நாளில் கால் கோளிடப்பட்டு ஆல் போல் தழைத்து அருகு போல் வேறூன்றி இன்று ஊளமிட்டு எட்டாவது வருடமாக கோலேச்சி தழைத்து முகிழ்ந்து நிற்கின்றன.

இக்கூடமானது தன் செந்நெறிகளை விரித்து தனது ஏழாவது வருட விழாதனை பெரு விமர்சையான முறையில் 2018 செப்டெம்பர் 6இ7இ8இ9 தினங்களில் மட்டகளப்பு கஞதாவளை கலாசார மண்டபத்தில் கலை கட்டிய விழாவாக விழாக்கோலம் பூண்டு பூரித்து நின்றது. மட்டகளப்பு மாவட்டம் தமிழ் ஊற்றாக முகிழ்ந்து நிற்பது அங்கு பன்னெருங்காலமாக கட்டிகாப்பாற்றப்பட்டு வரும் சமயவிழுமிய பண்பாட்டு கூறுகள் - அக்கூறுகள் இன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் சடங்கு சம்பிரதாய வழக்காறுகள் என்பனவற்றை நிதர்சனமாக கூறமுடியும். ஓர் இனக் குழுமத்தின் செந்நெறிகள் முன்னெடுத்து இளைய தலைமுறைக்கு கொடுப்பது குழுக்களின் வகிபாகம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் தாற்பரியங்கள் பாதுகாக்கப்படும்.

அந்த வகையில் மட்டகளப்பு மண்ணுக்கு தனியே ஒரு மதம் மகிமை காணப்படுகிறது. அந்த மாவட்டத்தில் முதிர்ந்து நிற்கும் இம்மக்களின் வாழ்க்கை பண்பாட்டு அம்சமாக கலைகள் கலாசார பின்புலம் உணவு பழக்கவழக்கங்கள் வாழ்க்கை கூறுகள் அதனோடு ஒற்றி நிற்கும் சடங்கு சம்பிரதாயங்கள் விழாமுறைகள் குழுத்தி நெறிமுறைகள் என்பன இம்மாவட்டத்தின் பெருமை சிறப்புக்களை கட்டியம் கூறி நிற்கும் முதுசங்களாகும். இவ்வாறான புறச்சூழலில் சமய வாழ்வோடு பின்னி பிணைக்கப்பட்ட குழுத்தி முறைகளில் ஒன்றே கண்ணகி வழிபாட்டோடு அமைந்து கலை இலக்கிய செயற்பாடுகள் கூட மதம் சார்ந்த நெறிமுறைகளை இம்மக்களிடத்தில் ஒற்றிபோகின்றன. இதை உள்ளீடாகக் கொண்டு கடந்த ஏழாண்டு காலமாக கண்ணகி கலை இலக்கிய கூடல் தனது பார்வையின் வீச்சை செம்மைப்படுத்தி விரிவாக்கி செயல் வடிவம் கொடுத்து வருகின்றது.

இதன் பின்னணியை உள்வாங்கி கண்ணகி கலை இலக்கிய விழாமலர் - 2018 அழகிய மூவர்ண அட்டையுடன் விரிந்து மணம் வீசி மனதை கொள்ளை கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலர்கூடல் பரல் 7 இதழ் 112 பக்க வடிவமைப்பில் கண்ணகித்தாயின் வரலாற்று பெருமைகளை தாங்கி வெளிவந்துள்ளது.

"திருமாமணிநங்கை வந்தாள் எங்கள் தேசம் தளைத்திட வந்தாள் வந்தாள்! " என்ற மகுட வாசத்தை தாங்கி மலர்ந்த இதழானது கண்ணகித்தாயின் கோப ஆவேசபார்வையுடன் ஒருவகையில் சிலம்புடன் நீதி தேவதைதன் ஞாயத்தை வெளிப்படுத்தும் பார்வையில் முன் அட்டை விளக்கி நிற்கின்றது. பின்வரும் சிலப்பதிகாரப் பாடல் இவ்வமயம் நினைவூட்டுகின்றது.

"வாயில் கடைமணி நடுநடுங்க ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுகூடதான் தன் அரும் பெறல் புதழ்வனை ஆழியின் மடித்தோன் வெரும் பெயர் புகார் என்பதியே அவ்வூர் சொட்சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி வாசத்து வாணிகன் மகனை ஆகி வாழ்தல் வேண்டி, நின்பால் ஊழ்வினை துரப்ப சூழ்ழல் மன்னா, நின்நகர் புகுந்து ஈங்கு என்கால் சிலம்பும் பகர்த்தல் வேண்டி, நின்பால் கொலைக்களப்பட்ட கோவலன்மனைவி கண்ணகி என்பது என்பெயரே!"

என்று எடுத்துச் சொல்லும் பார்வையில் வீராவேச உணர்வோடு உணர்ச்சி பிழம்ப கண்ணகித்தாயின் வீர ஆவவேசப்படம் அட்டையை விளக்கி நிற்கும் காட்சி இம்மலரை உணர்வேடு உற்பிரவேசிக்க வைக்ககின்றது. பரல் 7 கூடல் தவிர்து ஆவணப்பதிவுகள் இவ்வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக்கிடக்கையை படம்பிடித்து வெளிச்சம் காட்டியுள்ளது. கண்ணகி இலக்கிய விழாப்பட்டையம் கூடலில் கூடுவோம். என்ற தொனிப்பொளில் கண்ணகி கலைஇலக்கிய கூடலில் அதன் செயலாளர் அன்பழகன் குருஸ் இவ்வாறு தன் அரை கூவலை விரித்துள்ளார். எட்டாவது கண்ணகி கலைஇலக்கிய பெருவிழாவானது செயல்பாடுகள் விரிவடைந்து வருவது முன்னுதாரண முன்னெடுப்பாக திகழ்கின்றது. இக்கூடலின் நோக்கமானது மக்கள் மயப்பட்டு வருவதன் அடையாளத்தினை இவ்விழா சான்றுப்படுத்தி நிற்கின்றது.

அத்துடன் இப் பிரதேசத்தின் மையமானது களுதாவளை மக்கள் முழுமூட்சுடன் இயங்கி கண்ணகி கலை இலக்கிய பெருமையை பரவலாக்கியது அதுமுக்கிய முனைப்பாகும். கண்ணகி அம்மன் பற்றிய பிரக்ஞையமும் அதன் பண்பாட்டு பாரம்பரியங்களும் கண்ணகி கலை இலக்கியங்களையும் விரிவாக்கம் செய்ய உந்து சத்தியகும் என்பதுடன் எமது கூடல் மேலும் கூடி மகிழ்ந்து கண்ணகி கலை இலக்கிய பண்பாட்டு தினத்தில் மக்களை ஒன்றினைக்கும் நம்பிக்கை எமது மனங்களில் சுடராய் துளிர் விடுகின்றது.கண்ணகி இலக்கியம் விழாப்பட்டையம் கண்ணகித்தாயின் செந்நெறிகளையும் தாற்பரியம் வேட்கை நெருடல்களையும் உணர்வுபூர்வ நெகிழ்வோட்டத்தை தருகினறது. தமிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகிகதை. அவளின் திண்மையும் தீரமும் நிறைந்த வாழ்வு மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ நாட்டில் பிறந்து பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து சேர நாட்டில் தெய்வமான கண்ணகி ஈழநாட்டில் தமிழ் சிங்கள மக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வமானாள். கண்ணகித்தாய் கிழக்கிலங்கையில் பண்பாட்டு அடையாளமாகியதோடு வைகாசித் திங்கள் அவளுக்குரிய தெய்வ நாளாக சித்தரிக்கப்படுகின்றது. கண்ணகியின் கதை சிலப்பதிகாரம் சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குறை, குளுத்திபாடல், அதனையொட்டிய நாடகம் கண்ணகி நாடகம் கண்ணகி வசந்தம் கும்மி கரகம் காவடி கொம்பு முறிப்பு குரவைக்கூத்து என தமிழில் கண்ணகி கலை இலக்கிய விரிந்து நிற்கின்றது. கூடல் தொகுப்பாசிரியர் த.இன்பராசா "முரசம்" என்ற பகுதியில் தனக்கே உரித்தான உணர்வோடு கவியுரையை தவழ விட்டுள்ள கவி வரிகள் இவ்வறு அடையாளப்படுத்துகின்றது.

எட்டுத்திக்கும் ஓர் அதிர்வு
ஏற்றம் பெற்ற விழா முதிர்வு
ஏட்டாது கவிதா வளையில்
கோட்டுதே முரசு குதுகளமாக
கண்ணகி இலக்கியம் கலையாமல் பெருகிட
கலைகளும் நிலையாகி பிழைாமல் உயர்ந்திட
மண்ணிலே கண்ணகி பண்னாடு ஓங்கிடும்
கண்ணகி விழா இது கதைபல சொல்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரை அலங்கரித்து ஆர்ப்பரித்த அணி செய்வதாக இருக்கின்றது. 2017ம் ஆண்டு மட்டகளப்பு கிரான் மகா வித்தியாலயத்தில் நிகழ்வுற்ற செய்திப் படங்கள் இது உண்மையில் நவிட்சன்று சென்ற காலத்தை இளைமிக்கவும் சமகாலத்தில் ஆவணப்படுத்தலைப்பார்த்து புரிப்படையவும் அதேவேளை யில் எதிர்காலத்தில் பொக்கிசத்தை கண்ணகி கலை இலக்கியத்தின் செயற்பாட்டை செவ்வியாக்கத்துக்கு கட்டியம் கூறவதாக மலர்பட நிகழ்வுகள் வரலாற்று தொடுப்பாக இருக்கம் என்பது வெள்ளிடை இம்மலர் பல காத்திரமான விடைய பரப்புக்களை தாங்கி நிற்கின்ற யதார்த்தத்தை கூறவேண்டியுள்ளது. இதில் தொக்கயுரை தலைமையுரை செயற்பாட்டறிக்கை (2011 - 2018) நூலாசாரியர் அறிமுகயுரை வெளியீட்டுரை ஏற்புரை என்பவற்றை வழமைபோல் தாங்கி முகிழ்ந்து பிரகாசித்து தவழ்கின்றது.

இம்மலரை நுகர்ந்து உணர்வு கொள்ளும் போது கண்ணகியின் கற்பின் சிலம்பு விரிந்து வியாபித்து நிற்பதுடன் சிலப்பதிகாரம் தரும் கற்பின்திறன் புகழப்படுவதை நாம் காண்கிறோம் இப்பாடலை கூறுவது பொறுத்தமாகும்.

மெய்யில பொடியும் விரிந்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையக்கோன்
கண்டனவே தோற்றான் - அக்காரிகை தன் சொல்
சொவியில்
உண்டனவே தோற்றான் உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலர் கண்ணகி தாயின் கற்புநிலமையையும் தெய்வீக தன்மையயும் விரவிநிற்பதை படங்கள் கட்டுரைகள் சொல்லாமல் சொல்லும் பாரம்பரியத்தை காணக்கூடியதாக இருக்கின்றது. இம்மலரில் இன்னும் சிறப்பாங்கை தவழவிடுகின்றது கூலவாணிகன் சாத்தனர் அரங்கு. இக்கூலில் உரைகளுக்கும் கருத்தோவியங்க ளுக்கம் பஞ்சமில்லை. இவ்வுரைகளே ஓர் இன அடையாளத்தின் முதுசங்களாகம். ஆய்வுகளை மேற்கொள்ள இருக்ம் இளம் ஆய்வாளர்களுக்கு இவ்வுரைகள் உசாத்துணையாக அமைவதாகும் என்பதற்கு இருவேறு கருத்தில்லை அந்தவகையில் இவ்வுரைகள் சான்றாதாரமாக அமைந்துள்ளது என்பது மிகைப்படுத்தப் படாத கூற்றாகும்.

இந்த உரைப்பணிகள் கற்பின் தாற்பரியத்தை கூர்மைப்படுத்துவதாக இருப்பது இப்பாடலை கூறமுடியும்.

தெய்வம் தொழுஆற் கொழுநன் தொழுவானன்
தெய்வம் தோழும் தகைமை திண்ணிதாய் - தெய்வமாய்
மண்ணாக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணாக மாதர்க்கு விருந்து

கவர்ச்சி வடிவமைப்பில் பார்த்து, படித்து பரவசமடையும் வாண்மையில் கண்ணகி கலை இலக்கிய கூடல் 2018 மலர் கண்ணகித்தாயின் தெய்வாம்சத்தை பறைசாற்றும் பணியில் அமைந்துள்ளது.விழாமலர் பொறுப்பாசிரியர் கதிரவன் த.இன்பராசா தலைமை பதவி நெறிப்படுத்தி வரும் செங்கதிரவன், த.கோபாலகிருஷ்ணன் அதன் செயலாளர் அன்பலகன் குருஸ் மற்றும் மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவைச்சேர்து ச.மதன், மா.தவராசா, து.நகுலேஸ்வரன் பங்களிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. ஆவரிகளின் உழைப்புக்கு கிடைத்த வெற்றியாகும்.

இந்த கூடல் மலரானது காய்தல் உவர்த்தலின்றி ஆய்வுரீதியாகவும் தமிழரின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை எடுத்தேம்பும் ஆவணக்குறிப்பாக இம்மலர் மலர்ந்துள்ளது. இதை படித்து பயன்பெறுவது ஒவ்வொறு தமிழ் நெங்சங்களிகளின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன் 2021/07/04

# 04. இரா அழகிரிசாமியின் ஸ்ரீ கல்யாண முருகன் திருஊஞ்சல் பாமாலை

பூத்துக் குலுங்கும் புத்தளம் மாவட்டம் புதுமைகள் பலவற்றை பரிண மித்த மாவட்டமாகும் கலை இலக்கியத்துறையில் வறுமை நிலையில் முன்னம் பின்னடைவைக் கண்டாலும் சமகால ஓட்டத்தில் புனைவு இலக்கியப் பரப்பில் அகலக் கால் பதித்து வரும் மாவட்டமாக முகிழ்ந்து நிற்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இம்மாவட்டத்தில் தமிழரின் கலை இலக்கிய ஆக்கப்படைப்பின் பரப்பில் தனக்கென்று முத்திரை பதித்தவர்களில் முன்னணி எழுத்துருவாக்கத்துக்கு கட்டியம் கூறி நிற்பவர்களில் சைமன் காசிச் செட்டி. அன்னாரின் படைப்புக்கள் தமிழரின் இருப்பை அதன் பெருமையை இன்றும் விதந்துரைத்துப் பேசப்படுவதென்றால் இவரின் பணைப்புத்துறை இன்னும் பேசப்படுவதென்றால் அதன் தாற்பரிய சிறப்பை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது என்றே கூறலாம். இம்மாவட்டதின் உள்ள முந்தல் கருங்காலிச்சோலை இன்னுமிடத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் வதிவிடமாகவும் வாழும் இரா.அழகிரிசாமி பல் துறை ஆற்றல் கொண்டவரராக மிளிர்கின்றார்.

தனது வதிவிடத்தில் கிராம சேவை உத்தியோகத்தராக கடமை புரிந்து ஓய்வு நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளார். சிறந்ததோரு இரு மொழி அறிவிப்பாளர், பேச்சாளர். ஆலய உற்சவங்களில் இருமொழியிலும் அறிவிக்கும் திறம கொண்ட அழகிரிசாமி பொது சேவையில் தன்னை அடையாளப்படுத்தி ஆன்மிகத் துறையிலும் மிக ஈடுபாடு கொண்டு உழைத்து வருகின்ற ஒருவராவார்.

முந்தலில் பூர்வீகமாக வாழ்ந்த ஆரம்ப கால மக்கள் 1957ஆம் ஆண்டளவில் கருங்காலிச் சோலை என்ற கிராமத்தில் குடியேற்றப்பட்டார்கள். கோவியில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாமென்ற வாக்கிற்கேற்ப ஸ்ரீ முருகனுக்கு சிறுகோயில் கட்டி வழிபட்டு வந்தனர்.

முருகனின் அருளால் வளர்ச்சியடைந்த இவ்வாலயத்திற்கு வருகை தந்த அருள் மிகு கிருவானந்தவாரியாரின் அருள்வராக்கால் இவ்வாலயத்துக்கு ஸ்ரீ கலியாண முருகன் திருக்கோவில் என்று பெயர் சூட்டி இவ்வாலயத்தை அடையாளப்படுத்தினார்.

அவ்வமயம் இவ்வாலயத்தின் பரிபாலன சபைத் தலைவராக அழங்கரித்தவர். இரா.அழகிரிசாமி அவர்கள்.

அன்று வாரியாரினால் மகுடம் சூட்டிய இவ்வாலயம் ஆல்போல் தழைத்து அருகு போல வேரூண்றி இன்று பூரணமிக்க ஆலயமாக ஆன்மிகப் பணியும் ஆத்மிக சேவையும் இவ்வாலயம் மேற்கொண்டு வருவதென்றால் மிகைப்படுத்தப்படாத குற்றாகும்.

இவ்வாலயத்தில் தன்னை ஈடுபடுத்தி ஆலய வளர்ச்சியில் ஆடுபட்டு வரும் அழகிரிசாமி பேச்சாற்றலுடன் கலை, இலக்கியத்துறையிலும் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். என்பதற்கு சான்றாக அவர் இயற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துள்ள "ஸ்ரீகல்யாண முருகன் திருஊஞ்சல் பாமாலை" அன்னாரின் கவியற்றலுக்கு சான்றுபகர்கின்றது.

அழகிரிசாமியின் கவித்துவப் பண்பு, கவியாற்றல், கவிசெந்நெறிகள், தனித்துவ சிறப்புக்களை உள்ளீடாப் பார்க்கையில் இவரின் ஆத்மிகப்பண்பு வெளிப்பட்டு நிற்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

அழகிரிசாமியின் இப்பாமாலையின் பாக்களை நுகரும் போது தனித்து அடையாளத்தின் நெறிமுறை பண்புத்தன்மை இழையோடி நிற்கின்றது. ஆன்மிகத் துறையில் அவரின் ஈடுபாடும் இசைவாக்கமும், கவிபுனையின் திறமையும் ஆத்மார்த்தமாக துளிர் விடுவதை காணலாம். எதிர்காலத்தில் இன்னும் பல ஆத்மீக சக்தி கொண்டவராக திகழ்கின்றார்.

இந்து மத செயற்பாடுகளில் முன்னுதாரணமாக திகழ்வது கிரிகைகளும் சடங்குகளாகும். இதை முன்னிலைப் படுத்தி கவிஞர் ஜி.ஏ.வி.முத்துவினால் 1980.02.06 திகதி நடைபெற்ற கும்பாபிஷேகம் நிகழ்வையிட்டு கருங்காலிச்சோலை முருகனை நினைத்து ஸ்ரீ முருகன் தோத்திர மாலை என்ற மகுடத்தின் 13 பக்தி பாசுரங்கள் வெளியிட்டார். அதன் பின்னர் இவ்வாலய மகிமையை சிறப்பை, அதன் செந்நெறிகளை உள்ளீடாகக் கொண்டு பாமாலை, பஜனைப் பாடல்கள், கல்யாண முருகன் பஜனைப் பாடல்கள் நான்கு, ஆலய கொடியேற்றத்துக்கான திருமுறைகள் ஸ்ரீ கல்யாண முருகன் நாம வழிபாடு 101 என்ற பாடல்கள் இம்மாலையில் மகிழவைக்கிதென்றால் மிகையில்லை இப்பக்தி உணர்வை ஏற்றடுத்தும் இப்பாடல்கள் படித்து லயிக்கும் போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாண ஸ்ரீ முருகனை கசிந்துருக்க வைக்கின்றது என்றே கூறலாம்.

28 பக்க வடிவமைப்புடன் மலர்ந்து மணம் பரப்பும் இம்மாலை மனதை மகிழ வைக்கின்றது. பக்தி உணர்வை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர் அழகிரி போன்ற இதில் தன் பெற்றோரை மலரடி பணிந்து தன்னை வாழ வைக்கும் கண்கண்ட தெய்வமான ஸ்ரீ கல்யாண முருகனுககு இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளார். இவ்வாலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ தர்ம சீலன் சர்மாவும் இலங்கை சிவன் மானிட மேம்பாட்டு நிறுவன அமைப்பாளர் சுவாமி இரா.கலியுக வரதன் தமது ஆசிச் செய்தியில் சைவர் ஒவ்வொருவரும் சமய தீட்சை பெற்றிக்க வேண்டும். எமது திட்டங்களில் சமய தீட்சை வழங்குவதே 2006 ஆண்டிலிருந்து இத்திட்டத்தை பல பாகங்களிலும் எமது நிறுவனம் நடாத்தியுள்ளது.

ஒரு அழகான குளக்கரை அருகில் எழிலுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கும் முருகனின் சிறப்பை அறிந்து மகிழ்ந்தேன். இவ்வாலயமானது கடந்த 40 வருடகாலத்தை 2021.2.06 பூர்த்தியடைகின்றது. இதன் மகிழ்மை பெருமை உணர்ந்த ஆலய ஸ்தாபகத் தலைவர் சிவதிரு இரா.அழகிரிசாமி இயற்றிய பாடிய ஸ்ரீ கல்யாண முருகன் திருவூஞ்சல் பாமாலை வெளிவருகின்றது. மகழ்ச்சி யாரும் சகலதுறை ஆற்றல் வாய்ந்த சிவத்தொண்டர் அழகிரிசாமி இயற்றிய பாடிய ஸ்ரீ கல்யாண முருகன் திருவூஞ்சல் பாமாலை வெளிவருகின்றது. மகிழ்ச்சியாகும். சகல ஆற்றல் வாய்ந்த சிவத்தொண்டர் அழகிரிசாமியினால் இயற்றப்பட்ட இந்நூலை ஒவ்வொரு இந்து மகனும் பாடி பயன்பெற வேண்டும் என்று ஆசிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகவியாளர் கலாபூஷணம் உடப்பூர் வீரசொக்கன் தமது வாழ்த்துச் செயதியில் விஜயனின் வருகைக்கு முன்னமே புத்தளம் மாவட்டத்தில் திராவிட பண்பாட்டுக் கூறுகள் முகிழ்ந்து நிற்பதாக ஆய்வுகள் தெரிக்கின்றன.

சமகாலத்தில் இம்மாவட்டத்தில் பாரம்பரிய கிராமங்கள் அதன் இருப்புக்கள் எச்சங்கள் அதன் அடையாளங்கள் ஏதோ அக - புறக் காரணிகளால் மறைந்துபோய் நிற்கின்ற போக்கை அவதானிக்க முடிகின்றது.

இம்மாவட்டத்தின் உள்ள இந்து ஆலயங்களின் வரலாறு அதையொட்டிய சிறப்புக்கள், பெருமைகளை ஆவணப் படுத்தப்படுவது காலத்தின் கட்டாய கடமையாகும்.

40வது பூர்த்தியிட்டு இந்நூல் வெளிவருவது எமக்கெல்லாம் பெருமையே நண்பர் இரா.அழகிரிசாமி கவிதையாற்றலுக்கு இந்நூல் கட்டியம் கூறுவதாக அமைகின்றது.

சமய மரபு முறைமைகளுக்கும் கிரிகைகள், சடங்கு சம்பிரதாயத்துக்கு முன்னுதாரணமாக் கொண்டு உழைக்கும் இவர் 28 பக்கங்களுடன் ஐந்து பஜனைப் பாடல்களையும் பண்ணோடு பாடற் கூடிய பல திருமுறைப் பாடல்களையும் 101 ஸ்ரீ கல்யாண முருகன் நாம வழிபாடு உள்ளாடக்கி இந்த "ஸ்ரீ கல்யாண முருகன் திருஊஞ்சல் பாமாலை" நூலை தனது கன்னி முயற்சியார் வெளியீட்டுள்ளார். தான் வாழும் சூழல் பெரும்பான்மை இனக்குழுழங்களை கொண்டாலும் நட்பின் அன்னியொண்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம் பிரளாத முறையில் அழகிரிசாமி முற்போக்கான சிந்தனையுடன் இன சௌயண்யக் கட்டமைப்பு முகிழச் செய்துள்ளார் என்றே கூறலாம்.

இந்நூல் கண்ணைக் கவரும் வண்ண வடிவமைப்புடன் வள்ளி தெய்வானையுடன் அழகு ஸ்ரீ முருகன் காட்சி தரும் அழகுக் கோலத்துடன் ஸ்ரீ கந்த கோட்டம் கருங்காலிச் சோலை முந்தல் வெளியீட்டுள்ளது.

இந்நூலில் மலர்ந்த பக்தி பாங்கான காத்திரமான கவிதைகள் கால ஓட்டத்துக்கு கட்டியம் கூறி நிற்கின்றது. அக்கவிப்பாக்கங்களை நூகரும் போது நூலாசிரியர் சமயப்பற்று கொண்டவர் சமய வாணராக வாழ்கின்றவர் ஆலயங்களில் நிகழும் சமய கிரிகைகள் எவ்வாறு சமய பற்றை துளிர் விடச் செய்கின்றதோ அதே போல் பக்தி உணர்வு கொண்ட பஜனைப் பாடல்களையும் இப்பாமாலையில் காணப்படுகின்றது.

பார் புகழும் அடியார் போற்றும் முருகா
பணிவார்க் அருள் புரியும் குமரா
பேர் சொல்லும் அடியார் வினைகளையும்
கருங்காலிச் சோலை கலியாண முருகா
ஊர் போற்றும் உலகோர் போற்றும்
கற்பகமே வேலவரே ஆடீர் ஊஞ்சல்

இந்துக்களின் சமய வழிபாட்டில் பிள்ளையார் வணக்கம் முதன்மை பெறுகின்றது. எந்த சமய நிகழ்வானாலும் கணபதி துதி முதன்மை பெறுகின்றது. நூலாசிரியர் பிள்ளையார் பஜனையில் இப்படி பாவடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பார்வதியின் புத்திரனே பிள்ளையாரப்பா – எம்
பாவங்களை தீர்திடுவாய் பிள்ளையாரப்பா – உன்
பாத மலர் தோத்திரித்தோம் பிள்ளையாரப்பா”

இப்பஜனைகளை பாடலக்ளைப் மனமுறுகழுப் பாடினாலும் சிறுவர்கள் இளம் இப்பாடல்களை பாடி மனமுருகி நின்றாலும் அங்கெ பக்தி ஊற்றேடுக்கும். நூலாசிரியர் சிறுவர்களுக்காக பஜனைப் பாடலை இவ்வாறு பாடியுள்ளார்.

பாலர் நாங்கள் ஒன்று சேர்ந்து
பஜனை செய்வோம் வாருமே
பாவங்களைப் போக்க வேண்டி
பஜனை செய்வோம் வாருமே
பாடிப் பாடி நாங்கள் நாங்கள்
எல்லாம் பஜனை செய்வோம் வாருமே
பாத மலர் பணிந்து நாங்கள்
பஜனை செய்வோம் வாருமே

சமய வாழ்வில் நம்பிக்கை மூலவேராகும் தான் நேசித்து வணங்கிய ஸ்ரீ கல்யாண முருகன் மூலம் தீராத நம்பிக்கையும் பற்றுதியும் கொண்ட நூலாசிரியர் தான் வணங்கும் முருகா மேல் மனமுறுகி நிற்பதை எடுத்துக்காட்டாக கலியாண முருகன் மேல் இவ்வாறு பாவடித்துள்ளார்.

கலிங்காரிச் சோலைக்கு வாருங்களேன் - எங்கள்
கலியாண முருகனைப் பாருங்களேன்
கருணை புரியும் வள்ளல் அவன்
தென் பெருமைதனைப் பாடுங்களேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வணங்கி நிற்கும் தெய்வங்கள் மேல் தீராத பற்றுக் கொண்டவர்களின் எண்ணிங்கள் ஆசைகள் அபிலாசைகள் நிறைவேற வேண்டி நிற்பார்கள். ஆனால் நூலாசிரியார் தனது கற்பனை எண்ண ஓட்டத்தை கவிதைகளாக பாற்களாக வடித்து தனது ஆத்மார்த்த உணர்வை வெளிப்படுத்தியுள்ளார் இப்பாமாலையில் அவரின் கவிதை ஆற்றலுக்கும் கவி வளர்ச்சிக்கும் இந்நூல் வெற்றி முகத்தை இனம் காட்டியுள்ளது. அவரின் ஆன்மீகம் தொடர வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/07/18

# 05. முந்தல் சூரிய காந்தியின் கவிதைகள் (இரசணை குறிப்பு)

புத்தளம் மாவட்டம் கலை இலக்கிய செந்நெறி வளர்ச்சிப் போக்கினது வறுமை நிலையில் பின்னடைவை காணப்பட்டது. ஆனால் அண்மை காலத்தின் இப்போக்கை மாற்றியமைத்து இவ்வப்போக்கை மாற்றியமைத்து அவ்வப்போது இலக்கியத்துறையில் ஆர்வமும் ஆற்றலும் ஆளுமை கொண்ட ஆற்றலாளர்கள் படைப்பிலக்கியத் துறையில் ஏதோ ஒரு வகையில் கவிதைகளாக சிறப்பு மலராக சிறுகதைகளாக ஆண்டு மலரகளாக மலர்விரித்து முகிழ்ந்து நிற்பதின் யதார்த்தத்தை உண்மை நிலையை வெளிப்படுத்தி நிற்பதை நாம் கண் கூடாக பார்க்கின்றோம், அறிகின்றோம், மகிழ்கின்றோம்.

இதை உள்ளீடாகக் கொண்டே முந்தலைப் பிறப்பிடமான கவித்தாயினி திருமதி. கே.சூரியகாந்தியின் கைவண்ணத்தில் உருவானதே "சூரிய காந்தியின்" கவிதைத் தொகுதி கரம் கிட்டியது.

இத்தொகுதியின் முன் அட்டை வண்ண மலரான சூரிய காந்தி மலர் பூத்து குலுங்கி புன்னகையுடன் மலர் விரித்துள்ளது. 34 பக்கங்களுடன் 34 கவிதைகள் காத்திரமான படைப்பாக தொகுதியை அலங்கரித்துள்ளது என்றால் மிகையில்லை.

கவிஞர் க.ப.அறவாணன் கவிதை இலக்கிண வரவை இவ்வாறு விதந்துறைக்கின்றார். உயிரை வெளிப்படுத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலாலும் - உயிர் சிறப்பது உள்ளத்திடமே. ஆகவே தான் உணர்த்து முறை கவிதையின் உயிர் எனவும், உள்ளடக்கம் எனவும், உருவம் கவிதையின் உடல் எனவும், கருத வேண்டும் மூன்றும் ஒன்றை ஒன்று சாரந்து நிற்கவே கவிதை முழுமை பெறுகின்றது. ஏதேனும் ஒன்று ஊனமானால் கவிதை நொண்டி ஆகிவிடும் உணர்த்தும் முறை என்ற உயிரில்லாத சொற்கூட்டம் வெறும் சடலமே.

உள்ளடக்கம் இல்லாமல் கவிதை எதுவும் பிறப்பதே இல்லை. மூன்றும் சரிசம விகிதமாக அளவாக இருக்கும் போது தான், கவிதை முழுமை பெறும் என்று கவிதைக்கு வரை விளக்கம் கூறியுள்ளார் கவிஞர் அறவாணன்.

முந்தலூரின் கவித்தாயான சூரியகாந்தியின் தொடர் வாசிப்பு மூலம் கருத்தாழ மிக்க பல தரமான கவிதைகளை படைக்க அனுகூலமாக இருந்துள்ளது. இக்கவிதைகளை நாம் நுகரும் போது கவிதைகளுக்குரிய உயிர், உள்ளடக்கம், கவி கருவூலங்கள் விரவிக் காணப்படுவதை அறியமுடிகின்றது.

புதுக்கவிதை வடிவில் அமையப்பெற்ற இக்கவிதைகள் வரையறை பிசகாமல் துளிர் விட்டுள்ளது. எனக் கூறலாம். மேம்பாட்டை பாடுபொருளாக விரித்து இக்கவிதைகள் அடிமட்ட மக்களின் உணர்வுகள் இழையோடி நிற்பது துல்லியப்படுத்தப் பட்டமையானது கவித்தாயினி சூரிய காந்தியின் வெற்றி முகத்தை கோடிட்டு காட்டுகின்றது.

பூத்து புன்னகை தவழ்ந்து நிற்கும் இக்கவிதை மலரிலே வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கவிதையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்தின் பலன் என்ற தலைப்பு வரை 34 கவிதை மணம் வீசி மனதை மகிழ வைக்கின்றது.

இத்தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய புத்தளம் மாவட்ட செயலகப்பணிமனையில் ஓய்வு நிலை திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.கனகசபை (பி.ஏ) தனிமை வாட்டமும், வாழ்வின் அனுபவமும் முதுமை வாழ்வின் அனுபவமும் - வயது முதிர்த்தியும் இவரை கவிதை எழுதத்தூண்டியது என நினைக்கின்றேன். இவர் படைத்த கவிதைகள் முதுமையின் உள்ளக்குமுரல், இவ்வாழ்க்கையின் ஏக்கமும் போன்ற அனுவத்தின் உண்மைகளை உணர்த்துவதாக அமைந்துள்ளது மற்றும் மரத்தின் மகிழ்மை, மழையின் பெருமை, பூக்களின் சிறப்பு என்பன இவரின் ஈடுபாட்டையும் சமூகச் சிந்தனையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. கவிஞர்கள் பிறப்பதில்லை, சூழ்நிலையால் உருவாக்கின்றார்கள் என்பது கவிஞர் சூரிய காந்தியின் கவிதைகள் சாட்சி. சமூகப் பணிதொடர வாழ்த்துக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இத்தொகுதியில் உள்ள கவிதைகளை நுகரும் போது கவிதைகள் வெவ்வேறு கோணத்தில் படைக்கப்பட்டுள்ளது. நாட்டின் நடப்புக்கள் வாழ்வாதாரப் பின் புலம் காதல் கனிவுகள் என்பன உயிர் பெற்றுள்ளன.

வாழ்க்கை என்ற ஓட்டத்திலே மேடு பள்ளங்களை சந்திப்பதுடன் அதில் இன்பமும் துன்பமும் வந்தாக வேண்டும் என்ற தூர நோக்குடன் அர்த்த புஷ்டியுடன் ஆணித்தரமான பாடு பொருளாகக் கொண்டு "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற கவிதையை இவ்வாறு வடித்தள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் படைப்போ பல விதம்
இன்பம் துன்பம் சேர்ந்தது தான் வாழ்க்கை மனிதா!
துவன்டு வந்தது என்று துவண்டு விடாதே
காலம் வரும்...! நல்வாழ்வுக்கு தயங்கா....!

தமிழரின் சமூதாய கட்டமைப்பில் உறவின் அடிநாதமே வாழ்வுதான். அந்த உறவானது பல்கி பெருகி பரிணாமம் விரியும் போது - தாய், தந்தை, சேய், அண்ணன், தம்பி ஏன் விரிவடைந்து உறவு பாசம் பரிணமிக்கும். "உறவைபாடு" பொருளாகக் கொண்டு தத்ரூபமாக தனது கவிதைப் புலனை இவ்வாறு வரித்தள்ளார்.

"தாயின் உறவுகள்
பலவிதம்
தந்தையின் உறவுகள்
பலவிதம்
இரண்டு உறவுகளும்
படும்பாடு ஒருவிதம்
இளமை வரும் உறவே
ஒருவிதம்
முதுமையில் வரும் உறவே
ஒருவிதம்"

அன்பின் ஊற்றின் பிரவாகமே உறவுகள். பெற்றோர் உறவு காலத்தில் அழியாது என்றாலும் அன்பின் காதல் உறவு நேசத்தின் அடையாளம். வாழ்க்கை பயணத்துக்கு திருமணம் கொண்ட காதல் ஒரு மனமாக பரிணமிக்கும் போது அழியாத ஊற்றாகி விடும். அந்த காதல் உறவை பரிக்கவோ தடுக்கவோ முடியாதல்லவா. அந்த பாசப்பிணைப்பின் தாற்பரியத்தை கவித்தாயினி தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வோடு இணைந்த உறவை கவிதையாக வடித்துள்ளார். அது

"இன்னொரு பிறவி தந்தால்
இறைவன் மீண்டும்
நாம் ஒன்று சேர்ந்து உலகே
பூனலாமே தோழா
உன் நினைவுகள் வந்து வந்து
போகிறதே தோழா
என் திருமணம் நடந்தது
உனக்குத் தான்
அழைப்பிதழ் அனுப்பிகிறேன்
தோழா"

கவித்தாயின் பெரும்பான்மையான கவிதைகள் வாழ்வின் பகைப்புணர்வை அப்பட்டமாக வடித்துத் தந்துள்ளார். இவர் கையாளும் மொழி நடை கவர்ச்சியுடன் காந்த சக்தியான இழையோடுவதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இவரின் பெரும்பான்மையான கவிதையின் ஊடாட்டமானது தனது வாழ்வில் ஏற்பட்ட தெளிவு சுழிவுகளை வயது முதிர்ந்த நிலை தென்பட்டாலும் சில கருத்துருவாக்கத்தை பூடகமாக புனைந்துள்ளார். அவரின் வெற்றிக்கு இக்கவிதைகள் சான்றாதாரமாக துலங்கி நிற்கின்றது.

சமகால ஓட்டத்தில் இப்பிரதேசத்திலிருந்து பூத்து மலர்ந்து புன்னை தரும் இவ்வகையான ஆக்கப்புனைவுகள் தமிழரின் இருப்பை கோடிட்டு காட்டும் என்பதுக்கு இருவேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கு இடமில்லையென்றே கூறலாம். கவிதை சூரிய காந்தியின் வருகை வரப்பிரசாதமாக திகழும் என்பது ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/08/08

# 06. சித்தி பருத்தாவின் மலராத மொட்டுக்கள்

சமகால ஓட்டத்தில் இளம்பராய சிறார்களிடத்தில் வாசிப்பு பழக்கம் சற்று பின்னடைவைக் கண்டு முனைப்புப் பெற்றதாக சொல்லப்பட்டாலும் ஏதோ ஒரு வகையில் புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்கள் எழுத்துத் துறையில் ஆர்வத்திலும், ஆற்றலிலும் உந்தப்பட்டடு பல ஆளுமைகள் புனைவு இலக்கியத்துறையில் தத்தம் செந்நெறிகளை எழுத்துருவாக்கத்தில் தமது பங்களிப்பை பகிர்ந்து வருவது என்பது யதார்த்த வெளிப்பாட்டின் உண்மையாகும்.

இந்த அடிநாத்தத்துடன் எமது நாட்டில் ஏதோ ஒருவகையில் மூலை முடுக்கில் தமது படைப்பிலக்கியத் துறையில் கால்பதித்து வருகின்றார்கள் என்பது வெள்ளிடைமலை. அவைகள் சிறுகதை, கவிதை, கட்டுரைத் தொகுதிகளாக பத்தி எழுத்து வடிவங்களாக முகிழ்ந்து நிற்பதை காண்கின்றோம். குறிப்பாக கூடுதலாக புது கவிதைத் தொகுதிகள் வெளியிடப்பட்டு வருவதை அவதானித்து கூடியதாக இருக்கின்றது.

அதன்படி புத்தளம் மாவட்டமும் இந்த வெளியீட்டுத்துறையில் தற்போது அகலக்கால் பதித்து வருகின்றது. சிந்து இதில் ஓர் அங்கமாக சிலாபம் சாகித்தம்பி பரீதாவின் கைவண்ணத்தில் உருவானதே புதுக்கவிதை தொகுதியான மலர்ந்த மொட்டுக்கள். இது மலர்ந்தும், மலராமல் மனதை கொள்ளும் முறைமையில் மணம் பரப்பி மொட்டு விரித்துள்ளது. "மலராக மொட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்த இந்த புதுக்கவிதைத் தொகுதி நாலாபுறமும் மனத்தில் நிறைந்த வடுக்களை வண்ணத்தமிழில் எண்ணக்குவியலாக பாடுபொருளாக படைத்துவடித்துள்ளார். இது இவரின் வெற்றிக்கு சபாஸ் என்று கூறலாம்.

இன்று பரந்தளவில் புற்றீசல் போல் எழுந்துவரும் புதுக்கவிதை புனைவை தனது ஆய்வு செய்த பேராசிரியர் க.அ.அறவாணன் இவ்வாறு பகிர்ந்துள்ளார் கவிதையின் உயிர், உள்ளம், உடல் தனது ஆய்வு நூலில். (பக்கம், புதுக்கவிதை 367)

ஒரு கவிதையின் வெற்றி உருவத்தில் இல்லை. உணர்ந்தும் முறையிலே இருக்கின்றது. ஒரு கவிதையை அனுபவிக்கிற பொழுது, அது வெண்பாவில் எழுதப்பட்டதா? விருத்தத்தில் எழுதப்பட்டதா? என்பதை விட எப்படி எழுதப்பட்டிருக்கிறது என்பதுதான் முதன்மையானது. பண்டத்தின் சிறப்பு கொண்டு வந்த பண்டத்திலா இருக்கின்றது? இல்லை லட்டைக் கையில் ஏந்தி வந்தாலும் ஒன்று தான் பையில் எடுத்து வந்தாலும் ஒன்று ஒன்றுதான். தாளில் பொதித்து எடுத்து வந்தாலும் ஒன்றுதான்! கையோ தாளோ பையோ லட்டின் சுவையைத் தீர்மானிக்கப்பது இல்லை. இவற்றைப் போலவே கவிதை என்ற பொருளைத் தாங்கி வருகின்ற கருவிதான் உருவம். கருவி மாறின அளவிலேயே கவிதையே இல்லை என்று தீர்மானிப்பது பேதைமை. மதிப்பீட்டாளன் பார்வை, உருவத்தில் பதியலாகாது உணர்த்தும் முறையிலேயே பகிதல் வேண்டும்.

எனவே பழைய கால யாப்பு உருவங்கள் இல்லை என்பதற்காக புதுக்கவிதைகளை புறக்கணிப்பது பொருந்தாது என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் மாவட்டம் என்பது வடமேல் மாகாணத்தின் ஓர் கூறாகும். இம்மாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களின் இருப்பை, அதன் செழிப்பை கோடிட்டு காட்டுவதாக காணப்படுவது புத்தளம் நகர், புற நகர் தமிழ் பேசும் மக்களின் வாழ்வுப் பின்புலமாகும்.

இம்மாவட்டத்தில் புனைவு இலக்கியமானது 19ம் நூற்றாண்டில் கால் கோளிடப்பட்டது. அன்று வாழ்ந்த சைமன் காசிச் செட்டியின் வரலாற்று ரீதியான தமிழ் ஆய்வுகள் அன்றும் இன்றும் காலத்தால் பேசப்படும் கண்ணாடியென்றால் மிகைப்படுத்தாத கூற்றாகும்.

அன்றே ஆரம்பித்து எழுத்துருவாக்கங்கள் பல ஆளுமைகள் உருவாக்க பல முனைப்பு பெற்றுள்ளது. அவ்வரிசையில் கவிஞர்கள் தோன்றி காலத்தால் மறக்காத கவிபுனைவுகளை மேற்கொண்டுள்ளார்கள். அவ்வரிசையில் தேடல் பெரி.சோமாஸ்கந்தர், பி.எஸ்.பிள்ளை, பி.பி.மிரான்டா, விகே.வி.முத்து, ராஜகுரு சேனாதிராசா, கனகரத்தினம், கிட்ணன் ஸ்ரீஸ்கந்தராஜா தெய்வா அமிர்தலிங்கம், இம்மானுவேல் புஸ்பராஜா, முந்தல் கே.சூரியகாந்தி, உடப்பூர் வீரசொக்கன் போன்றவர்கள் அவ்வப்போது கவிதை உலகில் உலா வந்து ஆக்கப்பூர்வமான கவிதை படைத்துள்ளார்கள். இதை அடியோற்றி பல கவிஞர்கள் தோன்றுவதற்கும் அனுகூலமாக இருந்து வழிகாட்டியுமுள்ளார்கள் என்பது மனம் கொள்ளத்தக்கது.

என்றாலும் எமது நாட்டிலும் தரமான, தகுதியான பல புதுக் கவிதையாளர்கள் தோன்றி காலத்துக்கு ஏற்ற, கரை படியாத கவிதைகள் படைத்துள்ளார்கள் என்பது விமர்சன ரீதியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மலர்ந்து மொட்டு கவிதை தொகுதி கவிதைகளை விரித்துள்ளது மலராத மொட்டுக்கள். புதுக்கவிதை தொகுதி இதில் 47 கவிதைகள் 56 பக்கங்களில் தவழ்ந்து மலர்ந்துள்ளது. (தென்னிந்தியா, கீழக்கரை தாசிம்பீவீ அப்துல்காதர் மகளீர் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.சுமையாவின் அணிந்துரை அர்த்தப்புஷ்டியுடன் ஆர்ப்பரித்து அணிகலமாக அலங்கரித்து நிற்கின்றது.

(வடமேல் மாகாணத்தின் கரையோர நகரமாக அமைந்துள்ளது சிலாபம். அங்கு வாழ்ந்து வருபவர்தான் சித்தி பரிதா. இவர் 60 வயதைக் கடந்துகொள்ளுப் பேரன் பேத்திகளைக் கண்டபோதிலும் தன்னுடைய எழுத்துப் பணியை ஆரம்பித்து அலுக்காமல், சலிக்காமல் தொடர்ந்து எழுதி வருவது இளைய தலைமுறைக்கு ஒரு உத்வேகம் உணர்வை ஏட்படுத்தியுள்ளது.

இறை நம்பிக்கையும் இறையச்சமும், மனித வாழ்வின் அடிப்படை என்றும், இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இஸ்லாமிய வாழ்க்கை முறைகளை மிக நுணுக்கமாக ஆதாரங்களுடன் தெளிவாக எழுதியுள்ளார்.

ஒரு கவிஞனோ வேறு வகை படைப்பாளியோ எவராக இருந்தாலும் இடையறாத தாகமும் தேடலும் இருக்கும்போது தான் ஒருவர் எழுத்து உருவாக்கத்தில் அகலக் கால பதிக்க முடியும் என்பது யதார்த்த உண்மையாகும்.

மனித குல மேம்பாடு என்ற இலட்சியத்தோடு இயங்கும் இவரது பயணம் கவிதை உலகில் சிறக்க இறைவனை வேண்டுகின்றோம். கட்டுரையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியரைப் பற்றி பின் அட்டை குறிப்பில் இவ்வாறு பகிர்ந்துள்ளார்.

தம்பி சித்தி பரிதா எழுத்துலகில் பிரகாசிக்கும் தாரகை, ஆன்மீகத் துறையில் ஈடுபாடுடன் உழைத்து இவர் எழுத்தாளராக எழுத்துலகில் இனம் காணப்பட்டார். இன்று கவியுலகின் கவிஞராக உலாவரும் சித்தி பரிதா வீச்சான கவிதைகளை காத்திரமாக படைத்துள்ளார். சமூகப்பிரக்ஞையுடன் இவரின் புத்தகங்கள் குறிப்பாக இஸ்லாமிய பெண்களிடத்தில் நல்ல வரவேற்பை பெறும் என்றால் மிகையில்லை.

இத்தொகுதியில் சமர்ப்பணத்துடன் கல்லறைக் கண்ணீர் தொடங்கி இதோ அந்த பூவையின் புலம்பல் வரை கவிதைகள் இதழ் வரித்துள்ளன. படிக்கவும் பகரவும் ருசிக்கவும் நுகரவும் தரமான கவிதைகளாக இனம் காணப்படுகின்றது.

இவர் சமூக நெறி, வாழ்வாதாரனம், காதல் உணர்வுகள், தன் வாழ்வு பின்னணியை நினைவு படுத்தும் உணர்வுகள், சமூக மயக்கம், மத உணர்வுகள் போன்ற இன்னோரன்ன நிலையில் தனது நிலையின் சங்கமங்களை பாடுபொருளாக கவிதைகளாக வடித்துத் தந்துள்ளார். இதில் கவிதை நயமும், கவிச் சிறப்பும் இக்கவிதைகளில் இழையோடி ததும்பி நிற்கின்றது.

தொழில் நுட்பம் விஞ்ஞானம் உலகை ஆட்டிப்படைத்தாலும் கண்டு பிடிப்புக்களும் புதிய நவின கருவிகளும் இருந்தாலும் கூட சில நோய்களுக்கு இன்னும் விஞ்ஞான உலகம் கொடிய நோய்களை தீர்க்க மருந்துகள் இன்றி மனித குலம் மாண்டு மடிவதை அனுபபூர்வமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகின்றோம். உணர்கின்றோம். ஆனால் கவித்தாயி சித்தி பரீதா ஆன்மீக ரீதியில் இறைவனிடம் கையேந்தி நின்றால் தீராத நோய்களை தீர்க்க மருந்துண்டு என தனது கவிதையில் இவ்வாறு விரித்தள்ளார்.

"எல்லா நோய்களுக்கும் மருந்துண்டு குர் ஆனிலே
தைத்தானை விரட்ட மருந்துண்டு குர்ஆனிலே
துன்பத்தில் வாடுவோருக்கு குர்ஆனிலே
அதை நினைத்து நித்தம் ஒதிடுங்கள் குர்ஆனிலே..."

பாசம் உறவாடும் சந்திப்புக்கள் காலத்தால் அழியாத சுவடுகளாகும் பந்த பாச உறவுகளை விட அன்னிய நேயமும் அன்பின் காதல் உறவும் கலந்த இனம் சிட்டுகளிடத்தில் அரும்ப ஆர்ப்பரிக்கும் சந்திப்புகள் ஈருடலும் ஓர் உயிராக தாவும் போது அந்த சந்திப்புக்கள் அழியாத மறக்காத மறவாத ஆத்மாத்த உறவு வீரியம் பெறும். அந்த சந்திப்பை நினைத்து மீண்டும். சந்திப்போம் என்ற கவிதை வரி அன்பின் உள்ளக் கிடைக்கை அப்படியே படம் பிடித்து காட்டுவதாக அமைகின்றது.

"உன்னோடு நானிந்த
ஒவ்வொரு மனித்துளியும்
மறக்காது உயிரே
மரணப்படுக்கையிலும் மறக்காது
இன்னும் நினைத்தாலும்
இதயம் தவிக்கிறதே
அந்த நினைவுகளின்
அலை வந்து அடிக்கிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் துறையில் சிறந்த கவிதைகளை படைத்து வரும் தம்பி சாஹிப் சித்தி பரிதாவின் இக்கவிதைத் தொகுதி இளம் கவிதை கவிஞர்களுக்கு வரப் பிரசாதமாக அமையும் என்பது ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/09/12

## 07. "றைஸாஹீனாவின் பொற்தூரல்..." தரும் புதுமை கவிகள்

கல்விவளர்ச்சியே தமது அடிநாத வேட்கை என்ற குறிக்கோளுடன், ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக நிதர்சன எண்ணப்பாங்குடன் இயங்கி வரும் அருவிருட்ஷம் என்றும் கல்வித்தாபனம் துரித கல்வி, சடூக மேம்பாடு என்றும் செயற்பாட்டில் மொத்த வடிவமாகும் என்றால் அது மிகையல்ல.

இவ்விருட்ஷத்தின் தடங்களை பூடகமாக நோக்குகையில் இளம்பராய சீறார்களின் கல்வி மேம்பாடு அதனோடு இசைந்த எதிர்கால முன்னேற்றமே இவ்விருட்சத்தின் தாரக மந்திரமாகும்.

இந்நிறுவனமானது 2003 கால்கோளிடப்பட்டு அமைதியாக அடக்கமாக நிதர்ஷன உணர்வோடு, ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரூண்டி இயங்கி வருகின்றது. கடந்த 19 வருட காலமாக அரச பொது பரீட்சையில் சித்தியடைந்த 2000 மாணவர்களை கௌரவித்து பரிசுகள் வழங்கியதுடன் கலை, இலக்கியத்துறையில் அகலக்கால் பதித்து சாதனை புரிந்த கலை உள்ளங்கள் 120 பெருந்தகைகளை சிறப்பித்துடன் 15 மேற்பட்ட புத்தக வடிவங்களை வெளியீட்டு வைத்த பெருமையும் இந்த அறிவிருட்ஷம் என்ற இந்த நிறுவனத்துக்கே பெருமையும் சிறப்புமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தபட்ட தூரநோக்குடன் பேதமில்லா பெருமையுடன் இவ்விருட்ஷத்தின் இசைவாக்கமானது வழிகாட்டும் நிறுவனமாக இச்செயல்பாடுகளே இவ்விருட்ஷத்தின் முதுசமென்று விதந்துறைக்கப் படுகின்றது.

அத்துடன் இப்பிராந்தியத்தில் முன்னணி வகிக்கும் கலைஞர்கள், கவிஞர்கள், புத்துஜீவிகள், ஊடகவியாளர்கள், நாடகவிற்பனர்கள் மற்றும் பல்துறை ஆளுமைகளையும் கௌரவித்து பெருமைப்படுத்தும் சிறப்பு இந்நிறுவனத்தின் தனிச்சிறப்பம்சங்களில் ஒன்றே. அதுவே தாரக மந்திரமென்றாலும் மிகையல்ல.

இந்நிறுவனத்தின் பணிப்பாளர் ஐ.எம்.சுறைஸ், அதன் செயல்பாட்டாளர் ஏ.ஆர்.றிஸாமனா (முல்லை றிஸானா) இவ்விருவரின் செயல் வடிவமானது வெறுமனமே இயங்கும் தாபனமில்லாது இது கல்வியை, கலையை அடைாளப்படுத்தும் விருட்ஷமாக பல்கி பெருகி பரிணமித்து துளிர் விட்டு பிரகாசித்து முகிழ்ந்து நிற்கின்றது.

இவ்விருட்ஷத்தின் ஆக்கப்பணிகளாவது நூல் வெளியீடுகள், சிறுகதை தொகுப்புக்கள், கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டு ஊக்கப்படுத்தும் நற்பணி புரியும் இவ்விருட்ஷமாக செயல் உருப்பெற்று வருகின்றதென்றே கூறலாம்.

இதை பின்புலமாகத் கொண்டு இளம்கவித்தாயினி றைஸாஹீனாவின் “பொற்தூவல்” என்ற கவிதைத் தொகுதி கரம் கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்சதுர வடிவில் கையடக்கத்துடன் கண்ணைக் கவரும் வண்ணமலராக எண்ணச் சிறகடித்த கவிதைகள் கவி விரித்துள்ளது. 60 கவிதைகள் முத்து முத்தாக முகிழ்ந்து நிற்கின்றது. கொத்துக் கொத்தில்லாமல், படிக்க, நுகர அதை ரசிக்க புதுமை கவிகள் புதுக்கவிதைகளாக காத்திரமாகவும் கச்சிதமாக சின்னக்கவிதைகள் சிங்காரம் புரிகின்றது. றைஸாஹீனாவுக்கு சபாஸ். வளர வாழ்த்துக்கள் என்றே கூறலாம்.

இக்கவிதைகளை படிக்கும்போது றைஸாஹீனாவின் கவி ஆற்றல், ஆர்வம், மனித நேயம், கவி செந்நெறிகள் பட்டவர்த்தனமாக துலங்குகின்றது. எதிர்காலத்தில் சிறந்த கவிபுனைவுக்கு கட்டியம் கூறுவதாக அமையும் என்பது யதார்த்தமாகும்.

இக்கவிதை தொகுதியில் சமர்ப்பணம் கூட எதிர்கால கனவை நனவாக்கும் முறையில் துளிர் விட்டுள்ளது. அது

“என் கனாக்களை இரசிக்க வைக்கும் என் தூவலுக்கு இக்கவிதைகள் சமர்ப்பணம்” விரித்துள்ள பாங்கு உணர்வையும் உறவையும் படம் பிடித்து காட்டுகிறது.

ஆத்மாத்த நேய உணர்வோடு ஆணித்துரையை பிரக்ஞை பூர்வமாக தீட்டியுள்ளார். கலைம்சமும் கவிதை உணர்வோடு கவிஞர் கலைவாதிகலில் சித்திர வடிவில் தந்துள்ளார். ஆதை பார்க்கவும் படிக்கவும் மெய்உணர்வை ஏற்படுத்துவதாக துளிர் விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னப் பறவையொன்று
சிறகடித்து பறக்கின்றது
பென்னம் பெரும் கனவும்
பெட்டகத்தை சுவந்த படி...!"

சுவை கொட்டி சுவை தருகிறது. இவ்விருட்ஷத்தின் அசைவாக்கத்துக்கு அர்த்த புஷ்டியுடன் இயங்கும் மூல விசையை இந்நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.சுறைஸ் அவரின் பார்வையில் பதிப்புரை பவ்வியமாக பாசமழை பொழிகின்றது. இக்கவித்தாயினி றைஸாஹீனாவின் தகப்பனார் என்ற முறையில் இது எனது மகளின் கன்னிபடைப்பான பொற்தூவல் வெளிவருவதையிட்டு ஆனந்த மடைகின்றேன். சமகால ஓட்டத்திற்கேற்ப குறுகிய அடிகளைக் கொண்டு வாசகர்களின் மனதைத் கொடும் அளவிற்கு அவ்வரிகள் ஆழமாக இருப்பதை உணர்கின்றேன். இவரின் முயற்சி மேலும் முன்னேற்றம் அகமகிழ வைக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இத்தூவலில் துளிர் விடும் பொற்தூவல் தொடங்கி பெண்ணடிமை வரை 60 கவிதை பூக்கள் பூத்து புன்னகை செய்து சுடர் விட்டு மனதை லயிக்க வைக்கின்றது. இக்கவிகளின் வெற்றிக்கு இலகு தமிழில் பிரக்ஞை பூர்வமாக கவிதை என்பதால் வெற்றி முகத்தை காட்டும் யதார்த்தம் துல்லியமாக துலங்கி நிற்கின்றது.

பிறப்பிடம் வடபுலம் ஆனாலும் வாழ்விடம் வளர்விடம் புத்தளம் மண். வாழ்க்கை வாழ்வதற்கென்றி வாழ்ந்து காட்டி அதன் தெளிவு சுழிவுகளை இனம் கண்டு வாழ்வதே அதன் உயர்வின் சிறப்பு பெருமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் பட்டவர்த்தனமாக படம் பிடித்து காட்டும் கண்ணாடியாக இக்கவிதை அமர்ந்துள்ளது. அது

"வாழ்க்கை நாடக மேடை
வன்மையான உறவுகள்
மென்மை இதயங்கள்
வல்லர (சாபதும்)
ஏடுகளில் காவியமாவதும்
புரித்திட்ட உண்மைகள்..."

கவித்தாயிறைஸாஹினா வளர்ந்து வருவர். இவர் கவிதைகளை ரசிக்க, சுவைக்க, லயிக்க காத்திரமான கவிதை புனைவுகளை கச்சிதமாக இவ்வகையான கவிதைகளைப் படைத்துள்ளார்.

இத்தொகுதியில் எடுத்துக்காட்டாக "பால்ய நினைவுகள்" தரும் கவிதையானது கனவுகளை சுமர்ந்து நனவுலகில் சஞ்சரிக்கும் உணர்வை வெளிப்படுத்தி நிற்கிறது. இக்கவிதை கருத்துக்கள் முத்துசரமாக முகிழ்ந்து நிற்கிறது.

"கடந்த காலத்தைப் பற்றிய
கவலை இல்லை
கல்வியை கரை தேடும்
போட்டி இல்லை
கனவுகளை நனவாக்கத்
தேவை இல்லை
மீண்டும் என் வாழ்வில் தேடும்
இனிய காலம் இதுவே...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைஸாஹினா தந்த கவிதைகளில் மனதை கொள்ள வைப்பதுடன் கவிகளில் யதார்த்த தன்மையை வெளிப்படுத்தி நிற்பதை அறிகின்றோம். அழகு இலட்சனத்தை தரும். அழகு என்பது அதன் பேசும் பொருளை படம் பிடித்துக் காட்டும் பொதுவாக அழகைப் பற்றி இவ்வாறு கிராமப்புறத்தில் அழகின் தாற்பரியத்தை விதந்துரைப்பை பார்க்கையில் ஆண்களுகது அழகு மீசை, பெண்களுக்கு அழகு மார்பு என்பதை கிராமபுறங்களில் பேசப்படுவதை காண்கிறோம். ஆனால் கவிஞரின் பார்வையில் அழகு பற்றி ஆணிவேவை படம்பிடித்து காட்டியுள்ளார்.

"கண்மைக்கு விழிகள் அழகு
வெண்மைக்கு பற்கள் அழகு
தொன்மைக்கு கலைகள் அழகு
பெண்மைக்கு மௌனம் அழகு..."

இத்தொகுதியில் முழுக்கவிதைகளை அனுவபத்துடன் அனுபவித்து நுகரும் போது கவிதையில் காணப்படும் படிமங்கள், கவிதன்மை மனித நேயம் என்பதை இழையோடுவதே பூடகமாக தெளிந்து நிற்பதை அறிந்து உணர்ந்து கொள்ள முடியும்.

பெண்ணின் பாதத்தை பேசும் இக்கால கட்டத்தில் பெண்கள் உரிமைக்காக இயக்கநிலை சார்பாக குரல்வளை மேலோங்கி நின்றாலும் பெண்கள் உரிமைகள் பற்றியும் இவரின் கவிதை வரிகள் உரிமைக் குரல் எழும்பி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளி மாணவியாக கற்றல் நிலையில் தவழும் றைஸாஹினாவின் கவிதைகள் காற்றில் பறக்கும் கவிதைகளில்லாமல். பிரக்ஞை பூர்வமான மனித மேம்பாட்டை பேசும் கருத்தாடல்மிக்க கவிதைகளாகவும் துளிர் விட்டு நிற்கின்றது.

படைப்பிலக்கியத்துறையில் மின்னும் தாரகையாக ஜொலித்து ஒலிக்கும் றெஸாஹினாவின் கவிதைகள் காலம் தோறும் பேசும் கவிதைகளாக துலங்கும் என்பது ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/09/12

# 08. பு/புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயம் நூற்றாண்டு சிறப்பு மலர் (100th) TELEBRATING

"இறையோனே, உமர் பாரூக் கலையகத்தன்னில்... அன்னையரும் தந்தையாரும் ஆசான் யாவரும் சதா இன்புறவே நீயும் அருள்தா.." என்று தொடங்கும் பாடசாலை கீதத்துடன் இவ்வித்தியாலய நூற்றாண்டு மலர் மலர்ந்து மனத்தை கொள்ளை கொண்டுள்ளது.

தான் பிறந்த ஊரின் மகிழ்மையை பெருமையை உள்ளன்புடன் அறியாதனவாக, தெரியாதனமாக, புரியாதவனாக இருப்போமானால் நாம் பிறந்தமைக்கே அர்த்தம் இல்லாமல் போய் விடும். அதற்கிணங்க புளிச்சாக்குளம் என்ற ஊரின் வரலாறு, அதனோடு இசையாக்கம் புரியும் உமர் பாரூக் மகா வித்தியாலயத்தின் வரலாற்று தடயங்கள் என்பன ஆவணப்படுத்தப்பட்டுள்ள தென்பது தாம் பிறந்து வளர்ந்த மண்ணின் மகிழ்மை சுடர் விட்டு நிற்கின்றது என்பது யதார்த்த உண்மையாக தெரிகின்றது.

எமது நாட்டை ஆட்சி புரிந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் போன்றவர்கள் எமது நாட்டை ஆட்சி புரிந்தடன் தமது தேவைக்கேற்ற முறையில் நாட்டை ஆண்டதுடன் சுரண்டியும் சூறையடினார்கள் என்ற வரலாற்று நிகழ்வுகளை நாம் அறிந்தவர்களாக - உணர்ந்தவர்களாக - ஜீரணத்து கொண்டவர்களாக இருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இத்தகைய வரலாறுகள் எம்மவர்களுக்கு அதன் பின்புலத்தை நோக்குவோமானால் எமது முதுரங்களை அழித்ததுடன் அதன் சிறப்புக்களை கலாசார தொன்மைகளை எவ்வளவு தூரம் அறிந்துள்ள அதன் மகிழ்மைதான் என்ன என்பதை தெரிந்தவர்களாக இருக்கின்றமோ என்பது எமது மனதில் ஓற்றெடுக்கும் நெருடல் நிலவி வருவதை அறிகின்றோம்.

ஆனால் இலங்கையை வந்தடைந்த விஜயனும் அவனுடைய பரிவாரங்கள் கி.பி 554 ஆண்டளவில் புத்தளம் வடக்கேலுள்ள “தம்பபண்ணி” என்னுமிடத்தை வந்தடைந்த தாக மகா வம்சம் போன்ற வரலாற்று நூல்ல எடுத்தேம்பியுள்ளன. விஜயன் அங்கே வந்திறங்கிய போது தமிழர்களின் செந்நெறிகள் தொல்லியல் சான்றுகள் நிறைந்து காணப்பட்டதாக வரலாறுகள் சான்று பகர்கின்றன என்பனர் அறிகின்றோம்.

இதன் பின்னணியைக் கொண்டு புளிச்சாக்கும் உமர் பாரூக் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு சிறப்பு மலர் பல தகவல்களையும், தரவுகளையும் தொட்டு நிற்பதை கோடிட்டு காட்டுகின்றது.

புத்தளம் மாவட்டத்தின் முஸ்லீம் சமூகத்தின் வரலாற்று தொடர்புகள் வாழ்வாதார நிலைமைகள் கலாசார பின்புலம் சமூக கட்டமைப்புகள் அதனோடு சார்ந்த வரலாற்று பாரம்பரியங்கள் என்பன கட்டியம் கூறி நிற்கின்றது இம்மலர்.

இவ்வித்தியாலயம் உருவாக்கத்துக்கு இவ்வூரில் வாழ்ந்த தமிழ் முஸ்லீம் சமூகங்களின் பங்களிப்பானது விதந்துரைக்கப்படுகின்றது. இவர்களில் நல்நோக்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுசமாக 1904 ஆண்டு விளைந்ததே இவ்வறிவாலயமாகும். ஆரம்பத்தில் தமிழ் கலவன் பாடசாலை என்ற மகுடத்தில் ஜொலித்து பிரகாசித்துள்ளது.

பின்னர் இப்பாடசாலையானது உமர் பாரூக் மகா வித்தியாலயமாக சுடர் விட்டு பிரகாசித்து மிளர்ந்து மலர்ந்தது. இவ்வித்தியாலய வரலாற்று ஓட்டத்தை நோக்குகையில் பல கல்வியாளர்களை அறிவு சார்ந்த புத்திஜீவிகளை ஆற்றல் உள்ள ஆளுமைகளை சட்ட வல்லுநர்களை தோன்ற - தோற்றுவிக்க இவ்வித்தியாலயம் அடித்தளமிட்டுள்ளதென்றால் மிகைப் படுத்தப்படாத கூற்றாகும்.

புத்தளம் மாவட்டத்தில் முஸ்லீம் சமூகத்தினர்கள் வர்த்தகர் என்ற நிலை மாறி கல்வி வளர்ச்சியிலும் அகலக் கால் விரிக்க இவ்வகையான வித்தியாலயங்களின் பங்களிப்பானது வடிகால் அமைத்தன என்பது மனம் கொள்ளதக்கது.

இம்மலரை விரித்து நுகரும் போது ஆசிச் செய்திகள் வாழ்த்துச் செய்திகள் வாழ்த்துரைகளுக்கே பஞ்சமே இல்லை. 22 பேர் ஆற்றலாளர்களின் வாழ்த்துக்கள் மலரை வளப்படுத்தியுள்ளது.

இதன் உள் நோக்கத்தின் மேச்சலைப்பாக்கும் போது இதன் முன்னேற்ற செந்நெறிகளுக்கு பரிணாம வளர்ச்சிக்கு அர்த்த புஷ்டியுடன் அடித்தளமிட்டு உழைத்துள்ளார்கள் என்பது வெள்ளிடை மலை ஏன் அதன் உள்ளடக்கமானது வெளிச்சம் போட்டு காட்டுகின்றது என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் சாங்கோபாங்கமானதை உணர்வை பார்த்தால் விவசாயத்தை தமது மூலதனமாகவும் ஜீவனோபாயமாகவும் கொண்ட இச்சமூகமானது, இக்கிராமத்தை கட்டியெழுப்ப மேற்கொண்ட விடா முயற்சிகள் முன்னேற்ற வளர்ச்சிக்காக உழைத்த பாங்கு. அது ஏற்படுத்திய அசைவாக்கத்தின் தாற்பரியங்கள் என்பன ஆதியோடு அந்தமாக இவ்வித்தியாலய மலர் சொல்லி ததும்பி நிற்கின்றது.

இக்கிராமத்தில் குளத்தைச் சுற்றி பற்றை மரங்கள் இருந்தன. அவற்றில் காய்களும் மரங்களும், புளித்தன்மை உடையதாக இருந்தால் அதனை "புளிச்சங்காய் என்றனர்." அதிலிருந்து அக்குளத்திற்கு "புளிசாகுளம்" என்று பேரிட்டார்கள். அன்று குளத்திற்கு கிட்ட பேயரே இன்று ஊரின் பெயராக மருவி திகழ்ந்து நிற்கின்றது.

இவ்வித்தியாலயத்தின் முதல் தலைமை ஆசிரியராக பதவி வகித்தவர் எப்.ஜேஅல்பிரட் என்பறே இவரின் பூர்விகம் யாழ்ப்பாணம் உடப்பில் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மலரானது இக்கிராமத்தொன்மையை மக்களழனட வாழ்வியல், கூறுகளையும், பண்பாட்டின் பாரம்பரிய விழுமியங்களையும், இம்மண்ணுக்கே உரிமைத்தை இப்பூமியுடன் வாழுந்து கொண்டிருப்பவாகனின் ஆளுமை சிறப்புக்களை இம்மலர் பிடித்து காட்டுவனவாக இருக்கிறதென்பது மிகைப்படுத்தாத குற்றாக அமைகின்பதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறப்பு மலரின் வெற்றிக்காக திடம்பட உழைத்த செம்மல் அதிபர் முகம்மது தம்பி மரிக்கார் பாரி மனம் திறந்து மகிழ்ந்துரைக்கின்றார். இவ்வித்தியாலயம் பத்தாண்டு தசாப்தங்கங்களைக் கடந்து நிற்கிறது. இக்கலையகத்தின் அகவை நூறை நிறைவு செய்து மகுடம் சூடும் இப்பொன்னான நன்னாளின் நூற்றாண்டு விழாவொட்டு என் மனம் குளிர்ந்து நிற்கின்றது.

தனது வரலாற்றில் பல்வேறு சவால்களையும், தடைகளையும் இன்னும் இளமை குன்றாமல் தனது அகவை நூறைக் கடந்து வந்த பாதையில் பதித்த சாதனைகளும் தடங்களையும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமே இக்காலம் என்பது வெள்ளிடைமலை.

இக்கலையகம் ஆலவிருட்சமாக் கால்பதித்துள்ளது. கல்விதரும் விருட்சமாக திகழ்கின்றது. அறிவுக்கண் ஊற்றை அள்ளித் தெளிகின்றது. பல சாதனைகளை ஈன்னுள்ளது. ஜீவ நதியாக ஊற்றெடுத்து வளம் வருகின்றது. சிறந்த சமுதாயம் உருவெடுக்க இதன் பங்கு என்பது அறப்பரியது என எண்ணக்கருவை பட்டவர்த்தனமாக விரித்துள்ளார்.

இம்மலரை நுகரும் போது மனம் கொள்ளத்தக்க வாண்மையில் பிரக்ஞை பூர்வமான பல விடையப் பரப்பில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இளம் ஆய்வாளர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் ஒருசமூதாயத்தின் வாழ்வுப்பண்புகள், பண்பாட்டு நெகழ்வுகள் நிழலாகத் ததும்பும் நிஜங்களை நிகர்ச பாங்கில் காய்தல் உவர்த்தலின்றி தரும் செந்நெறிகள் இம்மலரின் வெற்றிக்கு கட்டியம் கூறி நிற்கின்றே என்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்தின் வரலாற்று தொல்லியல் சான்றுகள் அதையோட்டிய ஆன்மீகத்தலங்கள் என்பன இம்மண்ணை படம் போட்டு காட்டி நிற்கின்றன. வரலாற்றை எடுத்தேம்பும் பழமை நிறைந்த முத்து மாரியம்மன் ஆலயம். அத்தும் சிறப்புப் பெற்ற முஸ்லீம் பள்ளி வாசல் என்பன இவ்விரு சமூகத்தின் பகைப் புனலை எடுத்துச் சொல்லும் முதுசங்களாகும்.

இம்மலரை அலங்கரித்து மனதை மெய் மணக்கம் செய்யும் ஆக்கப்படைப்புக்களான உமர் பாரூக் மகா வித்தியாலயத்தின் தோற்றமும், வளர்ச்சியும், உழைத்த அதிபர் செம்மல்கள் காகிதப் பூக்கள், வாழ்வுக்கு அர்த்தம் கொடுத்த தாய், தகவல் தொழில் நுட்பம் இறைவழி நோக்கி இஸ்லாமிய தமிழ் போன்ற இன்னோரன்ன விடையப் பரப்புக்களில் செம்மைப்படுத்தப்பட்ட கட்டுரை வடிவங்கள் மலர் விரித்துள்ளன.

காத்திரமான கவிதைப்புக்களில் ஒன்றான "வாழ்விற்கு அர்த்தம் கொடுத்த தாய்" என்ற கவிதையை முகம்மது நசார் பாத்திமா மிப்லாவின் கவிதை தாய் பாசத் தேசத்தையும் நேசத்தையும் உணர்வுபூர்வமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர் வடித்த வைர வரிகள் எம்மனதை நெகிழ வைக்கிறது.

நான் ஏடுகளைச் சுமக்க
தினம் மண்ணைச் சுமந்தவளே
பொலிகள் இல்லா உந்தன் அன்பில்
பெறும் வேஷங்கள் இல்லை
உந்தன் நட்பில்
காதணிகளையெல்லாம் விற்று விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடம் செல்ல
நல்ல பாதணிகள் வாங்கிக் கொடுத்தவள் நீயம்மா!

இக்கிராமத்தில் நீண்டகால வரலாற்றுடன் தொடர்புகளுக்கு உட்பட்ட தமிழ் சமூகத்தின் தகவல் இணைக்கப்படுமா? இருந்தால் இம்மலர் இன்னும் கனதியான காத்திரமான மலராக புலப்படும் என்பது ஐயமில்லை. இது சற்று குறையாகவே தென்படுகின்றது.

எனவே ஒரு இனம் சார்ந்த மத விழுமியங்களை ஆய்வு மேற்கொள்ள இருக்கும். இளம் ஆய்வாளர்களுக்கு இந்நூல் உசாதுணையாக அமையும் என்பதுடன் மொத்தத்தில் சிறந்த மலர் என்றே கூறலாம். படித்து பயன் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. உடப்பூர் வீரசொக்கனின் பாக்கள் தரும் பூக்கள் (சிறுவர் பாடல்கள்)

அறிவியல் தொழில் நுட்பம், நவின விஞ்ஞான இலத்தினியல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் சம காலத்தில் சிறுவர் இலக்கியத்தின் வளர்ச்சி போக்கானது பின்னடைவை கொண்டுள்ளதாக அறிவு சார்ந்தவர்களின் கருத்தாக இருக்கின்றது. அதனால் இதன் வெளியீடுகளைப் பார்க்கும் போது வெற்றி முகத்தை காட்டுபனவாக இருக்கின்றதென்றே கூறலாம்.

ஆனால் ஈழத்திருட்டை பின் நோக்கை பார்க்குகையில் சிறுவர் இலக்கிய படைப்புகளின் ஆக்கங்கள் குறைந்தளவே வெளிவந்துள்ளமையை அறியக் கூடியாத இருக்கின்றது.

அந்த வகையில் வடமேல் மாகாணத்தில் சிறுவர் இலக்கியத்தின் சிருஷ்டிகளைக் கூட ஒரு சிலர்களே ஆக்கியுள்ளமையை காணக் கூடியதாக தென்படுகின்றது. இக்குறையை நிவர்த்திக்கும் முகமாக உடப்பூர் வீரசொக்கன் தந்த "பாக்கள் தரும் பூக்கள்" என்ற பாடல் தொகுப்பு கோடியிட்டு காட்டுவதாக காணப்படுகின்றது. இவரின் இலக்கியப் பணியானது பரந்து விரிந்து முகிழ்ந்து நின்கின்றதை அவதானிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

உடப்பூர் வீரசொக்கன் தன்னை ஊடகவியளாராக எழுத்தாளராக கவிஞராக விமர்சகராக இனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டவராக தென்பட்டாலும் இவர் கடந்த நான்கு தசாப்த காலமாக எழுத்துலகில் பல்வேறு துறைகளில் அகல கால்பதிப்பு மிளிர்ந்து நிற்கின்றார் என்பது சொல்லலாம். இளம் சிட்டுக்கள் தெளிந்த நீரோடை போனற்றவர்கள் அவர்களின் எண்ணக் கருவூலங்களுக்கு வடிகால் அமைக்கும் முகமாக "பாக்கள் தரும் பூக்கள்" என்னும் சிறுவர்களின் நன்மை கருதி சிறுவர் பாடல் தொகுப்பை வெளியீட்டுள்ளார்.

பச்சிளம் பாலர்களின் அறிவுக்கு வித்திட வேண்டும் முகமாக 1840ஆம் ஆண்டு பாலதீபிகை என்ற சிறுவர் இதழ்தான் முதல் முதலில் தமிழில் வெளியானது சிறார்களின் கன்னி இதழ் என, தமிழின் குழந்தை இலக்கியத்தின் முதன்மை படைப்பாளியான "பூவண்ணன்" தனது குழந்தை இலக்கிய வரலாறு என்ற நூலின் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து 1947 ஆண்டு தமிழ் நாட்டில் வெளியான "அம்புலிமாம" என்ற சிறார் இதழானது பெரியோர் முதல் சிறுவர் மத்தியில் செல்வாக்கைப் பெற்றதென்றே அறிதிட்டு கூறலாம். இது வண்ணப்படங்களை எண்ணக்குவியலாளாக சிறார்களின் வாசிப்புக்கு உரம் சேர்ந்த வண்ண இதழாகும். மற்றும் 1950 வெளி வந்த இதழான "சாக்லெட் மற்றும் "தங்கமாமா" என்ற இதழும் தரத்திலும் தகுதியிலும் தரமான இதழாக பரிணமித்தன. இதை உள்ளிடாகக் கொண்டு எமது நாட்டிலும் சிறுவர் இலக்கியங்களும் இதழ் வரித்தன. சிறுவர்களிடத்தில் மதிப்பும் மரியாதையுடன் விளிப்பு நிலை கொண்டது போல சொல்லும்மளவுக்கு பல எழுத்துவாண்மையாளர் தமது பங்களிப்பை நல்கியுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளார்கள் என்பது யதார்த்த உண்மையாகும் மனது கொள்ளத் தக்கது.

புத்தளம் பகுதிகளில் தமிழ் எழுத்தாளர்கள் எழுத வேண்டும். வளர வேண்டும் இலை மறைகாய இருக்கும் எழுத்தாளர்கள் பலரை தூண்டி வைக்கும் பக்குவம் கொண்டவராக இவ்வாசிரியர் இருந்துவருகின்றார்.

வட, கிழக்கு பிராந்தியத்தில் எழுத்தாளர்களை ஊக்குவிக்க எழுத்துலக மையங்கள் ஆக்க பூர்வமாக பணி புரிந்து வருகின்றன. ஆனால் புத்தளம் பிராந்தியத்தில் எழுத தூண்டவோ அவர்களுக்கு வழிகாட்டவே துலாக்கோல் இல்லாத அவல நிலை காணப்பட்ட வருகின்றது. ஆனாலும் கூட இதையெல்லாம் தாண்டி கலை, இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்டு உடப்பூர் வீரசொக்கன் இதுவரை 17 நூல்களை எழுதி வெளியிட் டுள்ளார். இதில் ஒன்றே "பாக்கள் தரும் பூக்கள்" சிறுவர் பாடல்கள் இப்பூக்களில் 39 பாக்கள் பூத்து மனம் பரப்பி மலர்ந்துள்ளது.

இப்புக்களில் சிறார்களின் நல்லொழுக்கம் நற்பண்பு, ஒழுக்க நெறி நற்பிரஜைகளாக வாழ வேண்டிய கட்டமைப்பு கொண்டதான கருவூலங்களை மிளிர்ந்துள்ளது. இன்றைய சிறார்கள் நாளை நாட்டை கட்டியெழுப்பும் தலைவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் தெளிவு சுழிவுகள் மேடு பள்ளங்கள் சமுகத்துக்கு ஏற்படும் முரண்பாடுகளை சமாளித்து ஆற்றலை வினைத் திறனோடு மேற்கொள்ள வேண்டும் என அடி நரதத்துடன் சிருஷ்டிக்கப்பட்ட சிறுவர் பாடல்கள் அமைந்துள்ளன. படிமங்கள் பிறழா வண்ணம் இப்பாடல்கள் அமைந்துள்ளது ஆசிரியரின் திறமைக்கு கட்டியம் கூறி நின்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு துறைகளில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி பூனைவு இலக்கியத்துறையில் முகிழ்ந்து நிற்கும் வீரசொக்கனின் இச்சிறுவர்பாடல்கள் சிறார்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தும் நாளைய சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ வடிகால் அமைத்துள்ளதென்றே கூறலாம். இது இவரின் புனைவு இலக்கியத்துறையின் திறமைக்கு சிகரமாக அமைந்துள்ளதென்றே கூறலாம்.

பூத்து மலர்ந்து விரிந்து மணம் பரப்பும் மலர்களில் வண்டுகள் தேனடுத்து சுவைக்கும் காட்சியானது அட்டைப்படத்தை அலங்கரிப்பானது சிறார்கள் இப்பாடல் களை சுவைத்து நுகரக் கூடிய தம்மையை வெளிப்படுத்துவதாக இவ்வட்டைப்படம் அமைந்துள்ளது. பாடல் விளக்கப்படங்களுடன் காத்திரமான படைப்புக் களான 39 பாடல்கள் 50 பக்கங்களுடன் விரிந்து மலர்ந்துள்ளது.

பாக்கள் தரும் பூக்களில் பூர்த்து குலுங்கும் மலராக முதலில் விரித்து நிற்பது கலை மகளே போற்றி என்ற பாடலாகும். இவர் கலை மகளுக்கு முதல் துதியைப் பாடி மெழுவாக உருகியவள் என்ற தாயன்புக்கு தலை சாய்த்து இறுதியாக முடிவு பெறுகின்றது. இத்தொகுதி 39 பாடல்கள் இத்தொழில் முகிழ்ந்து நிற்கின்றபதை காணலாம்.

கலைமகளே போற்றி என்ற முதல்பாடல் காத்திரமான சொல் நயமோடு ஆன்மீக தொடல்பாடல் அங்கே தொட்டு ததும்பி நின்றது. கலைக்கு கலைமகள் (பக்கம் 8) வணங்கி தமது கலைப்பணயத்தை தமிழர்கள் ஆரம்பிப்பார்கள். அதற்கிணங்க இத்தொகுதி முதல் பாடல் இவ்வாறு முனைப்புப் பெற்றுள்ளன. இப்பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வண்ணமாகும் எண்ணங்களை
வடிவமைத்து பா வேண்டி
திண்ணமான தீன் கவியை
தினந்தோறும் பாடி வந்தேன்"

பத்து மாதம் சுமந்து பாலூட்டி சீராட்டி பகல் இரவாய் கண்விழித்து பல வலிகளை தாங்கி எல்லாத் தொல்லைகளையும் சுமந்து தனது ஆசை அன்புச் செல்வத்தை பெற்றெடுப்பவள் எம்தாய். அந்த தாயன்புக்கு எல்லையே இல்லை தாயைப்பற்றி தாயல்லவா (பக்கம் 9) அரவணைக்கும் தாய் (பக்கம் 11) மெழுகாக உருகியவள் (பக்கம் 54) ஆசை அன்னைக்கு ஓர் பாச உறவை விரியமாக்கியுள்ளது.

கதறி பீரிட்டு கண்ணீர்
சிந்தி அழுத போது - உன்
முலைப்பாலை ஊட்டி
ஆராட்டி தூங்க வைப்பவள் - நீ என்றும்
பள்ளி செல்ல பாடசாலை போகவென
பாங்குடனே பாதையும் காட்டி
பாராட்டுகளுக்கு வழி
சொன்ன பாச மலரல்லலா - நீ

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவானில் நனி சிறந்தனவே" என்பதற்கிணங்க தாம் பிறந்த நாட்டுக்கு நாட்டுப் பற்றாலானாக இருக்க வேண்டும். தாயை நேசிப்பது போல் தாய் நாட்டின் மேல் பற்றுதியுடன் வாழ வேண்டும். நாடு வளம் பெற வேண்டும் வென்றால் நாட்டுப் பற்றே மூலவிசையாகும். ஆசிரியர் தாய் நாட்டின் சிறப்பு பெருமை யதார்த்தமாக இலங்கை திருநாடு (பக்கம் 21) பாடலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டியுள்ளார். இது ஆசிரியரின் நாட்டுப்பற்றை வெளிக்காட்டி நிற்கின்றது.

சிங்களமும் செந்தமிழும் - நாம்
பேசும் மொழி இந்நாடு
மதங்கள் போற்றும் நாடு - மண
மன வளங்கள் பூத்த நாடு என்றும்
என்னருமை தாய் நாடு - நான்
வணங்கும் நம் நாடு
கற்றவர் மதிக்கும் நாடு - சிறந்த
காருண்யம் வளந்த நாடு

ஒரு நாட்டின் அடையாளச் சின்னம். அந்த நாட்டின் தேசிய கொடியாகும். இக்கொடியை பிரிதிபரிப்பாக இருப்பதுதான் அந்த நாட்டில் வாழும் இன குழுங்களின் சிறப்பை எடுத்தேம் புவதாக இருக்கும். எமது தாய் நாட்டின் சின்னமாக பட்டோளி வீசும் சிங்கக் கொடி சுதந்திர இலங்கையின் அடையாளமாகும். ஆசிரியரின் கவிசிறப்புக்கு தேசிய கொடி (பக்கம் 27) கட்டியம் கூறி நிற்கின்றதை நிதர்சனமாக உணரலாம்.

சிங்கக் கொடி – எம்
நாட்டின் தேசிய கொடி
வீரர்கள் புகழ் படைத்த
வெற்றிக் கொடி சிங்கக் கொடி
விடுதலை தந்த கொடி
விணர்களை அடித்து உதைத்த கொடி
சுதந்தரத் தாகத்தை வித்திட்டு
சுதந்திரமாய் பட்டொளி வீதம் கொடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை உலகில் பிரகாசித்தவன் பாரதி அதன் சாரதியாகக் நின்று கவி உலகில் வில்வித்தை புரிந்தவன் முண்டாசு கவிஞரான பாரதி கவியுலகில் புரட்சியையும் புதுமைகளையும் படைத்தவன் பாரதி (பக்கம் 28) என்ற கவிதையில் ஆசிரியரின் கவியாற்றல் விதந்து போற்றப்படும் அளவுக்கு விவேகத்துடன் வடித்தள்ளார்.

முண்டாசுக் கவி பாரதி
முழுமதியாக வந்த பாரதி
நாடு போற்றும் பாரதி
புதுமை படைத்த பாரதி
தம்பிக்கு பாட்டு தந்த பாரதி
தரணி போற்றும் பாரதி
நம்பிகை ஊட்டிய பாரதி
நம் தமிழ் பாரதி

உடப்பூர் வீரசொக்கன் படைத்து "பாக்கள் தரும் பூக்கள்" என்ற சிறுவர் பாடல் தொகுதியானது வடமேல் மாகாணத்தின் ஓர் மைல் கல்லாகும். இத்தொகுப்பானது முத்தாக விரிந்து முகிழ்ந்து காணப்படும் இப்பாடல்கள் முதுசமாகும் என்றால் இரு வேறு கருத்துக்கு இடமில்லை என்றே கூறலாம்.

அலை முகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளி

புத்தளம் மாவட்டம் இந்து மக்களின் ஆன்மீகத்துறையில் முதிர்ந்து நிற்கும் மாவட்டமாகும். தமிழர்களின் பெருமை, இருப்பை, அதன் வழி வந்த சிறப்பாம்சங்களை அடையாளப்படுத்தி நிற்கின்றதென்றே கூறலாம்.

இங்கு எண்ணிரந்த பல தமிழ் ஊர்கள் இருக்கின்றன. இவைகள் பழமையும் பூர்வீகத் தொன்மையும் அடையாளப் படுத்துவது அங்கு அமைந்துள்ள ஆலயங்களாகும்.

இம்மாவட்டத்தில் குறிப்பாக பல கோவில்கள் வரலாற்று பின்புலத்தை கொண்டதாக திகழ்கின்றன. அவைகளாவன :- முன்னேஸ்வரம், முன்னைநாதப் பெருமான், ஸ்ரீ வீரபத்திர காளியம்மன், நல்லவிநாயகர் ஆலயம், சிலாபம் முத்து மாரியம்மன், முந்தல் ஸ்ரீ பார்த்த சாரதி ஸ்ரீ திரௌபதியம்மன், ஆண்டிமுனை முத்து மாரியம்மன், கற்பிட்டி முத்துமாரியம்மன் புத்தளம் முத்துமாரியம்மன் போன்ற இன்னோரன்ன திருக்கோவில்கள் காலத்தின் தொன்மைகளை கட்டியம் கூறி நிற்கின்றதென்பது வெள்ளிடை மலை.

ஆனால் இவைகளுக்கு முன்னுதாராணமாகவும் முத்தாக முகிழ்ந்து நிற்பதே முன்னேஸ்வரம் முன்னைநாதப் பெருமான் தேவஸ்தானம். பஞ்சஸ்வரங்களில் முதன்மை யானது. மன்னர்களால் வழிபட்டதாக விதந்து போற்றப்படுகின்றது. இதன் அடையாளப் மகிழ்மைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பே இம்மாவட்டத்தில் இந்து தமிழ் மக்கள் பூர்வீகமாக சிறப்போடு வாழ்ந்து வதிந்துள்ளார்கள் என்பதை இவ்வாலயங்கள் எடுத்தேம்பி நிற்கின்றதல்லவா...!

இவ்வாறு இவ்வாலயங்களில் சிறப்புப் பெற்ற ஒன்றே; உடப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருக்கோவில். இதன் கும்பாபிஷேக பெருவிழா 2021.01.28 நாளான்று நிகழ்ந்து. அதன் சிறப்புமலர் பல சரித்திர ஆவணங்களையும் பூர்வீக அடையாளத்தையும் உள்வாங்கி வெளியீடப்பட்டுள்ளது.

காத்திரமான படைப்புக்களுடன், வர்ன வண்ண வடிவங்களுடன் இவ்வாலயத்தின் முன் கோபுரத்தை தாங்கி கவிதை கட்டுரைகள் ஆலயத்தின் வரலாற்று சிறப்புக்கள் காவடி சிந்து பாமாலைகளுடன் சிறப்புமலர் வெளிவந்துள்ளது.

தமிழர்களின் வரலாறுகள் இன்று மழுங்கடிக்கப்பட்டு வரும் இச்சமகாலச் சூழலில் வரலாற்றுகளையும், தமழர்களின் இருப்பையும் ஆவணப்படுத்தப்படுவது காலத்தின் கட்டாயக் தேவையாகும். ஒவ்வொரு கிராமங்களில் உள்ள கோவில்கள் சிறப்புக்களை திரட்டி நூல் வடிவமாக்கு அம்மாவட்டத்தில் வாழும் ஒவ்வொரு தமிழ் புத்தி ஜீவிகளின் கடமையும், கடப்பாடும் என்பது யதார்த்த வெளிப்பாடாகும்.

இச்சிறப்பு மலர் உடப்பூர் வீரசொக்கனை ஆசிரியராகவும் பா.முருகானந்தன் க.மகாதேவன் போன்றவர்களை மலர் குழு உறுப்பினராகவும் இந்த சிறப்பு மலரை இனம் தாரகை மாவட்டத்தின் அனுசரணையுடன் மலர்ந்து மலர் விரித்துள்ளது மணம் பரப்பி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாசிரியரின் பார்வையினுல் தனது எண்ணக்கருத்தை இவ்வாறு விரித்துள்ளார். :- இன்பமாகி விட்டாய் காளி. என்னுறே புகுந்தாய் - பின்பு நின்னையல்லாம் - காளி - பிறிது நானு முண்டோ - அன்பை அறிந்து விட்டாய் அண்மை தந்துவிட்டாய் காளி, - துன்பம் நீங்கி விட்டாய் - காளி - தொல்லை போக்கி விட்டாய் (பாரதி)

உலகில் இயக்கத்திற்கு மூல விசையாக இருக்கும் பொருளான சிவனது இயற்பாட்டுக்கு இசைவாக்கம் புரிகின்றவள் அன்னை பராசக்தி. தாய்த் தெய்வ வழிபாடானது பாரத தேசத்தில் மட்டுமின்றி எம்நாட்டிலும் வேறூன்றி கிளைபரப்பி விருட்சமாக பல்வேறு பிரதேசங்களில் அம்மன் வழிபாடு முகிழ்ந்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது.

உடப்பில் சக்திவழிபாடானது பாரம்பரிய வழிபாடாக, குல தெய்வ வழிபாடு தொன்று தொட்டு நிலவி வருகின்றது. ஆபத்து நாயகியாக - காக்கும் தெய்வமாக, தீராப்பற்றுடன் இவ்வூர் மக்கள் வணங்கி வருகின்றார்கள். துன்ப துயங்கள் வரும் போதெல்லாம் வேள்வி பொங்கல் விழா வெடுத்து சிறப்பித்து வருகின்றார்கள்.

இவ்வாலய முன்னாள் பூசகர் திரு.முத்தையா பரந்தான் பூசகரின் ஆசிச் செய்தியும் உடப்பு இந்து ஆலய பரிபாலன சபைத் தலைவர் ஐ.பி.இராமன். ஆராச்சிக்கட்டு பிரதேச தலைவர் திரு.கந்தசாமி தெட்சணாமூர்த்தியின் வாழ்த்துச் செய்தி இவ்மலரை அலங்கரித்து நிற்கிறது. பிரதேசசபை தலைவர் கந்தசாமி தெட்சணாமூர்த்தியின் வாழ்த்துரையில்:- புத்தளம் மாவட்டத்தில் உடப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்ந்து நின்று அருளாட்சி புரியும் எம் குலதெய்வமாக ஶ்ரீ வீரபத்திரகாளி அன்னைக்கு குடமுழக்கு பெருவிழா 2021.01.28 தைப்பூச திருநாளில் நிகழ்வுறுவதையிட்டு மகிழ்ச்சியுடன் சிறப்பு மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குகின்றதையிட்டு மகிழ்ச்சி. சக்தி வழிபாடானது உடப்பூர் மக்களின் வாழ்வோடு பின்னி பிறையப்பட்டது. எம்முன்னோர் கடைப்பிடித்த சடங்கு சம்பிரதாய கிரிகைகளை இன்றும் பிசகாமல் வேள்வி விழா சிறப்பேக நடைபெறுவதை கண்ணாகக் காண்கின்றோம் என்று தொடர்கின்றது.

கும்பாபிஷேகத்தின் 'மகிழ்மை' என்ற சிறப்பு கட்டுரை பெருமை மகிழ்மைகளை கோடிட்டுக் காட்டுகின்றதாக அமைந்துள்ளது.

புத்தளம் பிராந்தியத்தின் சக்தி வழிபாட்டு மரபின் சிறப்பை பத்தி வீரசொக்கன:- பிராந்தியத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காளியம்மன் ஆலயங்களின் வரலாற்று களை இரத்தின சுருக்கமான நேரத்தியான முறையில் வடித்துள்ளார்.

க.மகாதேவன் ப.முருகானற்தன் காளியம்மன் ஆலயம் பற்றி சிறப்பு கட்டுரைகளையும் கவிதைகளையும் தீட்டியுள் ளனர்.

முதுசம் என்ற தகவலில் இவ்வாலயம் 1878 கட்டப்பட்டதுடன் கொத்தக்கிழவன் தொடக்கம் கே.சுரேஸ் பூசகர் வரையும் உள்ள ஒன்பது பூசகர்கள் விபரங்கள் திரட்டித் தரப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொற்குகை' என்ற மகுடத்தில் முன்னேஸ்வரம் ஸ்ரீ காளியம்மன் தகவல்களை பீரா திரட்டி தந்துள்ளார். 1813 ஆண்டு தொடக்கம் 2010 ஆண்டு வரையிலான தகவல்கள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளது.

பா.முருகானந்தன் ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் பாடலில் இவ்வாலயத்தில் நிகழும் அதிசயத்தை பாடல்களில் தந்துள்ளார். அவ்வரிகள்

"வேள்வி விழாவில்
கடல்நீரில் விளக்கேற்றி
சுடர் விட்டு எரிய
குடும்பத்திலே பூத்து காய்க்க
செய்தா அம்மா"

என்ற பாடல் பழைய நிலையை உணர்த்துவதாக இருக்கின்றது.

வீரசொக்கன் தந்த உடப்பூரில் குடிகொண்ட பத்திரகாளி காவடி சிந்து – கும்பாபிஷேக பாமாலை என்பன தெய்வீக மணம் கவர் மலராக அமைந்துள்ளது.

மற்றும் அம்மன் ஆலயம் பற்றிய விசேட குறிப்புக்கள் அருவாய்யடியில் அமைந்த காளி பாடலும் இம்மலரை சிறப்பிப்பதுடன் ஒவ்வொரு காளிபக்தர்கள் படித்து பயன் பெற வேண்டுவதுடன் இந்துக்களில் இல்லங்களில் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்ட வேண்டியவை என்றால் மிகையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2020/06/14 ஜீவநதி 2020/1/14 புரட்டாதி

## 11. இஸட் ஏ.சன்ஹிரின் "வித்தியாலயம்" நூல் - ஒரு பார்வை

கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் அறிந்திராத ஒரு சமூகத்துக்கு எதிர்காலமில்லை என்பதங்கிணங்கஇ புத்தளம் வலய கல்விப் பணிமனைக் குட்பட்ட தமிழ் மொழி மூலப் பாடசாலைகளின் வரலாற்று அதன் செந்நெறிகளை தாங்கிய நூலாக மலர்ந்த மணம் பரப்பி காத்திரமான சிருஷ்டி அக்கங்களுடன் வெளிவந் துள்ளது 'வித்தியாலயம்' நூல் என்று பொக்கிஷம்.

தனித்தவம், பண்பாடு, பாரம்பரியம் பரிமாணத்தையும் வரலாற்று பின் புலத்தையும் கொண்ட இடம் தான் புத்தளம் மாவட்டமாகும். இதன் ஓர் கூறாக புத்தளம் வலய பணிமனைக்கு உள்வாங்கப்பட்ட தம்ழ் பிரிவாகும். இப்பிரிவிலுள்ள பாடசாலைகளின் சிறப்பான்மை, ஆளணி வளம் பௌதீக வடிவங்களை சாங்கோபாவத்துடன் ஆய்வு ரீதியில் வடித்துள்ளார் இப்பிரிவின் முன்னால் ஓய்வு நிலை பிரிதி கல்வி பணிப்பாளர் இஸட்.ஏ.சன்கிர் அவர்கள்.

ஒரு சமுதாயத்தின் இருப்பையும் தொல்லியல் தடங்களையும, அதன் எச்சங்களையும் கோடிட்டுக் காட்டுவது தான் சார்ந்த ஆன்மீக தாபனங்களும்இ அதனோடு சார்வு கொண்ட அறிவுக்கண்ணை திறக்க திறக்க வித்திடும் கல்விக் கூடங்கள் என்பதையும் கல்வி கூட்டங்கள் என்பதையும் கல்வி சமுகத்தினால் விதந்துரை க்கப்படுகின்ற தென்பது யதார்த்தமான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை உள்ளீடாகக் கொண்டு புத்தளம் மாவட்டத்தில் தமிழ் மொழி மூலப்பாடசாலைகளில் வரலாற்று பின்புலம் தொல்லியல் அம்சங்கள் தடங்களின் தரவுகள்இ அதனோடு அமைந்த எச்சங்கள் என்பவற்றை துல்லியமாக காய்தல் உவர்ப்பின்றி முன்வைத்துள்ளார் இந்நூலாசிரியர் சன்கின் அவர்கள். உண்மைத் தன்மைகளை யதுார்த்த நோக்குடன் துல்லியமாக எடுத்தேம்பியுள்ளார். அது பக்கசார் இன்றி ஆய்வு செந்நெறிகளுடன் முன்வைக்கும் போது தான் அது கல்விபுலத்தாலின் விதந்துரைக்கு உட்படுத்தப்படும். இதை உள்ளீர்க்கும் முகமாக இவ்வாசிரியரின் ஆய்வ நெறி தொல்லியல் தரவுகள், பன்மைத்தன்மை என்பன நீண்ட கால ஆய்வின் உழைப்புக்கு கிடைத்த வெற்றி என்றே கூறலாம்.

புத்தளம் மாவட்டம் வரலாற்று சிறப்புக்களின் தடயங்கள் மேலோங்கி நிற்கின்றது. இங்கு சிறப்பு பெற்ற ஆன்மீக தலங்கள் பல அமைந்திருக்கின்றன.ஏன் இதன் தெல்லியல் எச்சங்கள் கூட அடையாளப்படுத்துகின்றன. இவையெல்லாம் இதன் பண்டைய முதுசங்களை கோடிட்டுக் காட்டுகின்றது.

இம் மாவட்ட அறிவு வளர்ச்சி என்பது அந்நியர்களின் வருகையுடன் தோன்றி மிசனரி பாடசாலை, திண்ணை பாடசாலை, மதரசக்களின் என்பன கட்டியம் கூறுவதாக இருக்கின்றது

இங்கு காலத்துக்கும் காலம் பெரும்பான்மை மக்களின் புறச் செயல்கள் என்பன முனைப்பு பெற்று துளிர்விடும் இக்காலச் சூழலில் இப்பிரதேசத்தில் வாழும் தமிழ், முஸ்லிம், இனக் குழமங்கள் வாழ்வியல் பண்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவ வரலாறுகள் கலை கலாசார பண்பாட்டின் நெறி முறைகள் சமய சார்பான பண்புகள்.சடங்கு சம்பிரதாயங்களிடன் முறைமைகள் என்பனவற்றை ஒவ்வொரு இனம் சார்ந்த ஆய்வாளர்களின் வெளியுலகம் காணவைப்பது கடப்பாடாகும்.

அந்த வகையில் தமிழ் மொழி பாடசாலைகளின் துல்லியமாக தமிழ் மொழி பாடசாலைகளின் தரவுகளையும் கல்வி பல தொன்மைகளையும் இவ்வாசிரியர் பதிவுகள் மூலம் வெளிக் கொணர்ந்துள்ளமை காலத்தின் கட்டாய கடமையாகும் இவ்வாசிரியரின் பணி பாராட்டக் கூடியது.

குறிப்பாக இவ்விதழ்களில் காணப்படும் கட்டுரைகள் ஒர் இனக்குறிப்பின் தொனிப் பொருள் கோடிட்டுபடுவதாக தென்படுகின்றது சகோதர இனமாக தமிழரின் தனியான கல்வி வளர்ச்சில் போக்கைப் பற்றி ஆய்வு நோக்குடன் எடுத்தேம்பாதது ஏன் என தமிழ் கல்வியாளர்கள் கேள்வி எழுப்புகின்றமை அறியக் கூடியதாக இருக்கின்றது.

புத்தளம் முஸ்லிங்கள் வரலாறு வாழ்வியலும் புத்தளம் வரலாறு மரபுகளும் உடப்புர் வரலாறும் மரபுகளும் தமிழ் பேரறிஞர் சைமன் காசிக் செட்டி வரலாறு ர்.ளு இஸ்மாயில் ஒரு சமுக அரசியல். ஆய்வு - கதை சொல்லும் உடப்பு அலை கடலோரத்தில் இன்னோரன்ன பல நூல்கள் இனக் குறிப்புகளை அடையாளப்படுத்தி வெளிவந்தன.

ஆனால் இந்நூலானது தமிழ் - முஸ்லிம் பாடசாலைகளின் வரலாற்று தொன்மங்கள், கல்வி புல செந்நெறிகள், கல்வி என்னும் அறிவு, கண்ணுக்கு வெளிச்சம் பாத்திமா மகளீர் வித்தியாலயங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்களை வளங்களின் தன்மைகளை பூடகமாக அறிந்து தெரிந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இப்புத்தகம் இனக்காணப்பட்டுள்ளது.

சமகாலத்தில் ஆய்வு கண்ணோட்டங்கள் பெரும்பாலும் இலக்கிய சார்பான குறியீடுகளை முன்னுதாரணமாகக் கொண்டுதான் ஆய்வு முயட்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இந்நூலாசிரியர் கல்வி புல தொழில் சார்புடையவர். ஓய்வு நிலை பிரிதி கல்வி பணிப்பாளர். இவ்வாலயத்தில் தமிழ் மொழிப்பிரிவில் 70 பாடசாலைகள் அமைந்திருக்கின்றன. இதனால் கல்வி புலத் தகவல்கலை நேரடியாகவும். தொடர்பாடல் மூலமாகவும் கேள்விக் கொத்துக்கள் மூலமாகவும் விபரங்களை மதிப்பீடு செய்து ஒப்பில் ஆய்வு ரீதீயில் திரட்டியுள்ளார்.இந்த ஆய்வு முயற்சியானது நுனிப்புல் மேச்சலின்றி அறிவு முனைப்பில் ஆத்மாத்த எண்ண பாங்குடன் வடித்து நுகரத் தந்துள்ளார் என்பதை கூறத்தான் வேண்டும்.

புத்தளம் வலய தமிழ் மொழி பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியில் தனித்துவம் அதன் வகிபாகம் ஆளணி பௌதிக வளங்களின் பாங்குகள் பாடசாலைகளின் அமைப்பாங்குகள் அதனோடு இணைந்த தடயங்கள் தரவுகள் என்பனவை காய்தல் உவப்பின்றி படம் பிடித்து காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலைகளின் தெளிவு சுழிவுகளை இனம் காட்டும் தன்மையானது கல்வி சார்வு அறிவு ஜீவிகள் கூட விதந்துறைக்கக் கூடிய தன்மையை கொன்டிருக் கின்றது. இந்நூலின் வெற்றிக்கு நூலாசிரியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பின் பின்புலம் தீராத தேடலும் தொடர் வாசிப்பு என்று கூட கூறலாம்.

இவ்வலயத்தின் முதன் முதலாக செய்திமடலாக கன்னி முயற்சி 2012.12.24 மலர்ந்தது முகிழ்ந்து வித்தியாயமாக பூத்து குழுங்கியது. அதனோடு நகர்ந்த ஈராண்டு கால முயற்சியின் வெளிபாட்டால் ஆர்வமிகுதியால் பூரணமிக்க காத்திரமான நூலாக கனதியான தரவுகளுடன் இன்று வெளிவந்துள்ளது.

வியக்கத்தக்க வித்தியாசமாக பார்வையில் இவ்வித்தியாலயம் என்ற நூல் கல்வி உலகில் ஒரு பொக்கிசம்.இது தமிழ் முஸ்லிம் கல்வி புலத்தில் சார்வுடையவர்களும் இனம் ஆய்வாளர்களும் இந்நூலை படித்து பயன் பெறும் கல்வி புல வளர்ச்சியின் முதுசமாக திகழும் என்பது யதார்த்த உண்மையாகும்.

இந்நூலாசிரியரின் தனது உள்ளக்கிடக்கையின் வெளிபாட்டு எண்ணங்களை இவ்வாறு விதந்துரைக்கின்றார்.

தனது நீண்ட கால கனவின் எண்ணத்தை 31 உபதலைப்புகளில் கருத்துரையை வெளிபடுத்தி உள்ளார். மிசனரின் வருகையும் வித்தியாலயங்களின் தோற்றம் என்று தொடங்கி முஸ்லிம்களின் கல்வி பெண்களின் கல்வி இந்துக்களின் கல்வி புத்தளத்தின் நூற்றாண்டை கண்ட வித்தியாலயங்கள் சாஹிரா கல்லூரி புத்தளம் இந்து வித்தியாலயங்கள் புத்தளம் கல்வி கோட்டம் தமிழ் பிரிவு இன்னோரு பல விடய பரப்பில் அறிந்து கொள்ளக்கூடிய முனைப்பில் பதிவேற்றியுள்ளார் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமற்ற வரலாற்றினை புனைவு இலக்கிய வடிவங்களில் வெளிப்படுத்தி வரும் இக்காலத்தில் 1505 ஆண்டு போர்த்துகேயரின் வருகையுடன் புத்தளம் பிராந்தியர் கல்வி துறையின் திருப்பங்கள் ஏற்பட்டுள் ளதாகக் குறிப்பிடும் ஆங்கிலேயர் புத்தளம் நகரில் அமைந்துள்ள காஸி மிய்யா அரபுக் கல்லூரி 1884.01.10 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தமிழ் கல்வி பணியில் முன்னோடி பிதாமகனான இம்மாவட்ட பிரதேச மூத்த கல்வி மான் சைமன் காசிச் செட்டி 1812 தமிழ் பாடசாலையின் ஆரம்ப கல்வி ஆரம்பித்துள்ளார். கல்விக்கு ஒளிபாச்சிய வித்தகர். 1902 ஆண்டு அறிக்கையின் படி 10 றோமன் கத்தோலிக்க மிசனரிப் பாடசாலைகளும் முகம்மதியின் பாடசாலைகளும் ஒரு புரட்டஸ்தாந்து தனியார் பாடசாலையும் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது என பதிவு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் நகரில் ஆரம்ப பாடசாலையாக கணிக்கப்படுவது சென் அன்றூஸ் கல்லூரியாகும். இது 1818 இல் ஆரம்பிக்கப்பட்டது. புத்தளம் சாஹிரா கல்லூரி 1945.02.12 கல்வி அமைச்சி W.W.கன்னங்கரவினால் திறந்து வைக்கப்பட்டது. ஆவணக் குறிப்பேட்டிலிருந்து இதை ஆசிரியர் தந்துள்ளார்.

இவ்வித்தியாலயம் பூத்துக் குழுங்கும் புதுமைகளை மனப் பூரிப்புடன் மலர்ந்து மணம் விரித்துள்ளது. இதில் 18 ஆளுமைகளின் வாழ்த்துச் செய்திகள், 567 பக்க வடிவமைப்புடன் ஆசிரியர் பணியில் ஈடுபட்டுள்ளனர். 200 ஆசிரியர்களின் வர்ணப்படங்கள் தாங்கி எழில் கோலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டுள்ளது. இந்த வித்தியாலயம் தரும் விதந்துரையில் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனிஸின் சமுகவியல் நோக்கில் புத்தளம் மாவட்டத்தில் நவின கல்வியின் அறிமுகம், ஓய்வு நிலை கல்வி பிரதிப்பணிப்பாளர் மரைக்காரின் நாப்பதாயிரம் ஆண்டும் புத்தளம் பிரதேசத்தின் கல்வி நிலையும், ஏ.எம்.நஹியாவின் தந்த யுத்தத்தால் இடம் பெயர்ந்து புத்தளம் பிரதேசத்தில் வாழும் வட புல மாணவர் கல்வி ஓர் அனுபவப் பகிர்வு, எம்.எச்.எம்.நவாஸ் தந்த புத்தளம் ஆசிரியர் கல்வி பாாட இணைப்பாடம், வெ.அருணாகரன் வடித்த ஆரம்பக் கல்வியின் வாசிப்பு, எழுத்து திறன், இடை நிலை அடைவ மட்டத்தில் செலுத்தும் செல்வாக்கு என்ற கட்டுரைகள் மலர்ந்துள்ளது.

இவ்வித்தியாலயம் என்ற நூல் பின்வரும் மகுட வாசகத்தில் விரிந்து இதழ் பரப்பியுள்ளது. வித்தியாலயங் களின் முழு விபரங்கள் ஆதியோடு அந்தமாக தகவல்களை பெற வேண்டி 9 உபபிரிவின் கீழ் விடயங்களை பெற்றுள்ளார்.

இந்த வலயத்திலுள்ள நான்கு கோட்டத்திலுள்ள 70 பாடசாலைகளின் விபரங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம் பாடசாலைகள் 51 இந்து கத்தோலிக்க பாடசாலைகள் 19 இவ்வலயத்தில் இயங்கி வருகின்றது.

புத்தளம் வலய தமிழ் பிரிவின் தனி வழி பயணத்தின் சில பணிகளையும் செம்மைப் படுத்தப்பட் டுள்ளது.

அதுமட்டுமன்றி இவ்வலயத்தில் கோட்ட மட்டத்தில் வெளியிடப்பட்ட 19 கையேடுகளும்இ சஞ்சிகைகளின் விபரங்களும் செம்மைப்படுத்தப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வலயத்தில் இது வரையும் வலய பணிப்பாளராக 15 ஆளுமைகள் பணிப்பாளர் என்ற நிலையில் பணியாற்றியுள்ளார்.

புத்தளம் வலய தமிழ் பிரிவு பிரதி பணிப்பாளர்களாக இது வரையும் 52 தமிழ் பேசும் பிரதி பணிப்பாளர்கள் தமது கடமையை நேர்த்தியான முறையில் முன்னெடுத்துள்ளார்கள். இவ்வலயத்தில் முதல் தமிழ் பிரதி பணிப்பாளர்களாக 1996 இலிருந்து முதல் பிரதி பணிப்பாளராக டி.எஸ்.சிவரத்தினம் தொடக்கம் தற்போது உள்ள ஆ.கமலேந்திரன் வரை இதுவரை 16 பேரா கடமையற்றியுள்ளனர். மற்றும் 36 பிரதி கல்விப் பணிப்பாளர்கள் சீரான முறையில் தமது கடமையுணர்வை மேற்கொண்டுள்ளனர்

இந்த நூலின் முதுசமாக முகிழ்ந்து நிற்பது பழைய நிகழ்வுகளை ஒரு கனம் நினைத்து பார்க்க வைக்கின்றதால் அதன் தற்பரியத்தை ஏற்படுத்தியுள்ளது. சுவடிகாப்பகம் என்ற தொனியில் கடந்த கால நினைவு நிகழ்காலத்தில் இரை மிட்டுவதாக அமைந்துள்ளது. 1913.02.17 திகதி புளிச்சாக்குளம் வித்தியாலயத்தின் முதல் பதிவை ஆவணப்படுத்தியுள்ளனர். அதேபோல கல்வி அமைச்சராக இருந்த உ.ற.ற கன்னங்கரவினால் கற்பிட்டி அல் அக்ஸ பாடசாலையின் முதலாவது சம்பளத்திரட்டு புத்தக பதிவை 1946.11.22 எழுதியுள்ளமை கடந்த கால நினைவு சுடரை எம் கண் முன் நிறுத்தியுள்ளார். காலச்சுவடுகளாக காலத்தின் நினைவின் பொக்கிசமாக என்றும் நினைவு கொள்ளும் ஆவணமாக 60 சுவடிகள் தரப்பட்டுள்ளது. இது ஆசிரியரின் தேடலில் கிடைத்த வெற்றி முகத்தோற்றத்தின் ஏறு நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் வலயமானது புத்தளம் வடக்கு, புத்ளம் தெற்கு, கற்பிட்டி கோட்டம், பள்ளம கோட்டம், ஆனமடு கோட்டம் என்ற பிரிவுகளுக்குட்பட்டது. இது பரந்து விரிந்து நிலத் தொடர்பை கொண்டிருக்கின்றது. இந்த நான்கிலும் 205 பாடசாலைகள் இப்பிராந்திய மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிகளும் கலங்கரை விளக்காக பிரகாசித்து துலங்கிஅருகு, போல் வேறூான்றி நிற்கின்றது.

மற்றும் இவ்வாலயத்தில் இந்த வித்தியாலயங்கள் அமைந்துள்ள இடம் தூரம் பாடசாலைகள் பால் நிலை மாணவர் விபரங்கள் என்பன விபரமாக விரிவு படுத்தபட்டுள்ளது.

இந்த புத்தக மலரில் கண்ணைக் கவரும் வண்ணப்படங்கள் பார்வைக்கு இதமாக இருப்பது ஆசிரியர் குழத்தின் குழு நிலைவுப்பாடங்கள் மணம் விரிந்துள்ளது. மொத்தத்தில் நூலாசிறியர் இஸம் ஏ.சன்ஹிர் ஆய்வு முயற்சியின் வெற்றியென்றே கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழன் 2021/05/03

## 12. தென்றல் 50வது இதழ் ஒரு கண்ணோட்டம்

மட்டக்களப்பின் கலை இலக்கியத்தின் தடம் என்பது விதந்து போற்றக்கூடியது. அது பல்வேறு வடிவங்களில் அகலக்கால் பதித்துள்ளதென்பது யதார்த்த உண்மை யாகும்.

இப்பிராந்தியத்திலிருந்து பல இலக்கிய இதழ்கள் காலத்துக் காலம் மலர்ந்து விரிந்து மணம் வீசி மனதைக் கொள்ளை கொண்டுள்ளன. பல எழுத்தாளர்களை வெளியுலகம் காண வைத்துள்ளது. இலைமறை காயாக மறைந்து ஆக்கப்பணி புரிந்த இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து அவர்களின் படைப்புக்களுக்கு முன்னுரிமையும் முக்கியத்துவம் வழங்கியதுடன் சிறந்த புனைவு இலக்கியப்படைப்புக்கு இசைவாக்கம் கொடுத்துள்ளன இப்பிராந்தியத்தில் தோன்றிய பல சஞ்சிகைகள் இதழ்கள், என்பன காலத்தின் கண்ணாடிகளாக இன்று விதைந்து போற்றப்படுகின்ற தென்பது மிகையல்லயென்றே கூறலாம்.

இதை பின்புலமாகக்கொண்டு இம்மாவட்டத்திலிருந்து பல இலக்கிய வடிவங்கள் வெளிவந்துள்ளன. இவ்வகைக்கிணங்க அவைகளில் மலர், தாரகை, வயல, பாரதி, சுமைதாங்கி, தொண்டன், போது, பாடுமீன் படி, மகுடம், செங்கதிர், தென்றல் போன்ற இன்னோரன்ன பல சஞ்சிகள் மலர்ந்து ஆக்கப்பணி புரிந்துள்ளன தென்பது மனம் கொள்ளத்தக்கது (ஜீவந்து ஆவணி 134 இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் 08) இவ்வகையுடன் மலர்ந்த தென்றல் சஞ்சிகை 2008.04.06 ஆரம்பமானது. இப்போது வளர்ந்து இதழ் விரித்து 49வது இதழை நிறைவு செய்து இன்றுடன் 50வது இதழில் கால் எடுத்து வைத்துள்ளதுடன் தனது இலக்கிய பணியை தொடர்ந்து தொடர இருக்கின்ற செய்தியானது இலக்கிய உள்ளங்களுக்கு புது தென்பையும் ஓர் உத்வேக உணர்வையும் தைரியத்தையும் கொடுத்துள்ள தென்றே கூறலாம்.

50வது இதழ் என்பதை நினைத்து பார்க்கையில் அது வந்தபாதை அதற்கு ஏற்பட்ட தடங்கள், எடுத்துக் கொண்ட ஆக்கப்பணி இடையூறுகள், இன்னல்ளை என்பவர்களை நாம் பார்க்க வேண்டும். அவைகளையெல்லாம் தாண்டி தான் எடுத்துக்கொண்ட கொள்கையிலிருந்து பிசகாமல் தொடர்ந்து வெளிவருகின்றதென்றால், தென்றலாசிரியரின் ஆளுமையும், அர்ப்பணிப்பையும் அதை மூலவிசையாக இருந்து வழிநடத்தி செல்கின்றபாங்கு ஆசிரியர் கே.கிருபாகரனுக்கு சபாஷ் என்றே கூறலாம்.

தென்றல் இதழானது தனியே மட்டுநகர் மட்டும் வீசாமல் பரந்துபட்ட வாசகர்களை உள்வாங்கி தெம்மாங்கு இசையுடன் சகலரையும் சலசலத்து அரவணைத்து செல்லும் மிதமான சுகானுபவத்தை விதைத்து தழுவிச் செல்லும் காற்றாக தடவிச் சென்றுள்ளது. தென்றலின் 50வது இதழின் அலகு, இலட்சணம், வனப்பு, அதன் யதார்த்த தன்மை என்பன இதன் வெற்றிக்கு கோடிட்டு காட்டுகின்றது என்றே கூறலாம். அது மிகைப்படித்தப்படாத கூற்றாகும்.

இவ்விதழில் கடந்த காலத்தில் வெளியான 49 மலர்களில் தென்றலின் தேடலின் ஆட்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைகளாக தேர்ந்ததெடுத்தவர்களின் விபரத் தொகுப்பின் ஆவணப்பதிவை இம்மலர் அலங்கரித்துள்ளமை இதன் சிறப்பை எடுத்தேம்பிள்ளது என்பதை பார்க்கின்றோம். உணர்கின்றோம். இத்தென்றலில் 17 ஆளுமைகளின் ஆவணக் குறிப்புக்கள் பதிவேற்றப் படுத்தபட்டுள்ள என்பது இதன் சிறப்புக்கு கட்டியம் கூறிநிற்கின்றது.

இதில் நம் நாட்டில் இனம் காணப்பட்ட இலக்கிய ஆளுமைகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஊடகவியாளர்கள் நாடக நடிகர்கள், ஓவியர்கள் இன்னோரன்ன துறைகளில் பிரகாசித்து அகலக்கால் பதித்தவர்களின் குறிப்புக்கள், தகவல்கள் பிரசுரித்தமை யானது இவ்விதழின் வளர்ச்சிக்கு வடிகால் அமைத்துள்ளமை என்றே கூறலாம்.

இந்த 50வது இதழில் பிரசுரமான கலை உள்ளங்களின் திறமைகள் ஆற்றல்கள், சிறப்புக்கள், பெருமைகள் என்பன பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆளுமைகளில் 14 பேர் மட்டக்களப்பு பிராந்திய கலைஞர்களும், வெளி மாவட்டத்திலிருந்து பாலவைரவநாதன், வெலிகமரிம்ஸா முகம்மது, உடப்பூர் வீரசொக்கன் போன்றவர்களது பதிவுகள் ஆவணப்படுத் தப்பட்டுள்ளன.

இவ்விதழில் ஆற்றலுள்ள அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் என்பவர்களை ஆய்வு செய்ய உள்ள இளம் ஆய்வாளர்களுக்கு இம்மலர் உசாத்துணை நூலாக அமையும் என்பதை வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரகேசரி 2021/12/26

# 13. எல்லை.கே.ராம் ஜி உலகநாதனின் "கொழுந்தம்மா"

## (சிறுகதை தொகுதியின் - விமர்சன நோக்கு)

மத்திய மலையகத்தை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஒரு இனக் குழுமத்தின் அடையாளமே மலையமாகும். இந்தியத் தமிழர்கள் பிற நாட்டவர்களின் உழைப்பாளும், நாடு பிடிக்கப்பட்ட பிரிட்டிஷ் அந்நியர்களால் உருவமைக்கப்பட்ட வளம் நிறந்த பிராந்தியமே இந்த மலையகமாகும்.

தென்னிந்திய தமிழ் இனக்குழுமத்தால் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தி கடும் உழைப்பால் உருவமைக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்கள். இத்தோட்டங்களே எமது முதுசம் நயம்பட உழைத்தாலும் அந்நியர்களாகவே கடைக்கண்பார்வை விழுந்தது. இதனால் இவர்களை தோட்டக்காட்டான், கள்ளத்தோணி, மலைநாட்டான் என எள்ளி நகையாடியவர்களும் உண்டு.

பாடுபட்டு பங்கப்பட்டு உழைப்பே தமது மூலதனமாகக் கொண்டு தோட்டங்களை உருவாக்கிய இவ்வினக் குழுமத்தினர்களை முதலாளி என வழி நடத்திய ஆங்கிலயர் இவர்களை உழைக்கவும், பிழைக்க வந்தர்கள் என சொல்லி அராஜமாகவும் அடவாடித்தனமாக எவ்வித அடிப்படை வசதிகளைக் கூட முன் நிறுத்தாமல் அடிமைப்பட்ட மக்களாகவே பார்த்தனர். ஆண்டனர். ஆட்சி புரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மக்களுக்கு வீட்டு வசதிகளையோ, வாழ்வாதார முன்னேற்றத்திற்கோ வழிகோராமல் தமது முதலீடும், இலாபங்களுமே தமது நோக்காகவும் இலக்காகவும் இலட்சணமாகவும் கொண்ட முதலாளிகளான வெள்ளயர்களே இந்த மக்களின் எதிரிகளாக பார்த்தனர். அத்துடன் ஆண்டான்-அடிமை என்ற வேட்கையுடன் செயற்பாடுகள் முனைப்பு பெறும்போது பேதங்களும், வக்கிர உணர்வுகளும் வேக்காடுகள் மேலளும் என்பது யதார்த்த உண்மையாகும்.

இது எம்நாடு. எமக்கே சொந்தமானது. உரித்துரியது. பரம்பரைக்குடிகள் என்ற இருமாப்புடன் காய்களை நகர்த்தியவர்கள், தோட்டங்களை உருவாக்கியவர்களை பார்த்து கூலிக்காரர்கள் எனவும், வந்தேறு குடிகளெனவும், உழைப்புக்காகக் கொண்டு வந்த கள்ளத்தோணிகளெனவும் ஆங்கிலர்கள் கூலிக்காக கொண்டு வரப்பட்ட பச்சோந்தியென இந்த நாட்டை வளம் செழித்து பாடுபட்ட மக்களை அந்நியர்களாக ஆண்டான் அடிமைகளாக ஏதலிகளாகக் பார்ப்பது என்ன நியாயமென கேட்க தோன்றுகிறது.

எம் மலையக தமிழ் இனக்குழுமம் பல எதிர்ப்புக் களை எதிர்வினைகளை சாத்வீக முறைமைகளின் நீட்சியுடன் போராடிய சகிப்புத்தையும், பல்வேறு அடக்கு முறைகளைகளைத் தாண்டி சாதுரியமான அசைவாக்கங் களுக்கு இசைந்து தமது அடையாள பரம்பரை நிலை நிறுத்தி கொண்டார்கள். இவைகளுக்கெல்லாம் ஒருபடி சென்று தொழில் சங்க ரீதியாகவும், அரசியல் மட்டத்திலும் கலாசார பினபுலத்திலும் கோடிட்டுக் காட்டுமளவுக்கு மலையக இலக்கியமானது முன்னுதாரணமாக முகிழ்ந்து நிற்கின்றதென்பது மனம் கொள்ளத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விலக்கியங்களே காலத்தின் கண்ணாடியாக மக்களின் வாழ்வுப் பின்புலத்தையும், இம்மக்களின் வரலாற்று தொன்மங்களையும் உயிர்த்தெழ வைத்துள்ளது. இவைகள் சாகாவரம் பெற்ற மலையகம் என்று சொல்லப்படும் எழுத்துருவாக்கங்களே என்றால் அது மிகைப்படுத்தப்படாத கூற்றாகும்.

இந்த தூங்கிக் கிடந்த மலையக மக்களை துயர் எழுப்பியவர்களின் முன்னுதாரணமானவர் கோ.நடேசய்யரே. அன்னார் 1930 எழுதியும் எழுத்துருவாக்கங்களை மலையக மக்களை விழிப்புணர்வடையச் செய்தன. அன்று கட்டமைக்கப்பட்ட எழுத்துக்கள் 1960 ஆம் ஆண்டு வேகத்துடன் புடம் போடப்பட்டு ஒரு எழுத்துருவாக்க பரிமாணத்துக்கு கால் கோளிடப்படுபது. இரத்தம்பாச்சம்பட்டது என்றே கூறலாம்.

இதனை அடியேற்றி கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற புனைவு இலக்கியங்களும் மற்றும் நாடகங்கள், வரலாறுகள், இதழ்கள், ஆய்வுகள் நடைச்சித்திரங்கள் விமர்சனங்கள் போன்ற எண்ணிரந்த படைப்புக்கள் இந்த மக்களின் வாழ்வுப் பண்புக் கூறுகளை வடிவமைத்து ஆவணப்படுத்தப்பட்டது என்றே கூறலாம்.

இதை உள்ளீடாகக் கொண்டு மலையகத்தின் எழுத்துருவாக்க முன்னோடியான கோ.நடேசய்யரின் "இராமசாமி சேர்வையின் சரித்திரம்" என்ற சிறுகதைதான் மலையக வரலாற்றின் முதல் சிறுகதையாக வியந்து போற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் 18 சிறுகதைகள் 104 பக்கங்களுடன் விருந்து படைத்துள்ளன. இச்சிறுகதைகள் மலையக மக்களின் துன்பதுயரங்களையும் வாழ்வாதாரத்தையும் கொண்டு பகைப்புலனான அவை வீரியம் பெற்று நிற்கின்றன.

ஈழத்தின் தமிழ் இலக்கிய பரப்பில் சிறுகதைகளில் மூலம் மலையக மாந்தவர்களின் பரப்புரைகளை வெளியுலகுக்குத் தந்த பெருமை மலையக சிறுகதையாளர்களுக்குரியதும் அங்கே தொழில் நிமிர்ந்தும் வாழ்ந்தவர்களும் அம்மக்களின் துன்பக் கேணியை வெளியுலகுக்குத் தந்துள்ளார்கள் என்பதையும் மறக்க முடியாத உண்மையாகும்.

இவர்களுக்கு முன்னோடியாக நாடறிந்த கவிஞராக பக்தி எழுத்தாளனாக நிறுகதை புனைவு ஆசிரியராக பன்முக ஆற்றல் கொண்ட எல்ல கோவிஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதனின் கொழுந்தம்மா சிறுகதை தொகுதி முளைக்கொட்டியுள்ளது.

இத்தொகுப்பில் கொழுந்தம்மா தொடங்கி வாக்கு மூலங்கள் வரையும் சிறுகதைகள் மலர்விரித்துள்ளன.

ஆசிரியர் தமது உரையில்:- ஒரே ஒரு உலகத்தில் ஒரே ஒருநாடு. அந்த நாட்டில் தேயிலை தேசம் ஒன்று உண்டு. அதில் பிறந்து வளர்ந்தவன்தான் இந்தக்கதைகளை சொல்பவன். தான்கேட்டுப் பார்த்த சம்பவங்களையும் உங்களுக்கு சொல்லுகின்றான். 1979 முதல் 2018 வரையுள்ள காலத்தில் அவனது தேசத்தில் நடந்த சம்பவங்களை அவன் கூறுகின்றான். அவை உங்களை அந்த காலத்திற்கு கூட்டிச் செல்லும். அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நீங்கள் பிறக்கும் முன்னரே நடந்தவையாகவும் இருக்கக்கூடும். அவை நம்பமுடியாமல் இருக்கலாம். உங்கள் பெற்றோரைக் கேட்டால் அவைகளின் உண்மைத்தன்மை தெரியும் என்று முடிக்கின்றார்.

இவரின் கதையில் இழையோடும் மலையக மண்ணின் கதைமாந்தர்களின் சம்பவ நிகழ்வுகள் தரிசனமாகின்றன. மலையக மண்ணுக்கே உரித்தான பேச்சு, மொழி, பாமரத்தன்மை, அர்த்தபுஷ்டியான அன்னியோன்யம், காதல் உணர்ச்சி என்பன ஒரு வெட்டு முகப்பார்வை துல்லியமாக துலங்கி நிற்கின்றது. ஆசிரியரின் மொழி ஆளுமையுடன் அவரின் புலக்காட்சியும் இம்மக்களின் துன்பியல் வாழ்க்கை கோலத்தை அக்கதையுடன் படித்து நுகரும்போது நெகிழ்வுணர்வை அப்பட்டமாக காணமுடிகின்றது.

அக்கதைகளின் மூலவேராக தமிழ் உணர்வு முனைப்பு பெறுவதுடன் செம்மொழி வளமும் துளிவிடுகின்றன. மண்வாசனையும் கிராமிய பேச்சு வழக்கும் விரவிக் கிடப்பது இக்கதைகளின் ஏறுமுகத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றன என்றே சொல்லலாம்.

ராம்ஜியின் இச்சிறுகதை புனைவுகள் காத்திரமானது. கதைசொல்லும் பாணியும் தனித்துவமானது. தோட்ட கங்காணிகளின் இருக்கமான கட்டமைப்புக்கள் அதிலிருந்து விடுதலை பெறத்துடிக்கும் தனிமனித உணர்ச்சி பின்புலத்தை கோடிட்டு காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதையை நுகரும்போது கொழுந்தம்மா தொடங்கி முடிவுவரையும் கதையோட்டம்

இந்த கதைகள் தோட்டமக்களின் வாழ்வு பின்னணிகள் பல்வேறு பிரச்சினைகள் பந்தபாசம் என்பன தரிசனமாயுள்ளன. இவற்றினோடு பேச்சுமொழி அச்சொட்டாக ததும்பி தவழ்கின்றது. என்ன புள்ள எதுக்கு கூப்பிட்டா என்று கொழுந்தம்மாவின் முகத்தை தொட்டு நிமிர்த்தியவன் திகைத்தான். அவனது கண்களிலிருந்து கண்ணீர் வடித்தது. ‘ஏன்புள்ள அழுவுற நீ…நீ அழுவாத நாளைக்கு அந்திக்கு கோச்சி போகணுமில்ல எதுக்கும் கவலபடாத புள்ள…’ கதையாசிரியர் தானும் ஒரு விவசாயி என்பதால் உழைப்பாளரின் நெளிவுசுழிவுகளை இக்கதைப்புனைவு கட்டியம் கூறி நிற்கின்றது.

## பணத்தின் அறிமுகம் தொடக்கம் வேட்டை என்ற கதை வரையும்

சாமானியன் காரியாலயங்களில் சென்று தனது தேவையை முடித்துக்கொள்ள பணத்தின் தேவை ஊசலாடுகின்றது. ஒரு எழுத்தரளனின் எண்ணப்பாங்குகள் கச்சிதப்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் இக்கதை புனைவுகள் கூட எண்ண, ஏக்கங்கள், ஆசை கோட்டைகள், சந்தர்ப்ப சூழ்நிலைகளில் சிதறி சின்னாபின்னமாக தவிடுபொடியாகி விடுவதை கதையாசிரியர் உணர்வு பூர்வமாக தனது எண்ணப்பாங்கை நிதர்சனமாக ஓடவிட்டுள்ளார். இக்கதைகள் யதார்த்த கோலத்துடன் புனையாட்சி எடுத்தேம்பப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவெள்ளிகள் தொடக்கம் வாக்கு மூலங்கள் என்ற 6 கதைகள்

மலையக தொழிலாளர் சமூகம் இருள் சூழ்ந்த லயங்களில் தமது வாழ்வை மாய்த்துக் கொண்டவர்கள். அவர்கள் விழிப்புணர்வுகளுக்கு தொழில் சங்கங்களே விடிவுகளை பெற்றுக்கொடுத்துள்ளன. வீராசாமி போன்ற பாத்திரபடைப்புக்கள் தோட்டங்கள் தோறும் துடிப்புள்ள இளம் தலைமுறைகள் தோன்றி மலையகத்துக்கு புத்துணர்வையும் எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளனர். இக்கதைகள் நல்ல செய்தியை எடுத்துரைக்கின்றன.

இதனால் பல தொழில் சங்கங்கள் தோன்றி தலையமைத்து பண்புகளின் ஆளுமை செந்நெறிக்கு வித்துட்டுள்ளன. ஆசிரியனின் வெற்றிகசு இவ்வகையான சிருடிகள் விழிப்புணர்வையும் மறுமலர்ச்சியும் தோன்றிட வழி வகுத்துள்ளார் என்றே கூறலாம்.

மற்றும் பல கதைகள் சீதனம் கொடுமை, காதல்மயக்கம், சாதிபேதம், வேதம் கொடுமை, மதுவுக்கு அடிமைத்தனம் என்ற பல கதைகள் மூலம் சமூக வளர்ச்சிக்கும் எதிர்கால முன்னேற்றத்தை நோக்கமாகவும் புனைகள் கச்சிதமாக எழுந்து நிற்கின்றன.

ராம்ஜி என்ற பெயர் தனியே மலையத்தை. விட்டு இவரின் படைப்புக்கள் வெளியுலாக வாசகர்களையும் யதார்த்த பார்வைக்கு இட்டுச் சென்றுள்ளது. இவரின் படைப்புக்கள் ஈழத்தின் முன்னணி பத்திரிகைகளிலும் பிரபலமிக்க சஞ்சிகைகளிலும் வாகை சூடியுள்ளது. மலையகம் தந்த சிறந்த ஆளுமையும் நேர்த்தியான பார்வை கொண்ட ராம்ஜி உலகநாதன் பெயர் சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர் வரிசையில் துளிர்விட்டு பிரகாசிக்கும் நிற்கும் என்பது ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதி 2021/03/15 ஆணி

# 14. உடப்பூர் வீரசொக்கனின் இரு தொகுதிகளின் விமர்சன நோக்கு

புத்தளம் மாவட்டம் தமிழர்களின் இருப்பைஇஅதன் சிறப்பை பெருமையை கட்டியம் கூறும் பிரதேசமாகும். இப்பிராந்தியத்தில் எண்ணிருந்து தமிழ் கிராமங்கள் அன்று தமது இருப்பை அடையாளப்படுத்திநின்றன. ஆனால் இன்று இக்கிராமங்ககள் தன் தனித்துவத்தை இழந்து தனது அடையாளத்தை இழந்து அக - புற காரணங்களினால் இருந்து இடமின்றி மறந்தும் மறைத்தும் போகின்ற இக்காலச்சூழலில் இதற்கெல்லாம் தலைநிமிர்து தன் தனித்தை இழக்காமல் தம் கலைஇ கலாசாரம்இ பண்பாடு விழுமியங்களைப் பாதுகாப்பது மட்டுமன்றி ஏனைய இடர்கள் பல நேரிடும் போதெல்லாம் தாக்குபிடித்து தமது தனித்துவத்தை இழக்காமல் பிசகாமல் பாதுகாத்து வரும் இடமென்றால் அது உடப்பு என்றே கூறலாம்.

இந்த உடப்பு மண்ணுக்கு சிறப்புக்கள் பல உண்டு. பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாத்து வருகின்றன. அத்துடன் தமது முன்னோர் காத்த மரபுகளை சடங்குகளை நேசிப்பவர்களாக இருந்தாலும் கூட மறுபுறம் கலைஇ இலக்கியஇ நாட்டாரியல்இ நாடக துறையிலும் இம்மண்ணுக்கு தனித்துவமான வகிபாகம் அமைந்துள்ள தென்றால் மிகையாகாது.

இம்மண்ணின் பெருமைகளில் ஒன்றே கவிவளம் என்றே கூறலாம். இம்மண்ணில் வரகவிகளும் எழுந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிபுனையும் ஆற்றலாளரும் கவிதையாளர்களையும் கொண்ட பூமி இது. இவ்வாறு வாழ்ந்த இக்கவிஞர்களின் படைப்புக்கள் குடத்தில் இட்ட ஒலியாக துளிர் விட்டாலும் அது வெளியுலகம் காணாத சங்கதியாக இருந்து வருகின்றது - வந்திருக்கிறது அது பெருங்குறையே. இக்கவி புனையாளர்களின் கவிதைகள் ஊஞ்சல் பாடலாக. கும்மியாக, எச்சரிக்கைகளாக, அம்பாப் பாடல்களாக துலங்கி நிற்கின்றன. இவைகள் நூல் வடிவாக ஆவணப் படுத்தப்படாமலே அதன் மகிமை சிறப்புக்கள் வெளியுலகம் காணாத சங்கதியாக இருந்து வருகின்றது. இதுவும் பெருங்குறையே. இம்மண்ணில் பிறந்த கவியாளர்களான கதிரவேல் புலவர் பெரியாண்டி அண்ணாவியார் சொக்கலிங்க பூசகர் வரிசையில் பெரி.சோமஸ்கந்தர் கி.ஸ்ரீகந்தராசா போன்றவர்கள் இம்மண்ணில் முகிழ்ந்து நின்று கவிபடைத்த கவியுள்ளங்களாகும். இதை உள்ளீடாக கொண்டு சமகாலத்தில் பலர் கவிதை புனைதலுடன் முன்னோடியாக அகலக்கால் பதித்தவராக காணப்படுபவர்தான் இம்மண்ணின் பெருமைக்குரிய கவிஞர் உடப்பூர் வீரசொக்கன்.

பெரும்பான்மை சூழலில் அமைந்துள்ள உடப்புக் கிராமத்திலிருந்து சுமார் நான்கு சகாப்த காலமாக இளம் வயதில் மரபுக் கவிதைத்துறையில் தன்னை அடையாளப்படுத்திய உடப்பூர் வீரசொக்கன் தனது இலக்கியப் பணியை விரிவுபடுத்தி சிறுகதைஇ கவிதைஇ கட்டுரைஇ நாடகங்கள்இ அறிவிப்புக்களஇ பக்தி எழுத்துஇ விமர்சனம் என பல்பரிமாணத்தில் இலக்கியத் துறையில் கால் பதித்து வருகின்றார்.

இவரின் கவிதைப் புனைகள் ஈழத்தின் முன்னணி பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றில் சுடர்விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாசித்துள்ளன. இவரால் கங்கை நீர் வற்றவில்லை (1990), உப்புக்காத்து(2009), ஆத்தங்கர(2020) என்ற மூன்று தொகுதிகளையும் பாக்கள் தரும் பூக்கள்(2019) என்ற சிறுவர் பாடல்களையும் யாத்து வெளியிட்டுள்ளார். தான் சிருஷ்டித்துள்ள கவிதைக்கு கட்டியம் கூறுவதாக இருப்பது முன்னாள் இராஜாங்க அமைச்சர் A.H.M.அஸ்வரினார் பாராளுமன்றத்தில் தனது கவிதை ஒன்று ஒலித்து ஹண்சாட்டில் பதிவேற்றியமை தனது கவிதைக்கு கிடைத்த அங்கீகாரம் எனவும் நயம்பட உரைக்கின்றார்.

புழமையான மரபுச் சந்தப்படிமங்களில் ஊறிப்போன கவிதை ஊற்றில் தன்னை இனம்காட்டியவரான கவிஞர் வீரசொக்கன் பழையன கழிதலும் புதியன புகுவதும் என்ற சமகால கவிதை ஓட்டத்தில் தன்னை இசைவாக்கம் கொண்டு புதுக்கவிதைக்குள் புகுந்து பல கவிதைகளையும் வடிவமைத்துள்ளார். உடப்பு இளம்தாரகை வட்டம் அனுசரணையுடன் "ஆத்தங்கர" கவிதை தொகுதியும் "பாக்கள் தரும் பூக்கள்" சிறுவர் பாடல் இருதொகுதிகளும் அண்மையில் ஸ்ரீ கிருஷ்ணா ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் 2021.04.21 திகதி அதிபர் திரு.தொண்டமான் தலைமையில் வெளியிடப்பட்டது. பிரதம அதிதியாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் கனகசிவபாத சுந்தரம் கலந்து கொண்டார்.

ஆத்தங்கர கவிதை தொகுதியில் 64 கவிதைகளும் பாக்கள் தரும் பூக்கள் சிறுவர் பாடலில் 40 பாடல்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இருதொகுதிகளும் இரண்டு வண்ண அமைப்புடன் கவிதை முகப்பும் காத்திரமான முறையில் வெளிவந்துள்ளது. ஆத்தங்கர 100 பக்கத்துடனும் சிறுவர் பாடல் 54 பக்க அமைப்புடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துள்ளது. இன்றைய சமகால சூழலில் இலத்திரனியல் விரிவாக்கம் இளைய பரம்பரையினரை படாதபாடு படுத்தும் சூழலில் வாசிப்பு என்பது பின்னடைந்துள்ளது. பெரும்பான்மை சூழலில் இவ்வகையான வெளியீடுகள் வருவது காலத்தின் கட்டாயமாகும். நூலாசிரியர் தன் சொந்த முயற்சியினால் அவ்வகையான வெளியீடுகளை வெளியிட்டுள்ளமை அவரின் இலக்கியத்தின் பால் ஏற்பட்ட ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

வீரசொக்கனின் பன்முக ஆற்றலின் வெளிப்பாடாக இவ்வாண்டில் சிறுவர்பாடல் சிறுகதை தொகுதி உடப்பின் இலக்கிய ஆய்வுபரப்பை முன்னிலைப்படுத்தி இலக்கிய ஆய்வு போன்ற தொகுதிகளை வெளியீட்டுள்ளார். இவரின் ஊடக அனுபவமும் இலக்கியத்தாகமும் பல்பரிமாண ஆளுமைப்பண்பும் இவரின் இசைவாக்கத்துக்கு எடுத்துக் காட்டுவதாக இவ் வெளியீடுகள் வெளிவர இருக்கின்றன. இந்த ஆத்தங்கர தொகுதியில் காத்திரமான கவிதைகள் கருத்தாக்கம் கொண்டதாக இருக்கின்றது. இத்தொகுதியில் பிரசுரமான கவிதைகள் அத்தனையும் முன்னிலைப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் கவியரங்குகளிலும் பாடப்பட்டு பிரசுரிக்கப்பட்டன.

இக்கவிதைகளில் தொனிப்பொருளாக இருப்பது ஆன்மீக உணர்வை எடுத்தேம்புவதுடன் தமிழனின் துன்பில் வாழ்வு பின்புலத்தையும் கொட்டி நிற்பது நிதர்சனமாக வெளிப்பட்டு யதார்த்தத்தை நிதர்சனத்துடன் பார்க்க கூடியதாக இருக்கின்றது.

ஒருவரின் வாழ்வாதாரத்துக்கு மூலவேர் உழைப்பு. உழைப்பை முன்னிலைப்படுத்தி முன்னேறியவர்கள் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்மையில் பிறந்து உழைப்பு மூலம் முன்னேறி உலகமே ஒருவனின் உழைப்பின் முன்னேற்றத்தை திரும்பி பார்க்க வைப்பதென்றால் உழைப்பின் தார்ப்பரியத்தை என்ன வென்று சொல்லுவது. கவிஞரின் பார்வையில் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

" உழைப்பு ஒருபோதும்
தொலைவதில்லை
ஏன்? வீத்தலைவன் நெப்போலினும் - ஒரு
விறகு வெட்டும்
உழைப்பாளியே
தோல்வியில் உழன்று சாதனைபுரிந்த
ஆபிகான்லிங்கன் கூட
செருப்பு தைக்கும் தொழிலாளியின்
தனையனே "

ஆம் தாய் பத்துமாதம் சுமந்து பகலிரவாய் கண் விழித்து பாலூட்டி சீராட்டி கண் இமைபோல் காத்து பாதுகாத்து வளர்ப்பவள் அம்மா, அந்த மாதாவின் பாசத்துக்கு ஈடு இணை ஏதுஇ தாயன்பின் ஊற்றை கவிஞர் இவ்வாறு வடித்துத் தந்துள்ளார்.

" மழலையாக மண்ணில் தவழ்ந்த
போது மகிழ்ந்து நின்றாயே...!
கழிவிறக்கம் பூண்டென்னை
கட்டி அணைத்தாயே
கண்ணிமை போல் காத்தென்னை
வளர்த்து வாழ வைத்தாய்
மண்ணில் தவழ விட்டென்னை
மதி மகிழ்ந்து தவத்தாயே "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், கடலைக் கண்டு களித்து இன்பம் பூரித்து ஓடியாடி விளையாடி இன்பம் பூரித்து மகிழ்ந்தோம். அந்த கடலே எமனாக வந்து எம் உயிர்களை கொண்டொழித்தது. சுனாமி என்ற வடிவத்தில். சுனாமி தந்த வேதனைகள், துயரங்களை துன்பியல் நிகழ்வுகளை இவ்வாறு வடித்துள்ளார் "கொடுமை புரிந்த சுனாமி" என்ற தலைப்பில்.

" காலைக் கதிரவன் கண் விழிக்கும்
முன்னே மாயமாக வந்தெம்மை
மரணத்தை தந்த மா கடலே
நித்திரை கொண்டொழிக்கும் முன்னே
நிம்மதியை கலைத்த கடலே
நிர்கதியாக்கியதும் நீயே
அப்போது நீ விளைத்த
கொடுமைகள் சோதனைகள் நினைத்தாலே
கடலே இப்போதும் உள்ளம் உருகுகின்றதே "

அத்துடன் பாக்கள் தரும் பூக்கள் சிறுவர் பாடலின் தனது கவிதை புலத்தை இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

குழந்தை இலக்கிய ஆற்றுகை இன்று முனைப்பு பெற்று வரும் சமகாலத்தில் உடப்பு பிரதேசத்திலிருந்து உடப்பூர் வீரசொக்கனின் கன்னி முயற்சியாக "பாக்கள் தரும் பூக்கள்" சிறுவர் பாடல் தொகுப்பு இப்பிரதேசத்தின் சிறுவர் இலக்கியத்துறைக்கு திருப்பு முனையாகும்.

இப்பாடல் தொகுப்புக்கு உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் சி.சு.நேமி தனது அணிந் துறையில் சிறுயோர் கல்வியில் முன்னிலைப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்படுவது நிறங்கள், காட்சிப்படங்கள், ஆடல், பாடல் விளையாட்டு என்பன சிறுவர் மனதில் மகிழ்ச்சி, உற்சாகம், விழிப்புணர்வு என்பன முக்கியமாகும். சிறுவர்களுக்கு கற்பிப்பதை விட பாடல்களையே சிறுவர்கள் இரசிப்பார்கள் என்பதுவே உளவியல் உண்மை ஆகும். இந்த வகையில் கலாபூஷணம் உடப்பூர் வீரசொக்கன் அவர்களால் எழுதப்பட்ட சிறுவர் பாடல் தொகுப்பாண பாக்கள் தரும் பூக்கள் ஒரு முன்னுதாரணமாகும்.

இத்தொகுப்பில் கலைமகளே போற்றி தொடக்கம் தாயல்லவாஇ அரவணைக்கும் தாய்இ மெழுகாக உருகியவள்இ அன்னைக்கு ஓர் கடிதம்இ கணம் பண்ணுஇ ஒன்று தொடக்கம் பத்தை அறிவோம் என்ற 39 பாடல் அலங்கரித்துள்ளன. ஆசிரியர் தன் தாய் நாடாக இலங்கை திருநாடு என்ற பாடல் அவ்வாறு அமைகின்றது.

சிங்களமும் செந்தமிழும் நாம் பேசும்மொழி இந்நாடு

மதங்கள் போற்றும் நாடு – மன
வளங்கள் பூத்த நாடு
பெரியோர் தந்த நாடு – பல
அறிஞர்கள் கண்ட நாடு – பழைய
பாரம்பரியமான நாடு – பல
பண்புகள் தவழ்ந்த நாடு

ஒவ்வொரு நாட்டுக்கும் அந்த நாட்டு அடையாளத்தை பெருமைப்படுத்துவது தேசிய கொடிகள். அந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் தேசிய கொடியை கண்ணியப்படுத் துவார்கள். இக்கொடிக்கு மரியாதையும் மதிப்பும் செலுத்துவது ஒவ்வொருவரின் கடமையாகும். எமது தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் தேசிய கொடியானது சிங்கக் கொடியாகும். அக்கொடி பற்றி ஆசிரியர் இவ்வாறு வடித்துள்ளார்.

சிங்கக் கொடி – எம்
நாட்டின் தேசிய கொடி
வீரர்கள் புகழ் படைத்த
வெற்றிக் கொடி சிங்கக் கொடி

இவ்வகையான சிறுவர் பாடல்களுடன் பாக்கள் தரும் பூக்கள் தொதி முகிழ்ந்து நிற்கின்றது.

வடக்கு, கிழக்கு, மலையகம் போன்ற பகுதிகளிலிருந்து விடுபட்டு பெரும்பான்மை சூழலில் வாழும் உடப்பு போன்ற பிரதேசங்களில் இவ்வகையான புனைவு இலக்கியங்கள் வெளிவருவது ஆவணப்படுத்துவது காலத்தில் கட்டாய தேவையாகும். இப்பணியில் ஈடுபாட்டுடன் உழைத்துவரும் உடப்பூர் வீரசொக்கனின் பணி சிறப்புக்குரியது.

அலைமுகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரை பற்றி இவர்கள்....

உடப்பூரைப் பற்றியும் உடப்பு திரௌபதையம்மன் ஆலயம் பற்றியம் ஆய்வினை மேற்கொள்பவர்கள் எவரும் வீரசொக்கனின் ஆய்வுமுயற்சிகளைப் புறந்தள்ளிவிட்டு ஆய்வு செய்ய முடியாது என்ற நிலையினை அவர் உருவாக்கியுள்ளார். உடப்பு என்றதும் ஒரு புறம் அங்கு அமைந்துள்ள திரௌபதை அம்மன் கோயிலும், தீ மதிப்புப் பெருவிழாவும், மறுபுறம் எழுத்தாளர் வீரசொக்கனும் உடன் ஞாபகத்துக்கு வருவனவாகும்.

**பேராசிரியர் க.அருணாசலம் பேராதனை**

எழுத்துத் துறையில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் வீரசொக்கன் எழுத்தாக்கத்தையும் உறுபயன் பெறுமானங்களையும் (UTILITY VALUE) ஒன்றிணைந்து நிற்றல், அவரது சமூக நோக்கை நீள்பரவல் கொள்ளச் செய்கின்றது. சமூக நோக்கு எழுத்தால் நிறைவிக்கப்படுகின்றது. வீரசொக்கனின் எழுத்துக்களில் உட்பொதிந்துள்ள "ஆற்றுப்படுத்தல்" விசை, வாசிப்புச் செயற்பாட்டைத் தொடர்ந்து தேடல் நிலைக்கு நகர்த்தும் வலுவேற்றத்தை வழங்கிய நிலையில் உள்ளது.

**பேராசிரியர் முனைவர் சபா.ஜெயராசா**
**M.A (ED) PH.D.DLIT**

உடப்பூர் வீரசொக்கன் ஆவணப்படுத்தும் செய்தியாளராக தனது தொழிசார் ஆனுபவம் திறமையும் கொண்ட ஒரு சிரேஷ்ட ஊடாக வியலாளராக உடப்பில் தொடங்கிய தனது பணி புத்தளம் மாவட்டம் என விரிவடைந்து ஈழத்தை ஒட்டிய பார்வையாக தனது பணியை விரிவுபடுத்தியுள்ளார். உடப்பூரின் வரலாறு, பண்பாடு, கலாசரம், மரபுகள், விழாக்கள் ஆளுமைகளையும் விளக்கும் பல்வேறு நூல்களையும் ஆக்கங்களையும் தனது எழுத்துப் வாயிலாக அவர் தந்துள்ளார்.

**பேராசிரியர் கலாநிதி வ.சிவலோகதாசன் MBA**

தனக்கு இறைவன் தந்த எழுத்தாற்றலை, தான் பிறந்த மண்ணுக்காக அதன் மகிழ்மைகளை மகோன்னதச் சிறப்புக்களை ஊரறியச் செய்யும் இந்த உடப்பு மகனை மண்ணின் மைந்தன் இந்த மைந்தனின் எழுத்தாற்றலையும் ஆர்வத்தையும் நான் அறிவேன். சமுதாய பிரக்ஞையுள்ள நல்லதோர் எழுத்தாளன்.

**அலஹாஜ் ஏ.எச.எம்.அஸ்வர் M.P**
**முன்னாள் இராஜாங்க அமைச்சர்**

இன்றைய காலகட்டத்தில் ஒரு நாடு என்பதுடன் அதன் ஒன்றிணைந்த கூறுகளான பிரதேசங்கள், அங்கு வாழுகின்ற மக்கள், அவர் தம் சமூக பொருளாதார பண்பாட்டு நிலை என்பனவற்றை ஆய்வுசெய்து அவர் தம் தனித்துவத்தை இனம்காணும் வழிமுறைகள் பற்றி சிந்திப்பதும் அவ்வவ் பிரதேச சிந்தனையாளர்கள் கடமையாகும். இப்பின்னணியில் உடப்பூர் வீரசொக்கன் சமூகப் பின்னணியை செய்து வருகின்றார்.

**பேராசிரியர் சோ.சந்திர சேகரன் M.A**

9 786249 868007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org